அரசு மைய அச்சகம், சென்னை–600 001.

# பள்ளிக் கல்வித்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2022-2023

### மானியக் கோரிக்கை எண் 43

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2022

# பள்ளிக் கல்வித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2022-23

## பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | தொடக்கக் கல்வி , உயர்நிலை, மேல்நிலைக் கல்வி மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி | 6 |
| 3 | மெட்ரிகுலேசன் பள்ளிகள் | 51 |
| 4 | மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் | 59 |
| 5 | அரசுத் தேர்வுகள் இயக்ககம் | 81 |
| 6 | பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி | 97 |
| 7 | பொது நூலக இயக்ககம் | 103 |
| 8 | ஆசிரியர் தேர்வு வாரியம் | 129 |
| 9 | தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் | 136 |
| 10 | நிதி ஒதுக்கீடு | 148 |

# 1. முன்னுரை

**எண்என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும்**
**கண்என்ப வாழும் உயிர்க்கு.**

**- குறள் 392**

**எண்ணும் எழுத்தும் எனப்படும் அறிவுக் கண்களைப் பெற்றவர்களே, உயிர் வாழ்வோர் எனக் கருதப்படுவார்கள்.**

**- கலைஞர் உரை**

அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான எளிதில் கிடைக்கவல்ல உள்ளடக்கிய கல்வியை அனைத்துப் பள்ளிகளிலும் தரமான உட்கட்டமைப்பு வசதியுடன் வழங்கி முழுமையான வளர்ச்சியை அடையச் செய்வதே தமிழக அரசின் முதன்மை இலக்காகும். பள்ளிக் கல்வியைப் பொருத்தமட்டில் பள்ளி செல்லும் வயதுள்ள குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்த்தல், அவ்வாறு சேர்க்கப்பட்ட குழந்தைகளை இடைநிற்றல் ஏதுமின்றி இடைநிலைக் கல்வி வரை முழுமையாகத் தொடரச் செய்தல். குழந்தைகளின் வயதுக்கேற்ற கற்றல் அடைவுகளை மேம்படுத்துதல், ஆசிரியர்களுக்குச் சிறந்த பயனுள்ள பயிற்சிகளை அளித்து அவர்களின் திறன்களை வளர்த்தல் ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டு தமிழ்நாடு அரசு 2022-23 ஆம் ஆண்டு நிதிநிலை

அறிக்கையில் பள்ளிக் கல்வித் துறைக்கு ரூ.36895.89 கோடியை ஒதுக்கியுள்ளது.

கோவிட் பெருந்தொற்று போன்ற அசாதாரண சூழ்நிலைகளில் பள்ளிகள் திறக்கப்படாத காலத்தில் மாணவர்களின் கற்றல் இழப்புகளை ஈடுசெய்வதற்கு அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. கற்றல் இழப்புகளை ஈடுசெய்யும் வகையில் தன்னார்வலர்களைக் கொண்டு பள்ளி வேலை நேரத்திற்குப் பிறகு மாணவர்களின் குடியிருப்புகளுக்கு அருகிலேயே கற்றல் மையங்களை ஏற்படுத்தி புதிய திட்டமாக இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. கடந்த மூன்று மாதங்களில் தமிழக அரசால் நடைமுறைபடுத்தப்பட்டு வரும் இல்லம் தேடிக் கல்வித் திட்டம் முன்னோடித் திட்டமாக உள்ளதுடன் மற்ற மாநிலங்களுக்கும் முன் உதாரணமாக உள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக பெற்றோர்கள் கல்விக்காக மேற்கொள்ளும் தேவையற்ற செலவுகளைக் கணிசமாகக் குறைத்துள்ளது.

புதிய தொழில்நுட்பங்கள் புகுத்தப்பட்டதன் வாயிலாக ஆசிரியர்களின் நிர்வாகப்பணிச்சுமைக் குறைக்கப்பட்டு, கற்றல், கற்பித்தல் பணித்திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது. நூற்றுக்கு மேற்பட்ட பதிவேடுகளைக் கணினி மயமாக்குதல்

வாயிலாக ஆசிரியர்களின் கல்வி சாராப் பணிகள் குறைக்கப்பட்டு எளிமையாக்கப்பட்டு உள்ளது. புதிய பள்ளி தொடங்குவதற்கான அனுமதி, தடையின்மைச் சான்று வழங்குதல், பள்ளி தரம் உயர்த்துதல் போன்ற நடைமுறைகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. மேலும் கல்வி இணைச் சான்று, புலப்பெயர்வுச் சான்று போன்றவற்றை மாணவர்கள் பள்ளிக் கல்வித் துறையில் பல்வேறு அலுவலகங்களுக்குச் சென்றுபெறும் நிலையினை மாற்றி, தற்பொழுது இ-சேவை மையங்களிலேயே பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டு உள்ளது. எதிர்வரும் காலங்களில் இதைப்போன்று பள்ளிக்கல்வித் துறையின் அனைத்து சேவைகளையும் இணைய வழியாகவே பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இளைஞர்கள் தங்களுடைய எதிர்காலத் திட்டமிடல் சார்ந்து பல்வேறு இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர். இதனை நன்கு உணர்ந்த அரசு, 9-லிருந்து 12-ஆம் வகுப்பு மாணவர்கள் பயன்பெறும் வகையில் உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சிகளை நடத்த நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. 2022 மார்ச் 01ஆம் நாள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்ட "நான் முதல்வன்" என்னும் திட்டத்தின் வாயிலாக சிறப்பு வழிகாட்டி நூல் மற்றும் இணையதளம்

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர்களுக்குப் போதுமான பயிற்சிகள் பள்ளியளவில் வழங்கப்பட்டதுடன், அரசுப் பள்ளி முன்னாள் மாணவர்களைக் கொண்டு வழிகாட்டும் நிகழ்ச்சியும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

பள்ளிகளும் சமூகமும் இணைந்து செயல்படுவதில் அரசு நம்பிக்கை கொண்டுள்ளது. இதனை உறுதிப்படுத்தும் விதமாகப் பள்ளி மேலாண்மைக் குழு அனைத்து அரசுப் பள்ளிகளிலும் தொடங்கி பள்ளிக்கான திட்டங்களை தீட்டும் விதமாக பெற்றோர் ஆசிரியர் கூட்டங்கள் சமீபத்தில் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் மாநிலம் முழுவதும் சுமார் 23 இலட்சம் பெற்றோர்கள் பங்கேற்று பள்ளி மேலாண்மைக் குழு, பள்ளி வளர்ச்சி சார்ந்து விவாதித்தனர். இதன் வாயிலாக அரசுப் பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழு புத்துணர்வு பெற்றுள்ளது.

பள்ளிக் கல்வித் துறையின் கீழ் அமைந்துள்ள பல்வேறு இயக்ககங்கள் மூலம் மேலே குறிப்பிட்ட பல்வேறு நோக்கங்களை நிறைவேற்றும் பணிகளை அரசு மேற்கொண்டு வருகின்றது. தொடக்கக் கல்வி இயக்ககம், பள்ளிக் கல்வி ஆணையரகம், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம் ஆகியவை பள்ளிக் கல்வித் துறையின் கீழ் அமைந்துள்ள இயக்ககங்கள் ஆகும். மேலும்,

இத்துறை ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி (சமக்ர சிக்க்ஷா), மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), அரசு தேர்வுகள் இயக்ககம், பொது நூலக இயக்ககம், ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் ஆகியவையும் இத்துறையின்கீழ் செயல்பட்டு வரும் இயக்ககங்கள் ஆகும்.

# 2. தொடக்கக் கல்வி, உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வி

## 2.1. முன்னுரை

தனிமனிதனின் ஒவ்வொரு சாதனைகளுக்கும் பள்ளிக் கல்வியே அடித்தளமாக விளங்குவதால், மாணாக்கரின் உயர் கல்வி மற்றும் வேலை வாய்ப்பை மேம்படுத்துவதில் இது முக்கிய பங்காற்றுகிறது. 21ஆம் நூற்றாண்டில் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் மாணவர்களை சூழலுக்கேற்ற வகையில் சிந்திக்கும் ஆற்றல் பெற்றவர்களாக உருவாக்குவது பள்ளிகளின் கடமை ஆகும். மாணவர்களுக்குப் பாட அறிவோடு வாழ்வியல் திறன்களையும் அளித்து அன்றாட வாழ்வில் சவால்களை எதிர்கொள்ளும் தகுதி உள்ளவர்களாக உருவாக்குவதில் நமது கல்வி அமைப்பு கவனம் செலுத்துகிறது.

## 2.2. நோக்கங்கள்

- அனைத்து பள்ளி வயதுக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல் மற்றும் தக்க வைத்தல்
- 100 சதவீதம் பள்ளி வசதி ஏற்படுத்துதல்

- உள்ளடக்கிய கல்விச் சூழலை உருவாக்குதல்
- அனைத்து குழந்தைகளின் பாதுகாப்பு, உடல்நலம் மற்றும் மனநலத்தினை உறுதி செய்தல்
- தரமான கல்வியை வழங்குதல் மற்றும் கற்றல் விளைவுகளை மேம்படுத்துதல்
- கல்வி மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகளில் மாணவர்கள் பங்கேற்பதற்கான வாய்ப்புகளை உருவாக்குதல்
- அரசுப் பள்ளி மாணவர்கள் நாட்டின் தலைசிறந்த கல்வி நிலையங்கள் / நிறுவனங்களில் சேர்ந்து பயில வாய்ப்புகளை உருவாக்குதல்
- அனைத்துப் பள்ளிகளிலும் தரமான உட்கட்டமைப்பு வசதி, தூய்மையான வளாகம் மற்றும் பராமரிப்பினை உறுதி செய்தல்
- குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009-ஐ நடைமுறைப்படுத்துதல்

## 2.3. பள்ளி வசதி

அனைத்துக் குழந்தைகளுக்கும் பள்ளி வசதிகளை எளிதில் கிடைக்கச் செய்வதே கல்வியின் அடிப்படை நோக்கமாகும். புதிதாகத் தொடக்கப் பள்ளிகள் தொடங்குதல், பள்ளிகளைத் தரம் உயர்த்துதல், புதிய பள்ளிகள் தொடங்க இயலாத இடங்களில் போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் வசதிகளை ஏற்படுத்துதல், மக்கள் நெருக்கம் குறைவாக உள்ள பகுதிகளில் உண்டு உறைவிடப் பள்ளிகள் மற்றும் விடுதிகள் தொடங்குதல் மூலம் 100 விழுக்காடு பள்ளி வசதி வழங்கப்பட்டு வருகிறது. நிலைத்த மேம்பாட்டை அடைவதற்கான இலக்குகளில் இதுவும் ஒன்று.

மேற்காண் குறிக்கோள்களை அடைவதற்கு, தமிழ்நாட்டின் அனைத்துப் பள்ளிகளும் புவியியல் தகவல் முறைமை தொகுப்பின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இத்தகவல் முறைமையைப் பயன்படுத்தி, கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட விதிகளின்படி புதிய பள்ளிகள் ஏற்படுத்தப்படும். போக்குவரத்து வசதி, சாலை வசதி, பள்ளி வசதி இல்லாத குடியிருப்புப் பகுதிகளைச் சார்ந்த குழந்தைகள் பள்ளிக்கு எளிதாகச் சென்று வர போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் வசதி வழங்கப்படுகிறது. இவ்வசதி 2021-22-ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் 25,346

மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தொலைதூர, மலை / வனப்பகுதிகளில் பள்ளி வசதி இல்லாத குடியிருப்புப் பகுதியில் வசிக்கும் குழந்தைகளுக்கு 9 மாவட்டங்களில் 14 உண்டு உறைவிடப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டு இப்பள்ளிகளில் 1,200 மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர். மேலும், 14 மாவட்டங்களில் கல்வியில் பின்தங்கிய 44 ஒன்றியங்களில் பெண் குழந்தைகளுக்கான 61 கஸ்தூரிபாய் காந்தி பள்ளிகள் மற்றும் 44 மாணவியர் விடுதிகள் ஏற்படுத்தப்பட்டு உள்ளது. இப்பள்ளிகளில் 9,560 மாணவிகள் பயின்று வருகின்றனர். இச்செயல்பாட்டிற்காக 2021-22-ஆம் ஆண்டில் ரூ.2283.382 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### *2.3.1. பள்ளி செல்லாக் குழந்தைகளுக்கான செயல்பாடுகள்*

கோவிட்-19 பெருந்தொற்று மற்றும் பிற காரணங்களுக்காக 6-19 வயதுக்குட்பட்ட (ஒன்றிலிருந்து பன்னிரெண்டாம் வகுப்பு வரை) பள்ளியிலிருந்து வெளியேறிய மற்றும் பிற இடங்களுக்கு இடம்பெயர்ந்த குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, பள்ளிக் கல்வித் துறையின் கல்வி மேலாண்மைத் தகவல் முறைமை இணையதளத்துடன் (EMIS PORTAL) ஒருங்கிணைக்கப்பட்ட புதிய கைபேசி செயலி மூலம் 10.8.2021 முதல் 15.10.2021 வரை அனைத்துக்

குடியிருப்புகளிலும் வீடு வாரியான ஆய்வு நடத்தப்பட்டது. இதுவரை 1,88,487 குழந்தைகள் அடையாளம் காணப்பட்டு, அவர்களின் வயது / தகுதிக்கு ஏற்ற வகுப்புகளில் (1 முதல் 12-ம் வரை) சேர்க்கப்பட்டு உள்ளனர்.

கணக்கெடுப்பின்போது 100% பெண் குழந்தைகள்/ சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகள் / மூன்றாம் பாலினத்தவர்/ கோவிட்-19 காரணமாக பெற்றோரை இழந்தவர்கள்/ இடம் பெயர்ந்த குழந்தைகள் அனைவரும் அடையாளம் காணப்பட்ட உடனேயே அருகிலுள்ள பள்ளிகளில் முறையாக, வயதுக்கு ஏற்ற வகுப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும் இக்குழந்தைகளுக்கு, நலத்திட்டப் பொருள்களான பாடப் புத்தகங்கள், சீருடைகள், புத்தகப்பை, காலணிகள், நோட்டுப் புத்தகங்கள் போன்றவை வழங்கப்பட்டு முறையாக பள்ளிகளில் அனுமதிக்கப்படுகின்றனர். இந்தக் குழந்தைகள் மேல்நிலைப் பள்ளிக் கல்வியை முடிக்கும் வரை சிறப்பு கவனம் செலுத்தி கண்காணிக்கப்படுகிறார்கள். இச்செயல்பாட்டிற்கென 2021-22ஆம் ஆண்டில் ரூ.869.63 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## 2.4. உள்ளடக்கிய கல்வி

பள்ளிக் கல்வித் துறையில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் குறிப்பாக சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு முழுமையான வளர்ச்சி மற்றும் இருப்பிடத்திற்கு அருகாமையில் பள்ளிச் சூழலை ஏற்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. 1,36,570 சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகள் அரசுப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். மருத்துவ முகாம்கள், உதவி உபகரணங்கள், உதவித் தொகை, வீட்டுப் படி, போக்குவரத்து மற்றும் பாதுகாவலர் வசதி போன்றவற்றின் வாயிலாக இவர்கள் பயனடைகின்றனர். சுகாதாரத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சமூக நலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் போன்ற துறைகளுடன் ஒருங்கிணைந்து தமிழ்நாட்டில் உள்ளடக்கிய கல்வியின் இலக்கினை அடைவதற்கு பின்வரும் குறிக்கோள்கள் வரையறுக்கப்பட்டுள்ளன:

- சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து ஆயத்த பயிற்சிகள் வழங்குதல்
- குழந்தைப் பிறப்பிலிருந்து 18 வயது வரை சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கென

நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்குதல்

- ஒற்றைச் சாளர முறையிலான தரவு மேலாண்மையை நிறுவுதல்
- உதவி உபகரணங்கள், துணைக் கருவிகள் வழங்குதல்
- மாற்றுத் திறனாளிகளுக்குத் தடையில்லாப் பள்ளிக் கட்டமைப்புகளை உறுதி செய்தல்
- பொருத்தமான கற்றல்-கற்பித்தல் உபகரணங்கள், வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வசதிகள் மற்றும் சிகிச்சைகள் வழங்குதல்
- சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளை பிற குழந்தைகளுடன் ஒருங்கிணைத்து கற்றல் செயல்பாட்டில் ஈடுபடுத்த ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்
- சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு சிறப்பு ஆசிரியர்கள் மூலம் உரிய கவனம் செலுத்துதல்

ஆரம்ப நிலையில் கண்டறிதல், விரைவான சேர்க்கைக்கு உதவி புரியும்" என்கின்ற தெளிவான அணுகுமுறை சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு நிரந்தரமான பயன்பாடுகளை அளிக்கும் என்ற உறுதியான நோக்கத்தை மாநில அரசு வேறெங்குமில்லாத முன் முயற்சியாகவும் முதல் செயல்பாடாகவும் வழங்கியுள்ளது.

இதன் தொடர்ச்சியாக சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளைக் கண்டறிவதற்காக நடத்தப்பட்ட முகாமில் கலந்துகொண்ட 3 இலட்சம் மாணவர்களில் 1.5 இலட்சம் மாணவர்கள் சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளாக கண்டறியப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து மேற்கண்ட குழந்தைகளின் பெற்றோர்களுக்கு போதிய விழிப்புணர்வு வழங்கப்பட்டது. மாநில அளவில் மேற்கண்ட பெற்றோர்களுக்கு குழந்தைகளின் வளர்ச்சி நிலையில் எட்டப்படும் படிநிலைகள் மற்றும் வேறுபாடு சார்ந்து போதிய விளக்கங்கள் வழங்கப்பட்டது. மாநிலத்தின் முதல் முயற்சியாக 5300 பெற்றோர்களும் 2200 சிறப்பு ஆசிரியர்களும் விழிப்புணர்வு வழங்குவதற்காக உயர் தொழில்நுட்ப ஆய்வகத்திற்கு அழைக்கப்பட்டனர்.

மாற்றுத் திறன் மாணவர்களினுடைய கற்றல் முன்னேற்றம் மற்றும் அவர்களுக்குத் தேவையான அரசினுடைய உதவி மற்றும் திட்டங்களைத் தெரிந்துகொள்வதற்காக கைப்பேசி செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக 2401 சிறப்பு ஆசிரியர்கள், சிகிச்சை அளிப்போர் மற்றும் தலைமை ஆசிரியர்களுக்கு இச்செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

IALEP (Individualsed Academic Therapeutic Learning Enhancement Programme) என்னும் தனிப்பட்ட மாணவனுக்கான கற்றல் மற்றும் சிகிச்சை முன்னேற்ற திட்டம் வாயிலாக வீட்டு வழிக் கல்வி பயிலும் 7786 மாற்றுத்திறன் மாணவர்களுக்காக ஒருவருக்கு ரூ.10 ஆயிரம் வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வீட்டுச் சூழலுக்கேற்ற தேவையான மாற்றம், இயன்முறை மருத்துவ சிகிச்சை, ஆலோசகர் உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் தேவையான கருவிகள் மற்றும் கற்றல் கற்பித்தல் உபகரணங்களும் வழங்கப்படும்.

பள்ளிக் கல்வித் துறையில் மாவட்ட அளவில் உள்ள அனைத்து அலுவலர்கள் மற்றும் சிறப்பு பயிற்றுநர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர்களுக்கு கற்றல் குறைபாடு (SLD), ஆட்டிசம், கட்டாயக்கல்வி உரிமைச் சட்டம் (RTE),

மாற்றுத் திறனாளிகள் உரிமைச் சட்டம் (RPWD) மற்றும் குறைதீர் கற்றல் சார்ந்து பயிற்சி வழங்கப்பட்டது. மாநிலத்தில் முதன்முறையாக அரசு பள்ளிகளில் பணியாற்றும் சிறப்புப் பயிற்றுநர்களுக்கு இந்திய சைகை மொழிச் சங்கம் வாயிலாக சான்றிதழுடன் கூடிய சைகை மொழி பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

உள்ளடக்கிய கல்வியின் கீழ் உதவி உபகரணங்கள் உட்பட அனைத்துச் செயல்பாடுகளையும் மேற்கொள்ள 2021-22 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.9312.13 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மாற்றுத் திறன் மாணவர்களுக்காகச் செலவிடப்பட்டுள்ளது.

### 2.5. தரமான கல்வி

தமிழ்நாடு அரசு அனைத்து நிலைகளிலும் அனைவருக்கும் கல்வி என்ற நிலையினை அடைந்துள்ளது. அண்மையில் ஒன்றிய அரசால் வெளியிடப்பட்டுள்ள பள்ளிக் கல்வி தரக் குறியீட்டு அறிக்கையில் தமிழ்நாடு 2வது இடத்தைப் பெற்று உள்ளது. பள்ளி வசதி ஏற்படுத்துதல், சமத்துவம், உட்கட்டமைப்பு, நிருவாகம் ஆகிய இனங்களில் தமிழ்நாடு சிறப்பாக செயல்பட்டு நாட்டிலேயே சிறந்த மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. எனினும், கற்றல் அடைவுகளில்

இந்தியாவின் 37 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 23வது இடத்தையே பெற்றுள்ளது. பள்ளிக் கல்வியின் தரத்தை குறிப்பாக தொடக்கக் கல்வியின் தரத்தை உடனடியாக மேம்படுத்துவதன் அவசியத்தை இந்நிலை உணர்த்துகிறது. தரமான தொடக்க மற்றும் இடைநிலைக் கல்வியே ஆக்கப்பூர்வமான கற்றல் அடைவுகளை உருவாக்கும் நிலைத்த மேம்பாட்டு இலக்கை அடைவதற்கு இது இன்றியமையாத தேவையாகிறது.

### *2.5.1 இல்லம் தேடிக் கல்வித் திட்டம்*

பெருந்தொற்றுக் காலத்திற்குப் பின் கற்றல் இழப்பை ஈடுசெய்வதற்காகக் கொண்டுவரப்பட்ட ஒரு சிறப்புத் திட்டம் **இல்லம் தேடிக் கல்வி** ஆகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அக்டோபர் 2021இல் இத்திட்டம் தொடங்கப்பட்டது. 1 முதல் 8 வகுப்புகள் வரை பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கற்றல் இடைவெளி, கற்றல் இழப்புகளை ஈடுசெய்வது மற்றும் இடைநின்ற மாணவர்களை மீண்டும் பள்ளிகளில் சேர்ப்பது என்ற உயரிய நோக்கங்களுடன் 1.81 இலட்சம் தன்னார்வலர்களால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தை சீரிய முறையில் வழிநடத்துவதற்காக மாநிலம், மாவட்டம் மற்றும் பள்ளி ஆகிய மூன்று அடுக்கு

நிலைகளில் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளது. அனைத்து மாணவர்களுக்கும் இத்திட்டம் சென்றடைவதை உறுதி செய்யும் பொருட்டு, தன்னார்வலர்கள் தாமே முன் வந்து இதற்கு ஆதரவு அளிக்குமாறு அரசால் அழைப்பு விடுக்கப்பட்டது. இணையவழியில் 6.72 இலட்சம் தன்னார்வலர்கள் இந்நாள் வரையில் கல்வி கற்பிக்க பதிவு செய்துள்ளனர். இத்திட்டம் முதற்கட்டமாக நவம்பர் 26, 2021 அன்று 12 மாவட்டங்களில் தொடங்கப்பட்டது. அம்மாவட்டங்களில் கிடைக்கப்பெற்ற நல்ல வரவேற்பின் அடிப்படையில் மீதமுள்ள 26 மாவட்டங்களிலும் ஜனவரி 1, 2022 முதல் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் தினமும் 1½ மணிநேரம் மாலை 5.00 மணி முதல் 6.30 மணி வரை மாணவர்களுக்கு கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் நடைபெற்று வருகிறது. இல்லம் தேடிக் கல்வி மையங்களில் மாணவர்கள் மகிழ்வுடன் வந்து கற்றலின் இனிமையை உணர்கிறார்கள். அரசால் அளிக்கப்பட்ட மாபெரும் விழிப்புணர்வால் பெண்கள் முதல்முறையாக தங்கள் குடியிருப்பு பகுதியிலுள்ள மாணவர்களுக்கு கல்வியில் உதவுவதற்கு முன்வந்துள்ளார்கள். தன்னார்வலர்களுக்கு அவர்களின் சமூகக் கடமை, சமூகப் பங்களிப்பு மற்றும் மாணவர்களைக் கையாளும் திறன் போன்றவற்றில் பயிற்சி

அளிக்கப்படுகிறது. இல்லம் தேடிக் கல்வி மையங்கள் தன்னார்வலர்களுக்கு தோழமையுடன் சமூகக் கடமையாற்றும் வாய்ப்பு அளிக்கக் கூடிய இடமாகத் திகழ்கின்றன.

இத்திட்டத்தின் சிறம்பு அம்சம் இல்லம் தேடிக் கல்வி மையங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கற்றல் அணுகுமுறையே ஆகும். இங்கு சூழல்சார்ந்த மற்றும் குழந்தைகள் எளிமையாகப் பங்கேற்கும் வகையில் அடிப்படை எண்ணறிவிற்கும் எழுத்தறிவிற்கும் முக்கியத்துவம் தரப்படுகிறது. செயல்வழிக் கற்றல் முறை பின்பற்றப்படுகிறது. உதாரணமாக பாடல்கள், நடனம், பொம்மலாட்டம், கதை சொல்லுதல் போன்றவை மூலம் கற்பிக்கப்படுகிறது. இதற்கான பாடப்பொருள், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மூலம் வல்லுநர்களால் உருவாக்கப்படுகிறது. ஒவ்வொரு தன்னார்வலர்களுக்கும் எளிதாகக் கற்பிப்பதற்கு ஏதுவாக பயிற்சி கையேடு, கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. தன்னார்வலர்கள், மாணவர்களின் கற்றல் நிலைகளைத் தெரிந்துகொள்வதற்காக '**கைப்பேசி செயலி**' மூலம் மதிப்பீடு மேற்கொள்ளும் வசதி உருவாக்கப்பட்டுள்ளது.

தன்னார்வலர்கள், 1 முதல் 5 ஆம் வகுப்பு மற்றும் 6 முதல் 8ஆம் வகுப்பு வரை என இரு பிரிவுகளாக மாணவர்களுக்கு கடந்த நான்கு மாதங்களாகக் கற்பிப்பதில் ஏற்பட்டுள்ள அனுபவத்தின் அடிப்படையில், அவர்கள் தாங்களாகவே புதுமையாக கற்பித்தல் கற்றல் பொருள்களை உருவாக்கியுள்ளார்கள். இவை மாணவர்களின் கற்றல் வேகம் மற்றும் சூழலுக்குப் பொருத்தமானதாகவும், அவர்கள் ஆழமான கற்றலில் ஈடுபடவும் உதவுகின்றன. தன்னார்வலர்கள், மாணவர்களின் கற்றலில் துணை நிற்பதுடன், மாணவர்கள் சுயமாக இயங்குவதற்கும், அவர்கள் அனுபவங்கள் மூலமாக கருத்துக்கள், நிகழ்வுகள், சூழ்நிலைகளைப் புரிந்துகொள்வதற்கும் ஊக்குவிக்கின்றார்கள்.

தன்னார்வலர்களுடன் 'டெலிகிராம் செயலி' மூலம் வாராந்திர உரையாடல், தனித்திறன் கொண்டாட்டம், மாதந்தோறும் புத்தாக்கப் பயிற்சி, TLM கண்காட்சிகள், தன்னார்வலர்கள் சந்திப்பு போன்ற பல்வேறு செயல் கூறுகள் இத்திட்டத்திற்கு மேலும் வலுவூட்டுகிறது. தினமும் 30 இலட்சம் மாணவர்கள் இல்லம் தேடிக் கல்வி மையங்களுக்கு வருகை புரிகிறார்கள். சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பு, தன்னார்வலர்கள் மாணவர்களுடன் வைத்திருக்கும் நல்லுறவு, திறந்த மனதுடன் அவர்களை

மையங்களுக்கு வரவேற்பது முதலியன மாணவர்கள் இல்லம் தேடிக் கல்வி மையங்களில் கற்றுக்கொள்வதற்கு அடிப்படையாக அமைகிறது.

இத்திட்டம் பெற்றோர்கள், சமூக உறுப்பினர்கள் மற்றும் ஆசிரியர்களை உள்ளடக்கிய பள்ளி மேலாண்மைக் குழுக்களுடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. இக்குழுவினர் தன்னார்வலர்களுக்கு நல்ல ஒத்துழைப்பு அளிக்கிறார்கள். மாணவர்களிடம் கல்வி மற்றும் முழுமையான வளர்ச்சியை அடையச் செய்வதே பொதுவான குறிக்கோளாகும். பெருந்தொற்று காலத்தில் இல்லம் தேடிக் கல்வித் திட்டம், மாணவர்களிடையே மேம்படுத்தப்பட்ட அர்த்தமுள்ள கற்றலை உருவாக்கியதோடு பெண்கள் தங்கள் நேரத்தைப் பயனுள்ள வகையில் பங்களிக்கவும் வழிவகை செய்துள்ளது. மேலும் இத்திட்டம் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் கல்வியின் தர முன்னேற்றதிற்கு அனைவருடன் இணைந்து பங்காற்றவும் வழிவகையினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. 2021-22 ஆம் ஆண்டில் இல்லம் தேடிக்கல்வி திட்டத்திற்காக ரூ.97 கோடி செலவிடப்பட்டுள்ளது.

### *2.5.2. எண்ணும் எழுத்தும் இயக்கம்*

எதிர்வரும் 2025ஆம் ஆண்டிற்குள் 1 முதல் 3ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்துக் குழந்தைகளும் வாசித்தல், எழுதுதல் மற்றும் அடிப்படை எண்ணறிவுத் திறன்களைப் பெறுவதை உறுதி செய்வதே இவ்வியக்கத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

ஆசிரியர்களுக்கென தலைமைப் பண்பு பயிற்சி, கையேடு, மாணாக்கரின் நிலைக்கேற்ற கற்றல் உபகரணங்கள் வழங்குதல் இவ்வியக்கத்தின் முதன்மைச் செயல்பாடாகும். ஒவ்வொரு குழந்தையின் அடைவுத் திறனும் தனித்தனியே கண்காணிக்கப்படும். 2021-22ஆம் ஆண்டில் எண்ணும் எழுத்தும் இயக்கத்திற்கென ரூ.66.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *2.5.3. கற்றல் மேம்பாட்டுக்கான செயல்பாடுகள்*

கற்றல் செயல்பாடுகளில் ஏற்பட்ட இடைவெளியைக் குறைக்க அனைத்து மாணவர்களுக்கும் இணைப்பு கட்டகப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. 1 முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் பயிற்சித் தாள்களுடன் கூடிய பாடவாரியான பயிற்சிப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளது. பயிற்சித் தாளில் இடம்பெற்றுள்ள

விரைவு துலங்கல் குறியீடுகள் (QR Code) வாயிலாக மின்னணு சாதனங்களின் உதவியுடன் கூடுதல் பாடப்பொருள்களைக் காணொலிப் படங்களாகப் பார்க்கவும் மதிப்பீட்டு வினாக்களைக் கொண்டு பயிற்சி பெறவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இச்செயல்பாடுகளுக்கென 2021-22ஆம் ஆண்டில் ரூ.34.78 கோடி செலவிடப்பட்டுள்ளது.

### *2.5.4. வினாடி வினா போட்டி*

வினாடி வினா போட்டிகள் நடத்துவதன் உயரிய நோக்கம், மாணவர்கள் பாடப் புத்தகங்களைத் தாண்டி தங்களது பொது அறிவை வளர்த்துக் கொள்ளவும், தாங்கள் கற்றதை அன்றாட வாழ்வியல் நிகழ்வுகளோடு தொடர்புபடுத்திக் கொள்ளவும் ஆகும்.

2021-22ஆம் கல்வியாண்டில் வினாடி வினா போட்டியானது இணையதள வழியாக (Online) அனைத்து 6,177 அரசு உயர்/ மேல்நிலை வகுப்பு மாணவர்களுக்காக நடத்தப்பட்டது. ஒவ்வொரு வகுப்பிலும் சிறந்த 10 மாணவர்கள் மாவட்ட வாரியாக தெரிவு செய்யப்பட்டு அவர்களை ஊக்கப்படுத்தவும், மேலும் கற்றலின்மீது ஆர்வத்தைத் தூண்டும் விதமாகவும் சான்றிதழ் மற்றும் கேடயம் பரிசாக வழங்கப்பட்டுள்ளது. இதற்காக மொத்தம் ரூ.30.885 இலட்சம் நிதி செலவிடப்பட்டுள்ளது.

இம்மாணவர்களில் இருந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் 100 மாணவர்களுக்கு அரசே கட்டணம் செலுத்தி தேசிய திறனறித் தேர்வில் பங்கேற்க ஊக்குவிக்கிறது.

### *2.5.5 கல்விசார் குறியீடுகள் மற்றும் நிலைத்த மேம்பாட்டு இலக்குகள்*

கல்விசார் குறியீடுகள் பள்ளிகள் ஆசிரியர்கள் மற்றும், மாணாக்கர் தொடர்பான குறியீடுகளை ஒப்பிடுவதற்கு உதவும் புள்ளி விவரங்கள் ஆகும் பொருத்தமான கல்விசார் . குறியீடுகளைக் கொண்டு கற்றல் செயல்பாடுகளின் விளைவுகளை மதிப்பிட இயலும். கல்விசார் குறியீடுகள் மற்றும் நிலைத்த மேம்பாட்டு இலக்குகள் பள்ளிக் கல்வியின் நிலையையும் இலக்குகளுக்கு ஏற்ப திட்டங்களில் செய்யப்பட வேண்டிய மாற்றங்களையும் இனங்காண உதவுகிறது. சில கல்விசார் குறியீடுகளின் வரையறைகள் பின்வருமாறு:

#### *2.5.5.1. மொத்த மாணவர் சேர்க்கை விகிதம்*

தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை வகுப்புகளில் வயதுவரம்பு ஏதுமின்றி சேர்க்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கைக்கும் மக்கள் தொகையில் அதே நிலையில் ஒத்த வயதுடைய குழந்தைகளின் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதம் ஆகும்.

$$\text{மொத்த மாணவர் சேர்க்கை விகிதம்} = \frac{\text{சேர்க்கப்பட்ட குழந்தைகள்}}{\text{மக்கள் தொகையில் ஒத்த வயதுடைய குழந்தைகள்}} \times 100$$

தொடக்க மற்றும் நடுநிலை வகுப்புகளில் மாணவர் சேர்க்கை மாநிலத்தில் முழுமை நிலையை அடைந்துள்ளது. மொத்த மாணவர் சேர்க்கை விகிதம் தொடக்க மற்றும் நடுநிலை வகுப்புகளில் 100க்கு மேலும் உயர்நிலை வகுப்புகளில் 94.20 ஆகவும், மேல்நிலை வகுப்புகளில் 78.60 ஆகவும் உள்ளது.

*2.5.5.2. நிகர மாணவர் சேர்க்கை விகிதம்*

6 முதல் 17 வயதுக்குட்பட்ட 1 முதல் 12ஆம் வகுப்பில் சேர்க்கப்பட்டு பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கும் மக்கள் தொகையில் அதே வயதிற்குட்பட்ட மாணவர்களின் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதமாகும். தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலையில் நிகர மாணவர் சேர்க்கை விகிதமானது முறையே 99.90, 99.40, 78.40 மற்றும் 65.76 ஆக உள்ளது.

*2.5.5.3. தக்கவைத்தல் விகிதம்*

தக்கவைத்தல் விகிதம் என்பது தற்போது 5, 8, 10ஆம் வகுப்பு மாணவர் சேர்க்கை எண்ணிக்கைக்கும் முறையே 4, 7, 9 ஆண்டுகளுக்கு முன்னர் ஒன்றாம் வகுப்பில் மாணவர் சேர்க்கை செய்யப்பட்ட எண்ணிக்கைக்கும் இடையே உள்ள

விகிதம் ஆகும். நம் மாநிலத்தில் தக்க வைத்தல் விகிதம் தொடக்க வகுப்புகளில் 99.30 ஆகவும் நடுநிலை வகுப்புகளில் 98.70 ஆகவும், உயர்நிலை வகுப்புகளில் 96.75 ஆகவும் உள்ளது.

*2.5.5.4. இடைநிற்றல் விகிதம்*

மொத்த மாணவர் சேர்க்கைக்கும் ஒரு குறிப்பிட்ட வகுப்பில் அதே ஆண்டில் கல்வியைத் தொடர இயலாத மாணவர்களுக்கும் இடையே உள்ள விகிதம் ஆகும். இடைநிற்றல் விகிதம் தொடக்க கல்வியில் 0.70 ஆகவும், நடுநிலைக் கல்வியில் 1.30 ஆகவும், இடைநிலை கல்வியில் 3.30 ஆகவும் உள்ளது.

*2.5.5.5. மாணவர் ஆசிரியர் விகிதம்*

$$\text{மாணவர் ஆசிரியர் விகிதம்} = \frac{\text{பள்ளியில் குறிப்பிட்ட பிரிவில் மொத்த மாணவர் சேர்க்கை}}{\text{அக்குறிப்பிட்ட பிரிவில் உள்ள மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை}}$$

புதிய ஆசிரியர்கள் உரிய நேரத்தில் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்படுவதால் நாட்டிலேயே மிகக் குறைந்த மாணவர் ஆசிரியர் விகிதம் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. மாணவர் ஆசிரியர் விகிதம் தொடக்க நிலையில்

19 ஆகவும், நடுநிலையில் 20.90 ஆகவும் உயர்நிலையில் 22 ஆகவும், மேல்நிலையில் 30 ஆகவும் உள்ளது.

*2.5.5.6. பாலின சமநிலைக் குறியீடு*

பாலின சமநிலைக் குறியீடு என்பது பள்ளிச் சேர்க்கையில் உள்ள மாணவிகள் எண்ணிக்கைக்கும் மாணவர்கள் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதம் ஆகும்.

$$\text{பாலின சமநிலைக் குறியீடு} = \frac{\text{மொத்த மாணவிகளின் சேர்க்கை}}{\text{மொத்த மாணவர்களின் சேர்க்கை}}$$

பாலின சமநிலைக் குறியீடு உயர்நிலையில் 0.95 ஆகவும் மேல்நிலையில் 1.10 ஆகவும் உள்ளது.

*2.5.5.7. பாலின சமத்துவக் குறியீடு*

பள்ளிச் சேர்க்கையில் பாலின சமத்துவத்தினை அறிய பாலின சமத்துவக் குறியீடு பயன்படுகிறது.

$$\text{பாலின சமத்துவக் குறியீடு} = \frac{\text{குறித்த நிலையில் பெண்களில் சேர்க்கை பங்கு}}{\text{அந்நிலையில் அவ்வயதுடைய பெண்களின் பங்கு}}$$

பாலின சமத்துவக் குறியீடு உயர்நிலையில் 1.01 ஆக உள்ளது.

மாணவர் சேர்க்கை விகிதம், இடைநிற்றல் விகிதம், தேசிய அடைவு ஆய்வு (NAS) முடிவுகள், மாணவர்-ஆசிரியர்

விகிதம் ஆகியவை பள்ளிக் கல்வித் துறையின் நிலைத்த மேம்பாட்டு இலக்கை அடைவதற்கான முக்கியக் காரணிகளாகும்

## 2.6. கல்வி இணைச் செயல்பாடுகள்

### *2.6.1. விளையாட்டு மற்றும் உடல்நலக் கல்வி*

பள்ளி மாணவர்களிடையே விளையாட்டு மனப்பான்மையை வளர்ப்பது மாணவர்களின் உடல் மற்றும் மனநலனுக்கு முக்கியமானதாகும். மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்களைப் பங்கு பெறச் செய்ய பயிற்சியும் ஊக்கமும் அளிக்கப்படுகிறது. விளையாட்டுப் போட்டிகளுக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் காரணமாக, ஒவ்வொரு ஆண்டும் சுமார் ரூ.34 கோடி மதிப்பிலான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் கருவிகள் பெற்று வழங்கப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக அரசுப் பள்ளி மாணவர்களின் திறன்களைக் கண்டறியும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் உடல் திறனாய்வுத் தேர்வு நடத்தப்படுகிறது. மேலும் இவ்வாண்டு ஜூலை மற்றும் ஆகஸ்டு மாதங்களில் மகாபலிபுரத்தில் நடைபெற உள்ள சதுரங்க ஒலிம்பியாட் போட்டியினை அரசுப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் பார்வையிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### *2.6.2. நாட்டு நலப்பணித் திட்டம்*

சுகாதார முகாம்கள், இரத்த தான முகாம்கள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், மரம் நடுதல் போன்ற சமூக சேவைகளில் மாணவர்களை ஈடுபடச் செய்வதன் வாயிலாக ஆளுமைத் திறனை வளர்ப்பதே நாட்டு நலப்பணித் திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாட்டில் உள்ள 1,957 அணிகள் வாயிலாக மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 97,650 மாணவர்கள் நாட்டு நலப்பணித் திட்டத் தன்னார்வலர்களாக செயல்பட்டு வருகின்றனர். நாட்டு நலப்பணித் திட்டத்தின் வழக்கமான செயல்பாடுகளுக்கென ஒவ்வொரு ஆண்டும் ரூ.2.5 கோடியும் சிறப்பு முகாம்கள், நடத்துவதற்கென ரூ.2 கோடியும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

### *2.6.3. சாரண சாரணியர் இயக்கம்*

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சாரண சாரணியர் இயக்கம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. பொது சுகாதாரம், போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல், முதலுதவி, மரம் நடுதல் குறித்த விழிப்புணர்வை அனைவருக்கும் கொண்டு சேர்த்தல் இவ்வியக்கத்தின் முக்கிய செயல்பாடுகளாகும். ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் தலைமையகத்தைப் பராமரிப்பதற்காகவும்

பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்காகவும் ரூ.8 லட்சம் அரசால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்திலிருந்து ரூ.2 கோடி சாரண சாரணியர் இயக்கத்திற்கு வைப்புத் தொகையாக அரசால் வழங்கப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு தமிழ்நாடு முழுவதும் உள்ள சாரண சாரணியர் இயக்கத்தின் சொத்துக்களைப் பராமரிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

### *2.6.4 இளையோர் செஞ்சிலுவைச் சங்கம்*

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இளம் செஞ்சிலுவைச் சங்கம் செயல்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சியர் இளம் செஞ்சிலுவைச் சங்கத்தின் புரவலர் ஆவார். ஆசிரியர்கள் ஆலோசகர்களாகவும் மாணவர்கள் தன்னார்வலர்களாகவும் பயிற்சி பெறுகின்றனர். மாணவர்கள் மனிதாபிமான அடிப்படையில் தொண்டுள்ளத்துடன் செயல்பட இத்திட்டம் உதவுகிறது. இளம் செஞ்சிலுவைச் சங்க தன்னார்வலர்களுக்கு முதலுதவி, பேரிடர் மேலாண்மை, சாலை பாதுகாப்பு, தீ தடுப்புப் பயிற்சி மற்றும் பொது நிகழ்ச்சிகளின்போது பொது மக்களுக்கு உதவி செய்தல் குறித்த பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

*2.7. பள்ளிகளில் மாணவர் பாதுகாப்பு*

மாணவர்களுக்கு பள்ளிகளில் பாதுகாப்பாக கல்வி கற்கும் சூழலை வழங்குவதற்கு பள்ளிக் கல்வித் துறை உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது .

குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும், துன்புறுத்தல்களில் இருந்து பாதுகாக்கவும் மாணவர்கள் பாதுகாப்பு ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அனைத்துப் பள்ளிகளிலும் பாதுகாப்புப் பெட்டியும், பாதுகாப்பு விழிப்புணர்வு பதாகைகளும் ரூ.747.82 இலட்சம் செலவினத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் குறிப்பாக கிராமப்புறப் பகுதியில் இருக்கக் கூடிய மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்குப் பள்ளி மாணவர்களுக்கான கல்வி சார்ந்த தகவல்கள் மற்றும் வழிகாட்டும் செயல்முறைகள் அளிப்பதற்காக 24 மணி நேரமும் செயல்படும் கட்டணமில்லாத் தொலைபேசி உதவி எண் 14417 நடைமுறையில் உள்ளது. இது மாணவர்களுக்கான தொலைபேசி வழி குறைதீர் மையமாக இருக்கிறது. இளம் பருவ மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு, மனரீதியான ஆலோசனை அளிப்பதற்காக 1098 தொலைபேசி உதவி எண்ணும் நடைமுறையில் உள்ளது.

இதற்கென 2021-ஆம் நிதியாண்டில் 2022 ரூ.112 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அனைத்து தரப்பினரிடமும் போக்சோ சட்டம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும் பள்ளிகளில் பாதுகாப்பை மேம்படுத்தவும் கையேடு ஒன்று தயாரித்து வழங்கப்படும். பள்ளி அளவில் மேற்கொள்ளப்பட வேண்டிய சுய மதிப்பீட்டுக் கட்டகம் ஒன்றும் உருவாக்கப்படும். மாணவர்கள் தங்கள் புகார் மற்றும் கருத்துக்களைத் தெரிவிக்க வசதியாக பள்ளி வளாகத்தில் பாதுகாப்புப் பெட்டிகள் வைக்கப்படும். அனைத்துப் பள்ளிகளிலும் பள்ளிச்சிறார்களைப் பாலியல் வன்முறைகளில் இருந்து தடுக்கும் வாரமாக ஆண்டுதோறும் நவம்பர் 15 முதல் 22ஆம் நாள் வரை கடைப்பிடிக்கப்படுகிறது.

### 2.8. உட்கட்டமைப்பு வசதிகள்

கற்றல் கற்பித்தலுக்கு உகந்த சூழலை வழங்குவதற்கும், மாணவர் வருகையை அதிகரிப்பதற்கும் மாணவர்களின் கல்வித்திறனை மேம்படுத்துவதற்கும் பள்ளிகளின் உட்கட்டமைப்பு மேம்பாடு அவசியமாகும். அடுத்த ஐந்து ஆண்டுகளில் அரசுப் பள்ளிகளில் தேவையான உட்கட்டமைப்பு வசதியை ஏற்படுத்த பேராசிரியர்

அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.7,000 கோடி ஒதுக்கிட அரசு அறிவித்துள்ளது.

அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உயர்தொழில்நுட்ப கணினி ஆய்வக வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து தொடக்கப் பள்ளிகளில் திறன் வகுப்பறை ஏற்படுத்தப்பட உள்ளது.

2021-22ஆம் ஆண்டில், புதிய உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள், கூடுதல் வகுப்பறைகள், கணினி அறைகள், நூலகக் கட்டிடங்கள், ஆய்வகங்கள், ஆய்வக உபகரணங்கள், கலை மற்றும் கைத்தொழில் அறைகள், கழிப்பறைகள், குடிநீர் வசதி, கைப்பிடியுடன் கூடிய சாய்தளங்கள் என ரூ.59.63 கோடி செலவில் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 2.9. கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்கள்

தமிழகம் முழுவதும் பரவலாகவும், குறிப்பாக வடதமிழகப் பகுதிகளில் அதிகமான எண்ணிக்கையிலும் மொத்தம் 44 ஒன்றியங்கள் கல்வியில் பின்தங்கியவையாகக் கண்டறியப்பட்டுள்ளன. பெண்கல்வி, பொதுத்தேர்வுகளில் தேர்ச்சி விகிதம் போன்ற கல்வி குறியீடுகளில் இந்த

ஒன்றியங்கள் பன்னெடுங்காலமாகவே பின்தங்கிய நிலையில் உள்ளன. நிலைத்த மேம்பாட்டு இலக்கை அடையும் முயற்சியாக இந்த ஒன்றியங்களில் அதிகக் கவனத்தைக் கல்வித்துறை முன்னெடுத்துள்ளது.

கல்வியில் பின்தங்கியுள்ள ஒன்றியங்களை மற்ற ஒன்றியங்களுக்கு இணையாக குறிப்பிட்ட காலத்திற்குள் கொண்டு வர ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வொன்றியங்களுக்கு கடந்த மார்ச் 2022இல் ரூ.7.47 கோடி செலவில் வாழ்வியல் திறன் கல்வி அளிக்கும் திட்டத்தினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். இவ்வொன்றியங்களில் அதிக எண்ணிக்கையிலான ஆசிரியர் காலிப் பணியிடங்களும் காணப்பட்டன. இப்பணியிடங்களை ஆசிரியர்கள் தானாக முன்வந்து தேர்வு செய்வதை ஊக்குவிப்பதற்காக ஆசிரியர் இடமாற்றக் கொள்கையில் ஒரு ஊக்குவிப்பு வழிமுறை உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு ஆசிரியர் 3 ஆண்டுகளுக்கு ஒரு பணியிடத்தினை தேர்வு செய்தால், பின்னர் கலந்துகொள்ளும் இடமாறுதலில் அவ்வாசிரியருக்கு கலந்தாய்வு மூப்பில் முன்னுரிமை பரிசீலிக்கப்படும்.

## 2.10. மாதிரிப் பள்ளிகள்

கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களை முன்னேற்றும் வகையில், கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களைப் பெற்றுள்ள 10 மாவட்டங்களில் மாதிரிப் பள்ளிகளை அரசு ஏற்படுத்தியுள்ளது. உண்டு உறைவிடப் பள்ளிகளான மேற்கண்ட மாதிரிப் பள்ளிகள் விருப்பமும், திறமையும் உடைய மாணவர்கள் தேசிய அளவில் புகழ் பெற்ற உயர் கல்வி நிறுவனங்களில் சேர்ந்து படிப்பதற்கு துணை புரிகிறது. இம்மாதிரிப் பள்ளிகளில் தரமான கல்வி, பள்ளிக் கல்வித் துறையில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் வெளியிலுள்ள சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு பாடங்கள் நடத்தப்படுகின்றன. மேலும், இப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குத் தேவையான பயிற்சிகள் தலைசிறந்த கல்வி நிறுவனங்களான இந்திய தொழில்நுட்ப கழகம் (IIT) மற்றும் இந்திய அறிவியல் நிறுவனப் (IISc) பேராசிரியர்களைக் கொண்டு நடத்தப்படுகிறது.

## 2.11. கல்வி மேலாண்மை தகவல் முறைமை (EMIS)

பள்ளிக் கல்வித் துறையின் மின்னணு முதுகெலும்பாக விளங்கும் கல்வி மேலாண்மை தகவல் முறைமை தமிழ்நாட்டில் உள்ள அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகளைச் சார்ந்த அனைத்து மாணவர்கள்,

ஆசிரியர்கள் மற்றும் பள்ளிகளின் நிகழ் நிலைத் தகவல்கள் அனைத்தும் மேற்கண்ட இணையதளத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. தரவுகளின் அடிப்படையிலான கொள்கை முடிவுகளை எடுக்க இஃது உதவுகிறது. EMIS புள்ளி விவரங்கள் மாணவர்களின் தகவல்கள், பணியாளர்கள் மற்றும் பள்ளியின் புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மேற்கண்ட தகவல்கள் அனைத்தும் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் தங்களுக்கென்று வழங்கப்பட்டுள்ள பிரத்யேக உள்நுழைவு வாயிலாக உள்ளீடு செய்யப்படுகிறது.

பள்ளியில் பணியாற்றும் ஒவ்வொரு ஆசிரியருக்கும் மாணவர்களின் வருகைப் பதிவை குறிப்பதற்கும் மற்றும் அவர்களின் வருகைப் பதிவை கண்காணிப்பதற்கும் அவ்வாசிரியர்கள் பயிற்சி பெறுவதற்கும் பிரத்யேக உள்நுழைவு வழங்கப்பட்டுள்ளது. ஒன்றியம், கல்வி மாவட்டம், வருவாய் மாவட்டம் மற்றும் மாநில அளவில் உள்ள ஒவ்வொரு நிருவாக அதிகாரிகளுக்கும் தனித்தனி உள்நுழைவு வழங்கப்படுகிறது. இதன் வாயிலாக அவர்கள் முக்கிய உள்ளீடுகள் செய்யவும், தரவுகளைப் பார்க்கவும், கண்காணிப்பு மேற்கொள்ளவும் முடியும். இம்முறையானது, ஆசிரியர்களின் பணிச்சுமைய குறைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் வாயிலாக மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணம், அதன் தொடர்புடைய சேர்க்கை பதிவு சரிபார்த்தல் மற்றும் நிதி ஒத்திசைவுப் பணிகள் EMIS தரவுகள் மூலம் சரிபார்க்கப்படுகிறது. 10 மற்றும் 11, 12 ஆம் வகுப்புகளுக்கான பொதுத் தேர்வுகளை நடத்த பெயர் பட்டியல் தயாரித்தல் என்பது முக்கிய பங்கு வகிக்கிறது. இது EMIS வாயிலாக இணையவழியில் தயாரிக்கப்படுவதோடு அரசு தேர்வுகள் இயக்குநரகத்தின் தரவுகளுடன் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளதால் நிருவாகப் பணிகளைக் குறைக்க உதவுகிறது.

தேசிய சுகாதார இயக்கம், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை ஆதிதிராவிடர் நலத்துறை, சமூக நலம் மற்றும் பழங்குடியினர் நலத்துறை போன்ற பல துறைகளுடன் ஒருங்கிணைந்து பள்ளிக் கல்வித் துறையால் உருவாக்கப்பட்ட வலுவான தரவுகள் மற்றும் மென்பொருளை உறுதிசெய்யும் பணி நடைபெற்று வருகிறது. தற்போதுள்ள செயல்பாடுகளின் திறனை மேம்படுத்துவதற்கும் துறைகளுக்கு இடையேயான தரவுப் பகிர்வுக்கும் அனைத்துத் துறைகளாலும் திறம்பட பயன்படுத்தப்படுகிறது.

உயர்கல்வியில் அரசுப்பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் 7.5% இடஒதுக்கீட்டை சரியான வகையில் நடைமுறைப்படுத்திட EMIS இணையதளம் விரைவாகவும், பயனுள்ள வகையிலும் தரவுகளை வழங்கும் விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இடைநின்ற மாணவர்களைக் கண்டறிந்து பள்ளியில் சேர்க்கவும் EMIS உதவுகிறது.

பள்ளிக் கல்வித் துறையில் பணியாற்றும் ஆய்வு அலுவலர்கள் வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் பணிகளை ஆய்வு செய்வதற்காக EMIS தளத்தை அடிப்படையாகக் கொண்டு கைப்பேசி செயலி உருவாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இச்செயலி வகுப்பறையில் நடைபெறும் கற்றல் கற்பித்தல் பரிமாற்றங்கள் மற்றும் மாணவர்களின் கற்றல் அடைவுகளை அறிந்துகொள்ள கட்டமைக்கப்பட்டுள்ளது. இச்செயலி பள்ளியில் தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆய்வு அலுவலர்களுக்கு தரமான பரிமாற்றம், ஆசிரியர் பயிற்சி மற்றும் தொடர் ஆய்விற்குச் சிறந்த செயலியாகப் பயன்பட துணைபுரியும்.

## 2.12. பள்ளிகளுக்கான நிதி உதவி

### *2.12.1. ஒருங்கிணைந்த பள்ளி மானியம்*

அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் கற்றல் சூழலை மேம்படுத்துவதற்கென ஆண்டுதோறும் ஒருங்கிணைந்த பள்ளி மானியம் வழங்கப்படுகிறது. செயல்படாத உபகரணங்களை மாற்றுதல், இணைய வசதி, கற்றல் கற்பித்தல் கருவிகள் வாங்குதல், ஆண்டு பராமரிப்பு, கட்டிடங்களில் பழுதுகளைச் சரிபார்த்தல் போன்ற பணிகளுக்கு இம்மானியத்தை பயன்படுத்தலாம். ஒவ்வொரு பள்ளிக்கும் அனுமதிக்கப்பட்ட மானிய விவரம் பின்வருமாறு :

| வ.எண் | பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை | பள்ளிக்கான மானியத் தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | 1 முதல் 15 க்குள் | 12,500 |
| 2 | 16 முதல் 100 க்குள் | 25,000 |
| 3 | 101 முதல் 250 க்குள் | 50,000 |
| 4 | 251 முதல் 1000 க்குள் | 75,000 |
| 5 | 1000 க்கு மேல் | 1,00,000 |

2021-22 ஆம் கல்வியாண்டில் ரூ.116.28 கோடி பள்ளி மானியமாக செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

*2.12.2. நூலக மானியம்*

நூலகங்கள் சமுதாயத்தின் அறிவு மற்றும் கலாச்சாரத்தின் நுழைவாயிலாக விளங்குவதற்கு முக்கியப் பங்கு வகிக்கின்றது. மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க சிறந்த கருவியாக பள்ளி நூலகங்கள் திகழ்கின்றன. மாணவர்கள் தரமான புத்தகங்களைத் தேடி வாசிப்பதன் வாயிலாக வாசகராக, சிந்தனையாளராக, எழுத்தாளராக உருவாகும் வகையில் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். ஆகவே, ஒவ்வொரு பள்ளியிலும் நூலக வசதியை ஏற்படுத்தி ஆண்டுதோறும் பள்ளிகளுக்கு நூலக நிதியை அரசு ஒதுக்கீடு செய்கிறது. சிறந்த நிபுணர் குழுக்கள் அமைக்கப்பட்டு அதன் மூலம் மாணவர்களுக்கு அறிவுசார் மற்றும் பொழுதுபோக்கு புத்தகங்கள் தெரிவு செய்யப்படுகிறது. மாணவப் பருவத்திற்கேற்ற இப்புத்தகங்கள் வாங்குவதற்காக 2021-22ஆம் கல்வியாண்டில் ரூ.31.96 கோடி செலவிடப்பட்டுள்ளது. இப்புத்தகங்கள் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் வாங்கப்பட்டு வினியோகம் செய்யப்படுகின்றன. பள்ளியில் ஒவ்வொரு வாரமும் நூலக வாசிப்பிற்கென தனியாக ஒதுக்கப்படும் பாடவேளையின் மூலமாக மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க முடியும். அனைத்து பள்ளி

நூலகங்களிலும் என்னென்ன புத்தகங்கள் இருக்கின்றன என்பதை அறிந்து கொள்ள EMIS இணையதளம் மூலம் தனித்த செயலி ஒன்று உருவாக்கப்படும்.

### *2.12.3. பள்ளி மேலாண்மைக் குழு (SMC)*

பள்ளி அளவில் நிர்வகிக்கப்படும் முக்கியமான பள்ளி மேலாண்மை குழுவில் பெற்றோர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரநிதிகள், பள்ளி ஆசிரியர்கள், சுயநிதி குழுவின் உறுப்பினர்கள் மற்றும் கல்வியாளர்கள் அங்கத்தினர்களாக உள்ளனர். பள்ளி அளவில் ஆரம்ப நிலையிலுள்ள இக்குழுவானது பள்ளியின் செயல்திறனை முன்னேற்றுவதில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. இக்குழுவிற்கு புத்துணர்ச்சியூட்டும் வகையில், முழுமையாக அனைத்து பள்ளிகளிலும் மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பள்ளி மேலாண்மை குழுவின் புதிய உறுப்பினர்கள் நியமனம் மற்றும் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்களுடைய பணிகள் மற்றும் பொறுப்புகள் சார்ந்து இரண்டு கட்டங்களாக மாநில அளவிலான கருத்தாளர்களுக்கு பயிற்சி நடத்தப்பட்டது.

அனைத்து அரசுப் பள்ளிகளிலும் பள்ளி மேலாண்மை குழுக்களை (SMC) மறுகட்டமைப்பு செய்ய திட்டமிடப் பட்டுள்ளது. SMC மறு கட்டமைப்பு, கடமைகள் மற்றும்

பொறுப்புகள் தொடர்பான பயிற்சி SMC உறுப்பினர்களுக்கும் மாநில கருத்தாளர்களுக்கும் இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட கள அலுவலர்களுக்கு SMC பற்றிய விழிப்புணர்வு பயிற்சி நடத்தப்பட்டுள்ளது.

அனைத்து மாவட்டங்களிலும் ஆசிரியர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட கருத்தாளர்களுக்கு மாநில கருத்தாளர்களைக் கொண்டு 2 நாட்களுக்கு பள்ளி மேலாண்மைக் குழு குறித்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் தலைமையாசியர், ஆசிரியர், 2 வார்டு உறுப்பினர்கள், சுய உதவிக்குழு உறுப்பினர் என 5 உறுப்பினர்களுக்கு பள்ளி மேலாண்மைக் குழு சார்ந்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

20.03.2022 அன்று பள்ளி மேலாண்மைக் குழு சார்ந்த விழிப்புணர்வுக் கூட்டம் நடைபெற்றது. இப்பயிற்சியில் 23.54 இலட்சம் பெற்றோர்களுக்கு இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்களின் உதவியுடனும் கலைக் குழுவின் வாயிலாகவும் சமூகத்திற்கான விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டது. பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு மற்றும் அதன் உறுப்பினர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த

அனைத்துப் பள்ளிகளிலும் பெற்றோர்கள் கூட்டம் நடத்தப்பட்டது.

பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு அனைத்து வகையான அரசுப் பள்ளிகளிலும் பலகட்டங்களாக மாநிலம் முழுவதும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தை உருவாக்குவதற்காக ஒரு சிறப்பு கைப்பேசி செயலி தொடங்கப்பட்டு, பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்களால் பள்ளி மேம்பாட்டுத் திட்டங்களைத் திட்டமிடல், செயல்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல் போன்ற செயல்பாடுகளுக்காக 2021-22 ஆம் ஆண்டில் ரூ.1,682.59 லட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.13. நலத்திட்டங்கள்

அரசுப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவர்கள் தங்கள் கல்வியை நன்கு தொடரவும், பொருளாதார, சமூகக் காரணங்களால் தடையேதுமின்றி பள்ளிக்கல்வியை நிறைவு செய்வதற்காகவும் அரசு பின்வரும் நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

| வ. எண் | நலத்திட்டத்தின் பெயர் | வகுப்பு | 2021-22 |
|---|---|---|---|
| | | | பயனாளிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) |
| 1. | பாடநூல்கள் | 1 - 12 | 74.97 |
| 2. | நோட்டுப்புத்தகம் | 1 - 10 | 62.81 |
| 3. | புத்தகப்பை | 1 - 12 | 74.97 |
| 4. | காலணிகள், கால் ஏந்திகள் மற்றும் காலுறைகள் | 1 - 10 | 60.21 |
| 5. | புவியியல் வரைபடம் | 6-10 | 6.91 |
| 6. | கிரையான் மற்றும் வண்ணப் பென்சில் | 1 -5 | 27.03 |
| 7. | கணித உபகரணப் பெட்டி | 6 | 6.91 |
| 8. | சிறப்பு ஊக்கத் தொகை | 10, 11, 12 | 17.50 |
| 9. | மடிக்கணினி | 11 | 5.44 |
| 10. | சீருடை | 1-8 | 48.95 |
| 11. | மிதிவண்டி | 11 | 6.35 |
| 12. | கம்பளிச்சட்டை | 1-8 | 1.15 |
| 13. | உறை காலணிகள், மழையாடைகள், காலுறைகள் | 1-8 | 1.15 |
| 14. | புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் | 1-8 | 62.33 |
| 15. | விபத்து நிவாரண நிதியுதவி | 1-12 | 0.0001 |

| | | | |
|---|---|---|---|
| 16. | வருவாய் ஈட்டும் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான நிதி உதவி | 1-12 | 0.015 |
| 17. | பேருந்து பயண அட்டை | 1-12 | 23.42 |

### 2.14. மின்னணுச் சேவைகள்

பள்ளிக் கல்வித் துறையில் பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்கு வழங்கப்படும் சான்றுகளான நன்னடத்தைச் சான்று, ஆளறி சான்று, தமிழ் வழியில் படித்ததற்கான சான்று உள்ளிட்ட அனைத்துச் சான்றுகளும் அவர் தம் இல்லத்திற்கு அருகிலுள்ள அரசு பொது சேவை மையங்களின் வாயிலாக விண்ணப்பித்து கால விரயமின்றிப் பெற்றுக்கொள்ளும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொருட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட சேவைகளில் சில சேவைகள் அரசு பொது சேவை மையங்களின் வாயிலாகத் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

### 2.15. பணியிடங்களில் பெண்கள் பாதுகாப்புச் சட்டம் – பயிற்சி

பள்ளிக்கல்வித் துறையில் பணிபுரியும் அனைத்துப் பெண் ஊழியர்களுக்கும் பாதுகாப்பான பணிச்சூழலை

உறுதிப்படுத்தும் வகையில் ஒவ்வொரு பள்ளியிலும்/அலுவலகத்திலும் பெண்களை தலைமையாகக் கொண்டு (பாலியல் சாராத துன்புறுத்தல்களைப் பற்றிய புகார்களைக் கையாள்வதற்காக) உள்மட்ட குழுவும் (Internal Committee) மாவட்ட அளவிலான குழுவும் (Local Committee) அமைக்கப்பட்டு அவ்விடங்களில் பெண்களுக்கான பாதுகாப்பை உறுதிசெய்யவும் அவ்வப்போது எழும் பிரச்சினைகளை சரியாக கையாண்டு அவற்றிற்கான விசாரணை அறிக்கைகளை 10 நாட்களுக்குள் கொடுக்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், விசாகா கமிட்டியின் அறிவுரைகள் மற்றும் இதுதொடர்புடைய இதர சட்டங்களையும் பின்பற்றி முடிவுகள் எட்டப்படும். இதற்கான பயிற்சி பள்ளிக்கல்விசார் அங்கத்தினர் அனைவருக்கும் அளிக்கப்பட்டு வருகிறது.

### 2.16. மாணவர்களுக்கான சுகாதாரப் பரிசோதனை

தேசிய குழந்தைகள் நல்வாழ்வுத் திட்டம் (RBSK) மூலம் பிறப்பிலிருந்து 18 வயது வரையிலான குழந்தைகளின் பிறப்பின்போது ஏற்பட்ட குறைபாடுகள், பிறப்பிற்குப் பின்னர் கண்டறியப்பட்ட குறைபாடுகள், நோய்கள், முறையான வளர்ச்சியில் ஏற்பட்ட தாமதங்கள், அறுவை சிகிச்சைகளினால் ஏற்பட்ட இடர்பாடுகள் போன்றவற்றை

முன்கூட்டியே கண்டறிந்து, தேவையான தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது அவசியமாகும். இந்தப் சேவைகள் அனைத்தும் பயனாளர்களுக்கும் இலவசமாக வழங்கப்படுவதால், சிகிச்சைக்கான செலவு அக்குடும்பத்தில் முற்றிலும் குறைக்கப்படுகிறது.

முறையான நடைமுறைகளைப் பின்பற்றி அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு இந்த பரிசோதனை முறையானது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பள்ளி அளவில், சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவது தொடர்பான பயிற்சி, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு "தேசிய சுகாதார இயக்கம்" வாயிலாக அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டங்களைப் பள்ளி அளவில் ஒருங்கிணைக்க ஒரு பொறுப்பாசிரியர் நியமிக்கப்படுகிறார்.

### 2.17. ஆசிரியர்கள் பொது மாறுதல் கலந்தாய்வு

அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் நலனுக்காக ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வரும் பொது மாறுதலை ஒளிவுமறைவு இன்றி 2021-22ஆம் ஆண்டு முதல் நடத்திட விரிவான பொதுமாறுதல் கலந்தாய்வு கொள்கை வகுக்கப்பட்டு, அரசாணை (நிலை) எண். 176,

பள்ளிக்கல்வி [ப.க(1)]த்துறை, நாள்: 17.12.2021-ன்படி ஆணை வெளியிடப்பட்டு ஆசிரியர்களுக்கான பொது மாறுதல் கலந்தாய்வு வெளிப்படையாக நடத்தப்பட்டுள்ளது. இப்பொது மாறுதல் கலந்தாய்வுக் கொள்கையின் அடிப்படையில் ஜனவரி 2022-லிருந்து மார்ச் 2022 வரை நடைபெற்ற பொது மாறுதல் கலந்தாய்வில் 67,470 ஆசிரியர்கள் விண்ணப்பித்து அவற்றில் 18,713 ஆசிரியர்கள் பணியிட மாறுதல் மற்றும் 3,488 ஆசிரியர்கள் பதவி உயர்வு வாயிலாக புதிய பணியிடங்களை தெரிவு செய்துள்ளனர்.

### 2.18. வட்டாரக் கல்வி அலுவலர்கள் - நேரடி நியமனம்

பள்ளிகளின் எண்ணிக்கை மற்றும் மாணவர் எண்ணிக்கையின் அடிப்படையில் தமிழகத்தில் உள்ள 413 ஒன்றியங்களில் 836 வட்டாரக் கல்வி அலுவலர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. தற்போதைய நிலவரப்படி பணிபுரியும் 803 வட்டாரக் கல்வி அலுவலர்களை தவிர்த்து காலியாக உள்ள 33 பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளது.

அரசாணை எண்.82, பள்ளிக் கல்வித் துறை, நாள்.20.05.2019ன்படி, மொத்த வட்டாரக் கல்வி அலுவலர் காலிப் பணியிடங்களில் 50% நேரடி நியமனத்தின் வாயிலாக நிரப்பப்பட்டு வருகிறது. ஆசிரியர் தேர்வு வாரியம் வாயிலாக

தெரிவு செய்யப்பட்டு 95 வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டு பணியில் சேர்ந்துள்ளனர்.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரக்கல்வி அலுவலர்களுக்கு மூன்று மாத நிருவாகப் பயிற்சி அசிம் பிரேம்ஜி பல்கலைக்கழக ஒருங்கிணைப்புடன் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

### 2.19. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

கல்விசார் குறியீடுகளையும், கல்வியின் தரத்தையும் உயர்த்த ஒன்றிய அரசால் கொண்டு வரப்பட்ட இத்திட்டம் முன்தொடக்க, தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை எனத் தடைகள் இல்லாமல் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை தொடர்நிலையாக அமைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது அனைவருக்கும் கல்வித் திட்டம், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம், ஆசிரியர் கல்வி எனும் திட்டங்களின் ஒருங்கிணைந்த திட்டமாகும். இந்திய அரசு மற்றும் தமிழக அரசுகளிடமிருந்து முறையே 60:40 என்ற விகிதத்தில் நிதியை இத்திட்டம் பெறுகிறது.

மேலும், பள்ளி செல்லும் குழந்தைகளின் உள்ளடக்கிய கல்வி மற்றும் சமநிலைக் கல்வியை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பாடப் புத்தகங்களில் உள்ள விரைவு துலங்கல் (QR) குறியீடுகள் மூலம் உள்ளடக்கிய பாடங்கள் மற்றும் மதிப்பீட்டு கேள்விகளை எளிய முறையில் மாணவர்கள் அணுகி புரிதலுடன் கற்பதற்கு ஏதுவான வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. மாநிலக் கல்வியில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மூலம் ஆசிரியர் பயிற்சிகளை நடத்துவதற்கான நிதி ஆதாரங்களை ஒன்றிய அரசிடமிருந்து பெறுவதில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. இக்கல்வியாண்டில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மூலம் 12 கட்டங்களாக அனைத்துப் பாடங்களுக்குமான தகவல் தொழில்நுட்பம் (ICT) சார்ந்த பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இப்பயிற்சியில் கல்வி தேகவல் மேலாண்மை முறைமை (EMIS) பயன்படுத்துவது மற்றும் தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் வகுப்பறையில் பாடங்களை சிறப்பான முறையில் நடத்துவது குறித்து ஆசிரியர்களுக்கு சிறந்த உயர் கல்வி நிறுவனங்களின் பேராசிரியர்கள் மூலம் பயிற்சி வழங்கப்பட்டன. இதன் மூலம் உயர்தர கற்றல்-கற்பித்தல் பாடப் பொருள்கள் உருவாக்கப்பட்டு ஆசிரியர்கள், மாணவர்கள் இருவரும் பயன் பெறுகின்றனர்.

**2.20. நிதி ஒதுக்கீடு**

2022-23ஆம் ஆண்டிற்கு தொடக்கக் கல்விக்கென ரூ.18,251.53 கோடியும், உயர்நிலை மற்றும் மேல்நிலை கல்விக்கென ரூ.17743.53 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3. மெட்ரிகுலேசன் பள்ளிகள்

### 3.1. முன்னுரை

அரசின் முற்போக்கான வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு பொதுக் கல்வி வாரியப் பாடத்திட்டம் மற்றும் கலைத்திட்டத்தினைப் பின்பற்றி சுயநிதிப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணாக்கர்களின் தேவைகளை மெட்ரிகுலேசன் பள்ளிகள் பூர்த்தி செய்கின்றன. தற்போது தமிழகத்தில் 4479 மெட்ரிகுலேசன் பள்ளிகள் சுமார் 31 லட்சம் மாணாக்கர்களுக்கு கல்வி கற்பித்து வருகின்றன. இவை மாநில அளவில் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநராலும், வருவாய் மாவட்ட அளவில் முதன்மைக் கல்வி அலுவலர்களாலும் மற்றும் கல்வி மாவட்ட அளவில் மாவட்டக் கல்வி அலுவலர்களாலும் கண்காணிக்கப்படுகின்றன.

### 3.2. தொலைநோக்கு

மெட்ரிகுலேசன் பள்ளிகளில் நல்ல உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் முழுமையான கல்வித் தகுதியுடைய ஆசிரியர்களைப் பணியமர்த்துதல் ஆகியவற்றின் மூலம் தரமான கல்வி அளிப்பதும், பாதுகாப்பான கற்றல் சூழல் அமைவதும் உறுதி

செய்யப்படுகிறது. மேலும், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 மற்றும் தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011 ஆகியவற்றைச் சிறப்பாகச் செயல்படுத்துவதும், மெட்ரிகுலேசன் பள்ளிகளில் சேர்க்கையினை இணைய வழியில் வெளிப்படைத் தன்மையுடன் முறைப்படுத்துவதும் உறுதி செய்யப்படுகிறது.

### 3.3. குறிக்கோள்கள்

- பள்ளிகளில் குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்தல்.
- தேவையான கட்டமைப்பு வசதியினை அளிப்பதன் மூலம் குழந்தைகளின் ஒட்டு மொத்த வளர்ச்சியினை உறுதி செய்தல்.
- விதிகளின்படி முழுத் தகுதி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதை உறுதிசெய்தல்.
- குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009ஐ நடைமுறைப்படுத்துவதில் மாநில முகமையாகச் செயல்படுதல்.

- விதிகள் மற்றும் வரையறைகளை மீறும் பள்ளிகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
- சட்டங்கள், விதிகள் மற்றும் அரசால் அவ்வப்போது வழங்கப்படும் வழிகாட்டுதல்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்தல்.

## 3.4. பங்களிப்பு மற்றும் பொறுப்புகள்

### *3.4.1. அனுமதி / அங்கீகாரம்*

அரசால் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகளை நிறைவு செய்யும் நிலையில் புதிய மெட்ரிகுலேசன் பள்ளிகள் தொடங்கவும், மெட்ரிகுலேசன் பள்ளிகளை மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தவும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

2021 – 22 ஆம் கல்வியாண்டில் 29 புதிய மெட்ரிகுலேசன் பள்ளிகள் தொடங்கவும், ஏற்கனவே செயல்பட்டுக் கொண்டிருக்கும் 39 மெட்ரிகலேசன் பள்ளிகளை மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

### *3.4.2.தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்*

பள்ளிகளில் கட்டாயமாகத் தமிழைக் கற்க வேண்டும் என்ற நோக்கில் அரசால் தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டம், 2006 சட்டமாக்கப்பட்டது. அதன்படி, 2006-2007ஆம் கல்வியாண்டில் 1 ஆம் வகுப்பிலும், தொடர்ச்சியான ஆண்டுகளில் அடுத்தடுத்த வகுப்புகளிலும் முதல் மொழியாகத் தமிழ் கற்பது கட்டாயமாக்கப்பட்டது. 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்துத் தனியார் பள்ளி மாணாக்கர்களும் தமிழை முதல் மொழிப்பாடமாகக் கற்கின்றனர்.

### *3.4.3. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 நடைமுறைப்படுத்துதல்*

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 மற்றும் தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011 எழுத்தளவிலும் கொள்கையளவிலும் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. சட்டப்பிரிவு 12 (1) (சி) இன்படி சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் நுழைவு நிலை வகுப்பில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினைச் சார்ந்த குழந்தைகளைச்

சேர்க்கை செய்வது தொடர்பாகத் தெளிவான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009ஐ செயல்படுத்துவதில், மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர் மாநில முதன்மைத் தொடர்பு அலுவலராகவும், மாவட்ட அளவில், முதன்மைக் கல்வி அலுவலர்கள் மாவட்டத் தொடர்பு அலுவலர்களாகவும் உள்ளனர்.

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009, பிரிவு 12 (1) (சி) இ,ன் கீழ் சேர்க்கையில் வெளிப்படைத் தன்மையை உறுதிசெய்ய, சேர்க்கைக்கான விண்ணப்பம் இணைய வழியாகப் பெறப்பட்டு வருகிறது. 2021-22 ஆம் கல்வியாண்டில் இவ்வகையில் 56,687 குழந்தைகள் சேர்க்கை செய்யப்பட்டுள்ளனர். இதன்கீழ் 2020-21 ஆம் கல்வியாண்டிற்கான கல்விக் கட்டணத் தொகை ரூ.314.64 கோடி பள்ளிகளுக்கு ஈடுசெய்யப்பட்டுள்ளது.

### 3.5. காலமுறை அங்கீகாரம் வழங்குதல்

பத்து ஆண்டுகளுக்கும் மேல் அங்கீகாரத்துடன் தரமான கட்டடத்தில் செயல்பட்டு வந்த மெட்ரிகுலேசன்

பள்ளிகளுக்கு ஒவ்வொரு மூன்று ஆண்டிற்கும் ஒரு முறை கட்டட உறுதிச் சான்றினை உரிய அலுவலரிடம் பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் நிரந்தர அங்கீகாரம் வழங்கப்பட்டு வந்தன. அவ்வாறு சான்றிதழ் பெறாத பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட நிரந்தர அங்கீகாரம் திரும்பப் பெறப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

பள்ளிக் கட்டடங்கள், வகுப்பறைகள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பள்ளி வாகனங்கள் தொடர்பாகப் பல எதிர்பாராத நிகழ்வுகள் கடந்த ஆண்டுகளில் ஏற்பட்டு குழந்தைகளின் உயிருக்குச் சேதம் ஏற்பட்டது. இதன் காரணமாகப் பல்வேறு புதிய விதிகளையும், வழிகாட்டு நெறிமுறைகளையும், உத்தரவுகள் மற்றும் சுற்றறிக்கைகளையும் உருவாக்கி குழந்தைகளின் நலனைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டது. மாணாக்கர் பாதுகாப்பை உறுதி செய்ய பள்ளிகளைத் தொடர்ந்து கண்காணிப்பது அவசியம் என்று உணரப்பட்டதால், தனியார் பள்ளிகளுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை அல்லது கட்டட உரிமை / உறுதிச் சான்றிதழில் குறிப்பிட்டுள்ள காலம் இதில் எது முந்தையதோ அதுவரை அங்கீகாரம் வழங்கப்படும். இதுவரை நிரந்தர அங்கீகாரம் பெற்றுச் செயல்படும் தனியார்

பள்ளிகள் அவ்வாறே தொடரலாம், மேலும், தேவையான சான்றிதழ்களை உரிய அலுவலரிடம் சமர்ப்பிக்கவேண்டும்.

**3.6. தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம், 2018**

மாநிலப் பள்ளிக் கல்வி பொதுப் பாடச் சட்டம், 2010 சட்டமாக்கப்பட்ட பின்னர் அனைத்துத் தனியார் பள்ளிகளும், மாநிலப் பொதுக் கல்வி வாரியத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. இதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம், 2018 சட்டமாக்கப்பட்டது. இதற்கான விதிகளை வகுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**3.7.தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டம், 2009**

கல்வி வணிகமயமாவதையும், நன்கொடை வசூலிப்பதையும் தடுக்கும் நோக்கில், தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டம், 2009 சட்டமாக்கப்பட்டு அதற்கான விதிகள் வகுக்கப்பட்டன.

தனியார் பள்ளிகளில் வசூலிக்கப்பட வேண்டிய கட்டணத்தினை நிர்ணயம் செய்ய தனியார் பள்ளிகள் கட்டண நிர்ணயக் குழு உருவாக்கப்பட்டது. கொரானா

தீநுண்மி பரவலைக் கருத்தில் கொண்டும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையிலும், மாத ஊதியம் பெறுவோர், தொழில் வல்லுநர்கள் மற்றும் தொழிலதிபர்கள் போன்றவர்களிடம் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட கல்விக் கட்டணத்தில் 85% கட்டணமும், வருமான இழப்பைச் சந்தித்த பெற்றோர்களிடம் 75% கட்டணமும் 6 தவணைகளில் வசூல் செய்துகொள்ள தனியார் சுயநிதிப் பள்ளிகளுக்கு ஆணையிடப்பட்டுள்ளது.

### 3.8. நிதி ஒதுக்கீடு

அரசால் இவ்வியக்ககத்திற்கு 2022-23 ஆம் ஆண்டிற்கு ரூ.353.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 4. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

## 4.1. அறிமுகம்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மாநில அளவில் தரமான பள்ளிக் கல்வியை உறுதிப்படுத்தும் தலைமை நிறுவனமாகத் திகழ்கிறது. இந்நிறுவனம், 1 முதல் 12 வரையிலான வகுப்புகளுக்குத் தேவைகளுக்கு ஏற்ப கலைத்திட்டம், பாடத்திட்டம், பாடநூல்கள், ஆசிரியர் கையேடுகள், மதிப்பீட்டுக்கான செயல்பாட்டுத்தாள்கள் போன்றவற்றை நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள வல்லுநர்களின் பங்களிப்போடு உருவாக்கி வருகிறது. வகுப்பறைக் கற்பித்தல் நெறிமுறைகள் மற்றும் மதிப்பீட்டுச் செயல்பாடுகளில் புதுமைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் தரமான கல்வியை உறுதிப்படுத்தவும் எதிர்பார்க்கப்படும் கற்றல் அடைவுகளைப் பெறவும் வழிவகுக்கிறது. மேலும் ஆசிரியர்களுக்கான பணித்திறன் மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்கி வருகிறது. ஆசிரியர்களின் பணித் திறன்களை வளர்ப்பதன் வாயிலாக மனித வளத்தை முதலீடாக்கி நாட்டின் முன்னேற்றத்திற்குப் பங்களிக்க முடியும். மாணவர்கள் பாடக் கருத்துகளைத் திறம்படப் புரிந்து கொள்ளும் வகையில் தொழில் நுட்பத்தை

ஒருங்கிணைத்துக் கற்பதற்கான வழிமுறைகளை வகுத்து வருகிறது. அதேவேளையில் இன்றைய மாணவர்கள், எத்தகைய சவால்களையும் எதிர்கொள்ளுவதற்கு ஏதுவான பல்திறன்களைப் பெறுவதிலும் கவனம் செலுத்துகிறது. மேலும், ஏராளமான பல்வேறு கல்வி வாய்ப்புகளுள் தமக்கு உரியதை மாணவர்கள் தேர்ந்தெடுக்கும் நோக்கில் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கான வழிகாட்டுதல்களை வழங்குகிறது. கல்வியில் ஏற்படும் சிக்கல்களை ஆசிரியர்கள் எதிர் கொள்ள ஏதுவாக ஆய்வுச் செயல்திட்டம் மற்றும் செயல் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியப் பயிற்றுநர்களை ஊக்குவிக்கிறது. கற்றல் கற்பித்தல், கலகலப்பானதாகவும் மகிழ்ச்சியானதாகவும் அமையும் வகையில் மின்னியத் தொழில்நுட்பத்தை முழுமையாகப் பயன்படுத்துகிறது.

## 4.2.தொலைநோக்கு

மாநிலக் கல்வியியல் ஆராய்ச் மற்றும் பயிற்சி நிறுவனமானது மாணவர்கள் புதிய தொழில்நுட்ப உலகினைப் போட்டி மனப்பான்மையுடன் எதிர்கொள்ள உகந்தவர்களாக மாற்றும் வகையில் கற்றல் விளைவுகள், முழுமையான, மகிழ்வுடன் கற்றலுக்கான பல்வகைக் கற்பித்தல் நெறிமுறைகள், மாற்றுவழிக் கற்பித்தல்

உத்திகள், மின்னியவழிக் கற்றல் மற்றும் உயர்நிலைச் சிந்தனைத்திறனை ஊக்குவிக்கும் வகையிலான மதிப்பீடு ஆகியவற்றின்படி பள்ளி அமைப்பை உருவாக்குவதைத் தனது இலக்காகக் கொண்டுள்ளது.

**4.3. நோக்கங்கள்**

- கலைத்திட்டம், பாடத்திட்டம், பாடநூல்கள், கற்றல் துணைப்பொருள்கள், செய்தி மடல்கள், கற்றல் கருவிகள், பல்லூடக மின்னியப் பொருள்கள் மற்றும் கல்விசார் கட்டகங்களை உருவாக்குதல்.
- பணிபுரிந்து வரும் ஆசிரியர்களுக்கும் மாணவ ஆசிரியர்களுக்கும் முறையே பணியிடை மற்றும் பணிமுன் பயிற்சிகளை ஒருங்கிணைத்தல்.
- வகுப்பறைச் செயல்பாடுகளில் கற்றல் விளைவுகளை ஒருங்கிணைத்தல்.
- பள்ளிக்கல்வி சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், உதவுதல், ஊக்குவித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.
- பேரிடர், இயற்கைச் சீற்றங்கள், பெருந்தொற்றுப் பரவல் ஆகியவற்றின் காரணமாக நடைமுறைப்படுத்தப்படும் ஊரடங்குக்

காலச்சூழலில், மாற்றுவழிக் கற்றல் கற்பித்தல் முறைகளைப் பரிந்துரைத்தல்.

- கல்வித்தர மேம்பாட்டிற்கான மதிப்பீட்டு அமைப்புகளையும் அணுகுமுறைகளையும் உருவாக்குதல், நடைமுறைப்படுத்துதல், கண்காணித்தல், நிலைநிறுத்துவதற்கான குறைதீர்த் தொடர் இடைவினைகளை உருவாக்கி அளித்தல்.

## 4.4. பங்கு மற்றும் பணிகள்

- வகுப்பறையில் ஏற்படும் கற்றல் இடர்பாடுகளை நீக்க அனைத்து கல்வி இயக்ககங்களுக்கும் தேவையான ஊக்கச் செயல்பாடுகளை மேற்கொள்வதற்கான அணுகுமுறைகளை அளித்தல்.
- பள்ளிக்கல்வியில் கொள்கை மாற்றங்களை வெளிக்கொணரத் தேவையான கற்பித்தல் நெறிமுறைகள் மற்றும் மதிப்பீட்டு உத்திகளுக்கான கற்றல் உள்ளீடுகளைப் பரிந்துரைத்தல்.
- உலகளாவிய மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பின்பற்றப்படும் கல்வித் திட்டங்களில்

காணப்படும் தற்போதைய போக்குகளை அடியொட்டிச் சிறப்பான கற்பிப்பு முறைகளை உள்வாங்கி அதனடிப்படையில் கலைத்திட்டம், பாடத்திட்டம் மற்றும் பாடநூல்களை உருவாக்குதல்.

- கற்பித்தல் நெறிமுறைகள் மற்றும் மதிப்பீட்டுத் துறைகளில் சிறந்தவற்றைக் கண்டறிந்து செயல்படுத்துதல்.
- குழந்தைகள் ஆர்வத்துடன் கற்றல் செயல்பாட்டில் ஈடுபடும் வண்ணம் கற்போர் மைய கற்பித்தல் நெறிமுறைகளைச் செயல்படுத்தத் தக்கவாறு ஆசிரியர்களின் பணித்திறன்களைத் தொடர்ந்து மேம்படுத்துதல்.
- மாணவர் மதிப்பீடு மற்றும் ஆசிரியர் பயிற்சிகளுக்குத் தேவையான மின்னிய வளங்களை உயர்தொழில் நுட்ப ஆய்வகங்களின் வழியாக வழங்குதல்.
- ஆசிரியர்களுக்கு மனவெழுச்சி நலம், வாழ்க்கைத் திறன் மற்றும் மின்னியத் தொழில் நுட்பத்திறன் போன்றவற்றை மேம்படுத்துவதற்கான பயிற்சிகளை அளித்தல்.

- கோவிட்-19 பெருந்தொற்று போன்ற சூழ்நிலைகளில் மாற்றுவழிக் கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டு முறைகளுக்கு மாறுவதற்குப் பள்ளிகளுக்கு உதவுதல்.
- மாணவர்களுக்குத் தேவையான உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டுதல்களை வழங்கத் தேவையானவாறு ஆசிரியர்களை வளப்படுத்துதல்.
- தேசிய அடைவு ஆய்வுகளைப் பகுப்பாய்வு செய்வதன்மூலம் மாணவர்களுக்கு எங்கெங்கு கற்றல் தடைகள் உள்ளன என்பதைக் கண்டறிந்து அத்தகைய இடைவெளிகளை நீக்குவதற்கான குறைதீர் நடவடிக்கைகளை வடிவமைத்தல்.

## 4.5. திட்டங்களும் செயல்பாடுகளும்

### *4.5.1. முதன்மைப்படுத்தப்பட்ட பாடத்திட்டம்*

கோவிட் – 19, பெருந்தொற்றுக் காரணமாக பள்ளிகள் மூடவேண்டிய சூழலில், ஆசிரியர் மாணவர் நேரடி வகுப்பறைக் கற்றலுக்கு வாய்ப்பில்லாமல் கற்றல் மிகவும் பாதிக்கப்பட்டது. ஓர் ஆண்டில் கற்க வேண்டிய முழுமையான பாடங்களை முடிக்க இயலாத நிலை

ஏற்பட்டது. இதனைக் கருத்தில் கொண்டு அனைத்து வகுப்புகளுக்கும் முதன்மைப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடங்களின் முக்கியப் பகுதிகளையும் உள்ளடக்கியதாக இப்பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

### *4.5.2. கற்றல் இடைவெளியை ஈடுசெய்வதற்கான முன்னெடுப்புகள்*

#### *4.5.2.1. புத்தாக்கப் பயிற்சிக் கட்டகங்கள்*

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், பள்ளிகள் மீண்டும் திறந்த பிறகு கற்றல் இடைவெளியைக் குறைக்கும் நோக்கிலும் முந்தைய வகுப்புகளில் விடுபட்ட பாடக்கருத்துகளைப் புரிந்துகொண்டு கற்கும்வகையிலும் 2 முதல் 12 வரையிலான வகுப்புகளுக்குப் புத்தாக்கப் பயிற்சிக் கட்டகங்களை உருவாக்கி வழங்கியுள்ளது. முக்கியமான அடிப்படைக் கருத்துகளை உள்ளடக்கி மேம்படுத்தப்பட்ட செயல்பாடுகள் வழியாகவும், படக்காட்சிகள் வழியாகவும் கட்டகங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இப்புத்தாக்கப் பயிற்சிக் கட்டகங்களை, நடப்பாண்டுக்கான பாடக்கருத்துகளைக் கற்பிப்பதற்கு முன்னதாக 45 நாள்களுக்கு கற்பிக்க ஆசிரியர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

அனைத்து பள்ளி மாணவர்களிடமும் ஏற்பட்டுள்ள கற்றல் இடைவெளியைக் குறைக்க இப்புத்தாக்கப் பயிற்சிக் கட்டகங்கள் உதவின.

### *4.5.2.2. இல்லம் தேடிக் கல்வி*

குழந்தைகளின் கற்றல் இடைவெளியைக் களைவதற்காக இல்லம் தேடிக் கல்வி என்னும் முன்னோடித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. “பெருந்தொற்று காரணமாகப் பள்ளிகள் மூடப்பட்டதால் ஏற்பட்ட கற்றல் இழப்பை ஈடுகட்டுவதற்கும் மாணவர்களிடம் ஏற்பட்ட உளவியல் ரீதியான பாதிப்புகளைச் சரி செய்வதற்கும் மாபெரும் கற்றல் மற்றும் படித்தல் இயக்கம் அறிமுகப்படுத்தப்படும்” என மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிவித்தார். இல்லம் தேடிக் கல்வி திட்டத்திற்கான கற்றல் கற்பித்தல் பொருள்களைத் தயாரிக்கும் பணி, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், செயல்வழிக் கற்றல் மற்றும் பங்கேற்றுக் கற்கும் அடிப்படையில் விளையாட்டுகள், புதிர்கள், பாடல்கள், கதைகள், எளிய அறிவியல் சோதனைகள் மற்றும் கலைகள்

வாயிலாக மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணரும்வகையில் கற்றல் கற்பித்தல் பொருள்களைத் தொடக்க மற்றும் உயர் தொடக்க வகுப்பு நிலை மாணவர்களுக்கென உருவாக்கியுள்ளது. இத்திட்டத்திற்கென நிறுவப்பட்ட மையங்களில் பணியமர்த்தப்பட்ட தன்னார்வலர்கள், கற்றல் கற்பித்தல் பொருள்களைப் பயன்படுத்தி எளிமையான முறையில் வகுப்புகளைக் கையாளுகின்றனர். தன்னார்வலர்களுக்கு என உருவாக்கப்பட்ட கட்டகங்களில் விரைவுத் துலங்கல் குறியீடுகள் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் தன்னார்வலர்கள், செயல்படுத்த வேண்டிய கற்பித்தல் அணுகுமுறைகளைக் கொண்ட மாதிரி வகுப்புகள், காணொலிகளாக இணைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் நோக்கம், பள்ளிகளில் அளிக்கப்படும் பாடக்கருத்துகளை மேலும் வலுப்படுத்துவதே ஆகும்.

*4.5.2.3 எண்ணும் எழுத்தும்*

பள்ளிகள் மூடப்பட்டிருந்ததால் குழந்தைகளின் கற்றலில் ஏற்பட்டிருந்த இடைவெளியைக் குறைப்பதற்காக, மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் அவர்கள் 2021-22 ஆம் ஆண்டு சட்டப் பேரவையின் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டில் உள்ள 8 வயது நிரம்பிய அனைத்து

மாணவர்களும் 2025 ஆம் ஆண்டுக்குள் எழுத்தறிவையும் எண்ணறிவையும் பெறுவர் என்ற திட்டத்தினை அறிவித்தார். இலக்குடன் கூடிய இம்முதன்மைத் திட்டம், 2022-23 ஆம் கல்வியாண்டிலிருந்து 1 முதல் 3 வரையிலான வகுப்புகளில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. பல்வேறு கற்றல் நிலைகளில் உள்ள மாணவர்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டத்திற்கான கற்றல் பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன. உருவாக்கப்பட்ட கற்றல் பொருள்களின் பயன்பாட்டினைத் தெரிந்துகொள்ள களப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. களப்பரிசோதனையில் பெறப்பட்ட கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு, கற்றல் கற்பித்தல் வளங்கள் சீரமைக்கப்பட்டுள்ளன. மேலும், ஆசிரியர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் இத்திட்டத்தின் செயல்பாடுகளை ஒவ்வொரு நிலையிலும் கண்காணிப்பதற்கான உத்திகள் வகுக்கப்பட்டு வருகின்றன. மதிப்பீடுகள், புதுமையாகவும் விளையாட்டு முறையிலும் கட்டமைக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் வாயிலாக 15,89,235 குழந்தைகள் பயன்பெறுவர்.

### *4.5.3.முன்மாதிரியான மின்னியப் பாடப்பொருள்கள் உருவாக்கம்*

இன்றைய குழந்தைகள், தொழில்நுட்பத்தில் பற்றுடையவர்கள். மின்னியத் தொழில் நுட்பத்தில் பாடப்பொருளை எளிதில் புரிந்துகொள்கின்றனர். குழந்தைகளின் இந்த ஆற்றலை மேம்படுத்தும்வகையில் மின்னியப் பாடப்பொருள்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இவ்வுருவாக்கம், இரு படிநிலைகளைக் கொண்டது. முதலாவது, தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களைக் கொண்டு பாடப்பொருளைத் தேர்ந்தெடுத்து தொடர்புபடுத்தி அதற்கான கற்பித்தல் நெறிமுறைகளை உள்ளடக்கிய மின்னியப் பாடப்பொருளுக்கான கருத்துருவாக்கம் செய்யப்படும். இரண்டாவதாக, பாடவல்லுநர்களின் துணையோடு தொழில்நுட்பத்தை இணைத்து பாடப்பொருள் மின்னிய வடிவாக்கம் செய்யப்படும். ஏற்கெனவே உருவாக்கப்பட்டுள்ள மின்னிய பாடப்பொருளைவிடச் சிறப்பாக, முன்மாதிரியான மின்னியப் பாடப்பொருள்கள் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### *4.5.4. கல்வித் தொலைக்காட்சி*

1 முதல் 12 வகுப்பு வரையிலான வகுப்புகளுக்கு அனைத்து நாள்களிலும் எல்லா நேரமும் (24x7) கல்வித் தொலைக்காட்சி மின்னியப் பாடப்பொருளை ஒளிபரப்புகிறது. கோவிட்19, பெருந்தொற்றினால் பள்ளிகள் தொடர்ந்து மூடப்பட்டிருந்த நிலையில் பள்ளிகளின் பணியை “கல்வித்தொலைக்காட்சி’ தனது ஒளிபரப்பு மூலம் மேற்கொண்டது. பாடவாரியாக வகுப்புவாரியாக ஒளிபரப்பப்படும் காணொலிகள், அரசு கேபிள் தொலைக்காட்சி வாயிலாகவும் தனியார் தொலைக்காட்சிச் சேனல்கள் வாயிலாகவும் நேரடி வீட்டு இணைப்புகள் (DTH) வாயிலாகவும் பல்வேறு கேபிள் சேவை இணைப்பாளர்கள் வாயிலாகவும் (MSO) ஒளிபரப்பப்பட்டு வருகின்றன. 1 முதல் 12 வரை வகுப்பு மாணவர்களுள், ஒளிபரப்பைப் பார்க்கத் தவறியவர்கள் பயன்பெறும்வகையில் அடுத்தநாள் முதல் அந்தக் காணொலிகளைப் பார்க்க ஏதுவாக அவை KalviTVofficial youtube Channelலில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இதுவரை 7000க்கும் மேற்பட்ட காணொலிகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இந்த வலையொளித் தளத்திற்கு 4 இலட்சம் சந்தாதாரர்களும் 34 மில்லியன் பார்வையாளர்களும் உள்ளனர். கல்வித் தொலைக்காட்சியின் பாட ஒளிபரப்பு அட்டவணை மற்றும்

தேவையான பிற செய்திகள், கல்வித் தொலைக் காட்சியின் அதிகாரப்பூர்வ வலைத் தளத்தில் (https://www.kalvitholaikaatchi.com) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

### *4.5.5. அரசுப்பள்ளி ஆசிரியர்களுக்கான தகவல்தொடர்புத் தொழில்நுட்பப் பயிற்சி*

தற்போதைய தொழில்நுட்ப உலகில், வகுப்பறைச் செயல்பாடுகளைத் தொழில்நுட்பத்துடன் இணைப்பதால் கற்றல் கற்பித்தல் மேம்படும். தகவல் தொடர்பு தொழில் நுட்பப் பயன்பாடு ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமான தொடர்பை முழுவதுமாக மாற்றியுள்ளது. இத்தகைய தொழில்நுட்பம் இணைந்த கற்றல் முறையை நடைமுறைப்படுத்துவதற்காக, அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு, உயர்தொழில்நுட்ப ஆய்வகங்களின் வழியாக 5 நாள் தகவல் தொடர்புத் தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்பட்டு அவர்களின் பணித்திறன் மேம்படுத்தப்பட்டது. கணினியின் அடிப்படைகள், இணையப் பயன்பாடுகள், உயர்தொழில்நுட்ப ஆய்வகப் பயன்பாடுகள், கல்வியியல் மேலாண்மைச் சேவையின் முக்கியக்கூறுகள் ஆகியன குறித்து ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். நேரலைப் பயிற்சி, செய்து கற்றல், விளக்கக் காணொலிகள்,

மதிப்பீடுகள், பின்னூட்டங்கள் எனப் பல்வேறு நிலைகளை இப்பயிற்சி உள்ளடக்கியிருந்தது. கற்பித்தலுக்குத் திட்டமிடும் காலத்தைக் குறைத்து ஆசிரியர்களின் வகுப்பறைக் கற்பித்தலுக்கு உதவும்வகையில் இலவச இணையவழி செயலிகள்/கருவிகள் குறித்தும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டது. உயர்தொழில்நுட்ப ஆய்வகங்களில் பயன்படுத்தப்படும் பயனர் பெயர்களை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர் மதிப்பீடுகளுக்கான வினாக்களும் வழங்கப்பட்டுள்ளன. இப்பயிற்சியின் வாயிலாகத் தொடக்கநிலை முதல் மேனிலைவரை பணியாற்றும் 1,90,430 ஆசிரியர்கள், பயனடைந்துள்ளனர். இப்பயிற்சியின் பயனாக ஆசிரியர்கள் இணையவழியில் கற்பித்தல் பணியைச் சிறப்பாக மேற்கொள்ளும் திறனைப் பெற்றுத் தேவைக்கேற்பத் தம்மைத் தகவமைத்துக் கொள்கின்றனர். இதன் நன்மைகளைக் கருத்தில் கொண்டு இப்பயிற்சி, புதிதாகப் பணியமர்த்தப்படும் அனைத்து ஆசிரியர்களுக்கும் அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### *4.5.6. கற்றல் விளைவுகள் குறித்த பயிற்சி*

ஒவ்வொரு வகுப்பிலும் நடத்தப்படும் ஒவ்வொரு பாடத்திற்கும் அளவுகோலாக அமையும் கற்றல் விளைவுகள்,

குழந்தைகள் தாங்கள் கற்கும் பாடக்கருத்துகளில் தெளிவு பெற்றுள்ளனரா என்பதைக் கண்டறிய உதவும். மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், முதன்மைக் கருத்தாளர்களாக ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள், வட்டார வளமைய ஆசிரியப் பயிற்றுநர்கள், சிறந்த ஆசிரியர்கள் ஆகியோருக்கு இணையவழியாக கற்றல் அடைவுகள், வகுப்பறை நடைமுறைகள் மற்றும் செயல்பாடுகள் ஆகியன குறித்து பயிற்சியை வழங்கியது. பயிற்சி பெற்ற முதன்மைக் கருத்தாளர்களால், தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு இரண்டு நாள் கற்றல் விளைவுகள் சார்ந்த பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியின் மூலமாக மாநிலத்தில் உள்ள அனைத்துத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களும் பயனடைந்துள்ளனர்.

### *4.5.7. கல்வியில் பின்தங்கிய வட்டாரங்களில் படிக்கும் மாணவர்களுக்கான மனநலன் மற்றும் வாழ்க்கைத் திறன் மேம்பாட்டுத்திட்டம்.*

மாணவர்களின் மனவெழுச்சி நலத்தையும் வாழ்க்கைத் திறன்களையும் மேம்படுத்துவதில் அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. மனஅழுத்தம் ஏற்படும் சூழல்களில், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பதற்றமும்

அழுத்தமும் ஏற்படுகிறது. மாணவர்களின் மனவெழுச்சி நலத்தையும் வாழ்க்கைத் திறன்களையும் மேம்படுத்துவதற்காகக் கல்வியில் பின்தங்கிய 44 வட்டாரங்களில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குக் கலை மற்றும் விளையாட்டு அடிப்படையிலான மனவெழுச்சி நலன் மற்றும் வாழ்க்கைத்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படும் என்று மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டப்பேரவையில் அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, யுனிசெப் அதனுடைய கல்வி அமைப்புடன் இணைந்து மாணவர் பயிற்சிஏடு, ஆசிரியர் கையேட்டை உருவாக்கியுள்ளது. மனவெழுச்சி நலன் மற்றும் வாழ்க்கைத் திறன்களை வளர்ப்பதற்கான கலை மற்றும் விளையாட்டு சார்ந்த பல்வேறு செயல்பாடுகள், மாணவர் பயிற்சிக் கையேட்டில் இடம்பெற்றுள்ளன. மாணவர் பயிற்சிக் கையேட்டில் இடம்பெற்றுள்ள கற்றல் செயல்பாடுகளுக்கான கற்பிக்கும் முறைகள் குறித்து ஆசிரியர் கையேட்டில் விளக்கப்பட்டுள்ளன.

இக்கட்டகங்களை உருவாக்கிய பாட வல்லுநர்கள், கல்வியில் பின்தங்கிய வட்டாரங்களில் உள்ள அரசு மற்றும்

அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் 1200 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளனர். பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், தங்கள் பள்ளி மாணவர்களுக்கு இப்பயிற்சியை வழங்கினர். இப்பயிற்சி திட்டம், ரூபாய் 1 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டது. இதனால் 2,25,000 மாணவர்கள் பயனடைந்து உள்ளனர்.

### *4.5.8. மாணவர்களுக்கான உயர்கல்வி, வேலைவாய்ப்பு வழிகாட்டி நூலை உருவாக்குதல்*

உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டுதல் என்பது 11ஆம் வகுப்புக்கான பாடப்பிரிவுகளை மாணவர்கள் தேர்ந்தெடுப்பதற்கு முன் வழங்க வேண்டிய மிக முக்கிய உள்ளீடுகளுள் ஒன்றாகும். அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் பெரும்பாலான மாணவர்கள், மிகச் சாதாரண சூழலில் இருந்து படிக்க வருகின்றனர். இவர்களுக்கு உயர்கல்வி, வேலைவாய்ப்புகளைத் தெரிவு செய்வதற்கான உரிய வழிகாட்டுதல்கள் கிடைக்காமல் போகலாம்.

இதனால், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், 9 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கான வழிகாட்டுதலை வழங்கும் வகையில் கட்டகங்களைத்

தயாரிக்க மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனக் கல்வியாளர்கள், சிறந்த ஆசிரியர்கள் கொண்ட குழுவை அமைத்தது. இக்குழு, நடைமுறையில் உள்ள பல்வேறு பணிவாய்ப்புகள் குறித்து விரிவாக ஆராய்ந்தது. மாணவர்களின் விருப்பம், ஆர்வம், இயல்திறன்கள், வேலைவாய்ப்பு விருப்பங்களை அளவிட்டு அதன் அடிப்படையில் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளைத் தேர்ந்தெடுக்கும் வகையில் மாணவர்களுக்கான கையேட்டினை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தயாரித்துள்ளது.

பன்னிரண்டாம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இது குறித்த பயிற்சிகள் வழங்கப்பட்டு, அவர்களின் மூலமாக அவர்தம் மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு குறித்து ஆற்றுப்படுத்தத் தேவையான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### *4.5.9. மதிப்பீட்டுப்புலத்தை ஏற்படுத்துதல்*

கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் மதிப்பீடும் ஒருங்கிணைந்துள்ளது. மாணவர்களின் கற்றலைச் சோதிக்கும் மதிப்பீடுகளைக் கொண்டு ஆசிரியர்களால் வகுப்பறைச் செயல்பாடுகளை மறுதிட்டமிட முடியும்.

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மதிப்பீட்டுப்புலத்தில் (Assessment Cell) பள்ளிக் குழந்தைகள் ஒவ்வொருவரின் கற்றல் அடைவும் குறிப்பிட்ட கால இடைவெளியில் (periodic intervals) மதிப்பீடு செய்யப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்படும். இத்தகவல்கள் யாவும் முறையாகச் சேமிக்கப்பட்டு குறைதீர்க் கற்றலுக்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகப் பள்ளிப் பாடநூல்களில் இடம்பெற்றுள்ள பாடப்பொருள், தலைப்பு, துணைத்தலைப்புகள், கற்றல் விளைவுகளை உள்ளடக்கிய ஒரு வகைதொகைக் கோப்பாக (taxonomy document) உருவாக்கப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் உள்ள ஆசிரியர்களால் 9 முதல் 12 ஆம் வகுப்புவரையிலான பாடங்களுக்கு உருவாக்கப்பட்டுள்ள வினாக்களை 32 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், சீராய்வு செய்கின்றன. சீராய்வு செய்யப்பட்ட வினாக்கள், உயர் தொழில் நுட்ப ஆய்வகங்களுக்கு அனுப்பப்படுகின்றன. அந்த ஆய்வகங்களின் வழியாக மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேனிலைப்பள்ளிகளில் 9ஆம் வகுப்பிற்குத் திங்கட் கிழமையிலும், 10ஆம் வகுப்பிற்குச் செவ்வாய்க் கிழமையிலும், 11ஆம் வகுப்பிற்குப் புதன் மற்றும் வியாழக்

கிழமைகளிலும், 12ஆம் வகுப்பிற்கு வெள்ளி மற்றும் சனிக் கிழமைகளிலும் மதிப்பீடுகள் நடத்தப்படுகின்றன. மதிப்பீட்டு நடவடிக்கைகள் நிறைவடைந்தவுடன், பெறப்பட்ட தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு தகுந்த குறைதீர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### *4.5.10. மாநில வளமையத்தை ஏற்படுத்துதல்*

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், பள்ளிக்கல்வித் துறையில் உள்ள பல்வேறு தரப்பினரின் பணித்திறன்களையும் தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், வளங்களின் களஞ்சியமாகத் திகழவும் ஆசிரியர்களுக்கான வளமையமாக அமைந்திடவும் பாடவாரியாகச் சிறப்புப்புலங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த வளமையத்தில் மொழிப்பிரிவு, அறிவியல் பிரிவு, கணிதவியல் பிரிவு, சமூக அறிவியல் பிரிவு, ஆராய்ச்சிப்பிரிவு, தகவல் தொடர்புத் தொழில்நுட்பப்பிரிவு ஆகியவை இடம்பெறும். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் காணொலிக் காட்சிகளுடன் கூடிய பாடப்பொருள்கள் இம்மையத்தில் இடம் பெறும். ஆசிரியர்களும் மாணவர்களும் மாநில அளவிலான பயிற்சிகள் நடைபெறும்

போதும் மற்றும் ஆண்டு முழுவதும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் வெளியிடும் அட்டவணைப்படி இவ்வள மையத்திற்கு வருகைதரலாம்.

இம்மாநில வளமையத்தில் மாதிரிகள், செய்து கற்றல், கலந்தாலோசித்துக் கற்றல், விளையாட்டுவழிக் கற்றல், அனுபவக் கற்றல், அசைவூட்டப்படம்வழிக் கற்றல் போன்ற சிறப்புகள் உள்ளடக்கியதாகயிருக்கும். ஒவ்வொரு வளமையத்திற்கும் தேவையான உபகரணங்களை வாங்குவதன் பொருட்டுப் பாட வல்லுநர் குழு, சிறந்த நிறுவனங்கள் சிலவற்றைப் பார்வையிட்டுச் சிறப்புப் புலங்களை மேம்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

### *4.5.11 ஆராய்ச்சிச் செயல்பாடுகள்*

ஆய்வுச் செயல்திட்டங்கள் மற்றும் செயலாராய்ச்சிகள், பள்ளிக் கல்வியில் உள்ள கற்றல் கற்பித்தல் செயல்முறைகள், மதிப்பீடு, பாடப்புத்தகங்களின் செயல்திறன், கல்வித் தொலைக்காட்சிக் காணொலிகளின் தாக்கம், இணையவழிக் கற்றலின் தாக்கம் போன்றவற்றில் ஏற்பட வாய்ப்புள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முக்கியக் கருவிகளாக விளங்குகின்றன. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், ஆசிரியப் பயிற்றுநர்களையும் பிற ஆசிரியர்களையும் பள்ளி வருகை,

வகுப்பறை உற்றுநோக்கல், மாணவர்களின் கல்வித்திறன், பணியிடைப் பயிற்சி போன்றவைக் குறித்த கல்வி ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள ஊக்குவித்து வருகிறது. இது தவிர, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திலும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களிலும் உள்ள கல்வியாளர்களால் பண்புசார் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், பள்ளிக்கல்வி தொடர்பான அவ்வப்போதைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான செயல் ஆராய்ச்சிகளையும் அவர்கள் மேற்கொள்கின்றனர்.

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்களால் 2021-22ஆம் ஆண்டில் 369 செயலாராய்ச்சிகளும், 159 ஆய்வுச் செயல்திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாராய்ச்சிகளின் வாயிலாகக் கண்டறியப்பட்ட முடிவுகள் யாவும் கருத்தரங்குகள் வழியாகவும், ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சிகள் வழியாகவும் பரவலாக்கப்பட்டுள்ளன.

### 4.6. நிதி ஒதுக்கீடு

2022-23ஆம் ஆண்டிற்கு அரசால் இவ்வியக்ககத்திற்கு ரூ.105.66 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5. அரசுத் தேர்வுகள் இயக்ககம்

### 5.1. அறிமுகம்

அரசுத் தேர்வுகள் இயக்ககம் 1975 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இவ்வியக்ககம் தொடங்கப்பட்டதில் இருந்து பல்வேறு தேர்வுகளை உயர்ந்த தரத்துடன் நடத்தி வருகிறது. 10, 11 மற்றும் 12 வகுப்புகளுக்கான பொதுத் தேர்வுகளை நடத்துவதுடன். தேசிய திறனாய்வுத் தேர்வு (NTSE) , தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்புதவித் தொகை தேர்வு (NMMS) , தமிழ்நாடு ஊரக மாணவர்கள் திறனாய்வுத் தேர்வு (TRUST) போன்ற உதவித் தொகைத் தேர்வுகளையும் இவ்வியக்ககம் நடத்துகிறது.

### 5.2. குறிக்கோள்கள்

- அனைத்து வகையான தேர்வுகளையும் முறையாகவும் பாதுகாக்கப்பட்ட சூழலிலும் நடத்துவதற்கு தேர்வுகள் நடத்தும் முறையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்வது.
- மின்னணு மயமாக்கல் மூலம் மதிப்பீட்டு முறைகளை மேம்படுத்துதல்.

- குறித்த நேரத்தில் தேர்வு முடிவுகளை வெளியிடுதல் மற்றும் தேர்வர்களுக்கான தக்க சான்றிதழ்களை வழங்கிடுதல்.
- எதிர்காலத்தில் உயர்கல்வி பயில்வதற்கான சவால்களை எதிர்கொள்ள உதவும் வகையில், உயர் சிந்தனைத் திறன் கொண்ட வினாத்தாள்கள் அமைத்து மாணவர்களிடையே திறனாய்வு சிந்தனைத் திறனை வளர்ப்பது.

**5.3. செயல்பாடுகள்.**

அரசுத் தேர்வுகள் இயக்ககம் 35 வகையான வெவ்வேறு தேர்வுகளை நடத்துவதற்கான பொறுப்பினை ஏற்றுள்ளது. வினாத்தாள்கள் தயாரிப்பதைத் தவிர இவ்வியக்ககம் தேர்வுகளை வெளிப்படைத் தன்மையுடன் நடத்தி தேர்வு முடிவுகளை எவ்விதப் புகார்களுக்கும் இடமின்றி வெளியிட்டு உரிய சான்றிதழ்களையும் தேர்வர்களுக்கு வழங்கி வருகின்றது.

**5.4. இணையதள சேவைகள்**

அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் அதிகாரப்பூர்வ இணையதளமான www.dge.tn.gov.in மூலம் மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்குத்

தேவைப்படும் கீழ்க்குறிப்பிட்டுள்ள விவரங்களை எளிதாகப் பெறுவதற்கான வசதி செய்யப்பட்டுள்ளது.

- தேர்வு அறிவிக்கைகள்
- தேர்வுக்கால அட்டவணைகள்
- விண்ணப்பப் படிவங்கள்
- தேர்வுக் கட்டண விவரங்கள்
- தேர்வர்களுக்கான அறிவுரைகள்
- முந்தைய ஆண்டு தேர்வு வினாத்தாள்கள்
- இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள்
- சான்றிட்ட மதிப்பெண் நகல் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள்
- புலப்பெயர்ச்சி சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள்
- பள்ளி மாணவர்கள் மற்றும் தனித் தேர்வர்களுக்கான பெயர்ப் பட்டியல் தயாரித்தல்.
- தேர்வுக்கூட நுழைவுச் சீட்டு பதிவிறக்கம் செய்தல்.
- தேர்வுக் கட்டணத்தை இணையதளம் மூலம் செலுத்துதல்.

## 5.5. பொது மக்கள் நலன்

### *5.5.1 அரசு இ - சேவை மையங்கள் வழியே விண்ணப்பித்தல்*

மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் மின்னணு சேவைகள் என்ற தலைப்பின்கீழ் சட்டப் பேரவையில் அறிவித்ததற்கிணங்க இவ்வியக்கத்தின் கீழ்க்காணும் சேவைகள் அரசு இ-சேவை மையங்களின் வாயிலாக விண்ணப்பித்து பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- தமிழ் வழியில் பயின்றமைக்கான சான்று
- இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ்
- சான்றிட்ட மதிப்பெண் நகல்
- மதிப்பெண் சான்றிதழில் திருத்தம்
- புலப்பெயர்வு சான்றிதழ் (வெளி மாநிலம் அல்லது வெளி நாடுகளில் உயர் கல்வி பயில்வதற்கு)

### *5.5.2 மின் ஆவணக் காப்பகம்*

மின் ஆவணக்காப்பகம் சான்றிதழ்களை மின்னணுச் சான்றிதழ்களாக பதிவிறக்கம் செய்து கொள்ள உதவுகிறது. இடைநிலை மற்றும் மேல்நிலை தேர்வுகளை எழுதிய மாணவர்கள் தங்களது ஆதார் எண்களைக் கொண்டு மின் ஆவணக் காப்பகத்தில் உள்நுழைந்து அவர்களது மின்னணு

மதிப்பெண் சான்றிதழ்களை அரசுத்தேர்வுகள் இயக்கக மதிப்பெண் விவர தொகுப்பிலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுவரை 1,06,75,384 தேர்வர்களது மதிப்பெண் விவரங்கள் மின் ஆவணக் காப்பகத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. 1,556 மதிப்பெண் சான்றிதழ்களுக்கு மின்னனு சான்றொப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

## 5.6. மாணவர்கள் நலன்

### *5.6.1. தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்தல்.*

தமிழ் வழியில் பயிலும் பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைத் தேர்வுகள் எழுதும் பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் பொதுத் தேர்வு எழுதுவதற்கான தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. 2021-22 ஆம் கல்வியாண்டில் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட தேர்வர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| வ. எண் | வகுப்பு | தேர்வுக் கட்டணம் செலுத்து வதிலிருந்து விலக்களிக்கப்பட்ட தேர்வர்கள் |
|---|---|---|
| 1 | இடைநிலை | 5,05,248 |
| 2 | மேல்நிலை முதலாம் ஆண்டு | 4,72,617 |
| 3 | மேல்நிலை இரண்டாம் ஆண்டு | 4,34,888 |

5.6.2. **சிறப்புக் கவனம் தேவைப்படும் தேர்வர்கள் தேர்வு எழுதுவதற்கு வழங்கப்படும் சலுகைகள்.** (CWSN)

பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைத் தேர்வுகள் எழுதும் சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் சலுகைகளாவன:

- தரைத் தளத்தில் இருக்கை வசதி செய்யப்படுகிறது.
- பார்வைத்திறன் குறைபாடுடைய தேர்வர்களுக்கு தனி அறை வசதி செய்யப்படுகிறது.
- பார்வைத்திறன் குறைபாடுடைய தேர்வர்களுக்குச் சொல்வதை எழுதுபவர் நியமனம்: சொல்வதை எழுதுபவராக தகுதியான மற்றும் சம்பந்தப்பட்ட பாடத்தில் தகுதி பெற்ற

இளங்கலை பட்டதாரி / முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

- நரம்பியல் கோளாறு உடைய தேர்வர்களுக்கு கேள்வித் தாளைப் படித்துக்காட்ட அல்லது சொல்வதை எழுதுபவர் நியமனம் செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.
- கூடுதல் ஒரு மணி நேரம் வழங்கப்படுகிறது.
- கணிப்பான்களைப் பயன்படுத்துவதற்கான அனுமதி வழங்கப்படுகிறது.
- இடைநிலை வகுப்பு பயிலும் மாணாக்கர்கள் செய்முறைத்தேர்வு எழுதுவதிலிருந்து விலக்களிக்கப் படுகிறது.
- எதிர்பாராத விபத்துகள் / காயங்கள் ஏற்பட்ட தேர்வர்கள் சொல்வதை எழுதுபவர் நியமனம் மற்றும் கூடுதல் ஒரு மணி நேரம் வழங்கப்படுகிறது.

### 5.7. சிறைகளில் தேர்வு மையங்கள்

சிறைவாசிகளும் எதிர்கால வாழ்க்கையில் முன்னேற, அவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பது அவசியமாதலால் ஒவ்வோராண்டும் சிறைகளில் தேர்வு மையம் அமைக்கப்பட்டு தேர்வு நடத்தப்படுகிறது. 2020-21-ஆம் கல்வியாண்டிற்கான, ஆகஸ்ட் / செப்டம்பர் 2021

தேர்வில் 10 ஆம் வகுப்பிற்கு 203 சிறைவாசிகளும், 11 ஆம் வகுப்பிற்கு 68 சிறைவாசிகளும் 12 ஆம் வகுப்பிற்கு 68 சிறைவாசிகளும் தேர்வினை எழுதினர்.

**5.8. துணைத் தேர்வுகள் நடத்துதல்**

ஒவ்வொரு ஆண்டும் பொதுத்தேர்வு முடிவுகள் வெளியிட்டவுடன் அதே கல்வியாண்டில் தேர்வர்கள் தங்கள் உயர் படிப்பைத் தொடர்வதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் துணைத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன.

**5.9. பல்வேறு வகையான தேர்வுகள் நடத்துதல்**

***5.9.1. எட்டாம் வகுப்புத் தேர்வு (தனித்தேர்வர்கள்)***

குறைந்தபட்ச எட்டாம் வகுப்புக் கல்வித் தகுதியினை அளிக்கும் வகையில், நேரடித் தனித்தேர்வர்களுக்கு எட்டாம் வகுப்புத் தேர்வு இவ்வியக்ககத்தால் நடத்தப்படுகிறது. 2021-22 கல்வியாண்டில் டிசம்பர் 2021-இல் நடத்தப்பட்ட எட்டாம் வகுப்புத் தேர்வில் 4,209 தனித்தேர்வர்கள் தேர்வெழுதியுள்ளனர்.

***5.9.2. அரசுத் தொழில்நுட்பத் தேர்வுகள்***

வேலைவாய்ப்பிற்கான தொழில்நுட்பக் கல்வித் தகுதியை வழங்குவதற்கு, ஓவியம், தையல், விவசாயம்,

அச்சுக்கலை, இசை, கைத்தறி மற்றும் நெசவு போன்ற பாடப்பிரிவுகளில் அரசுத் தொழில் நுட்பத் தேர்வுகள் நடத்தப்படுகிறது.

### *5.9.3. தொடக்கக் கல்விப் பட்டயத் தேர்வு*

இவ்வியக்ககத்தால் தொடக்கக்கல்வி பட்டயத் தேர்வு நடத்தப்படுகிறது. 2020 - 2021 கல்வியாண்டிற்குரிய தேர்வு செப்டம்பர் 2021-இல் நடைபெற்றது. இத்தேர்வினை 9,536 மாணவர்கள் எழுதியுள்ளனர்.

### *5.9.4. மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் ( UPSC ) மற்றும் மத்திய பணியாளர் தேர்வாணையத்தின் (SSC) தேர்வுகளை நடத்துதல்*

ஆண்டுதோறும் மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் மத்திய பணியாளர் தேர்வாணையத்தால் சென்னையில் நடத்தப்படும் தேர்வுகளுக்கு அரசுத் தேர்வுகள் இயக்ககம் ஒருங்கிணைப்பு முகமையாக செயல்பட்டு வருகிறது.

### 5.10. உதவித் தொகைக்கான தேர்வுகள்

#### *5.10.1. தமிழ்நாடு ஊரக மாணவர்கள் திறனாய்வுத் தேர்வு (TRUST)*

ஊரகப் பகுதிகளில் ஒன்பதாம் வகுப்பு பயிலும் மாணவர்கள், அவர்தம் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருக்கும் பட்சத்தில் இத்தேர்வினை எழுத தகுதியுடையோர் ஆவர். ஒவ்வொரு மாவட்டத்திலும் 50 மாணவர்கள் மற்றும் 50 மாணவியர்கள் எழுத்துத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டு ஆண்டொன்றுக்கு ரூ.1000/- வீதம், தொடர்ந்து நான்கு ஆண்டுகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. 2021-22 ஆம் கல்வியாண்டில் பிப்ரவரி 2022 இல் நடைபெற்ற தேர்வில் 88,658 மாணவர்கள் தேர்வெழுதியுள்ளனர்.

#### *5.10.2. தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்புதவித் தொகை தேர்வு (NMMS)*

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 7ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்று 8-ஆம் வகுப்பு பயின்று வரும் மாணவர்களின் பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.1,50,000/-க்கு மிகாமல் இருக்கும்பட்சத்தில் தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்புதவித்தொகை தேர்வினை

தேர்வெழுத தகுதியுடையவர் ஆவர். தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு 9 முதல் 12 - ஆம் வகுப்பு வரை ஆண்டு தோறும் ரூ.12,000/- (மாதம் ரூ.1000/- வீதம்) உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஒவ்வோராண்டும் இத்திட்டத்தின் கீழ் மாநில அளவில் 6,695 மாணவர்கள் படிப்பு உதவித் தொகை பெறுகின்றனர். 2021-22-ஆம் ஆண்டில் மார்ச் 2022-இல் நடைபெற்ற (NMMS) தேர்வில் 1,75,727 மாணவர்கள் தேர்வெழுதியுள்ளனர்.

*5.10.3. **தேசிய திறனாய்வுத் தேர்வு** (NTSE)*

தேசியக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் ஒருங்கிணைப்பு முகமையாக இவ்வியக்ககம் செயல்பட்டு இத்தேர்வினை நடத்துகிறது. கல்வி ஆண்டில், மத்திய / மாநிலப் பள்ளி குழுமங்களில் 10-ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் அனைவரும் இத்தேர்வினை எழுத தகுதிபடைத்தவர்கள் ஆவர். இவ்வியக்ககத்தால் நடத்தப்படும் முதல்நிலைத் தேர்வின் முடிவுகள் வெளியிடப்பட்ட பின்னர் இரண்டாம் நிலைத் தேர்வினை தேசிய அளவில் NCERT நடத்துகிறது. 2021-22-ஆம் கல்வியாண்டில் பிப்ரவரி 2022-இல் நடைபெற்ற தேர்வில் 2,07,205 மாணவர்கள் எழுதியுள்ளனர். இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் அதிகபட்சம் 200 தமிழக மாணவர்கள்

தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு 11 மற்றும் 12-ஆம் வகுப்பு பயிலும் வரை மாதம் ரூ.1250/-, இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப்படிப்பு படிக்கும் வரை மாதம் தோறும் ரூ.2,000/- உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. ஆராய்ச்சிப் படிப்பு மேற்கொள்ளும் மாணவர்களுக்கு பல்கலைக்கழக மானியக்குழுவினால் நிர்ணயிக்கப்படும் உதவித் தொகை அதிகபட்சமாக நான்கு ஆண்டு காலத்திற்கு வழங்கப்படுகிறது.

**5.11. இயக்ககத்தினை கணினி மயமாக்குதல்**

மாணவர்களின் பெயர்ப் பட்டியல் தயாரித்தல் முதற்கொண்டு தேர்வு முடிவுகள் வெளியிடுதல் வரையிலான அனைத்து தேர்வுப் பணிகளும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் (TNeGA) உதவியுடன் முழு அளவில் கணினிமயமாக்கப்பட்டுள்ளது.

**5.12. அரசுத் தேர்வுகள் சேவை மையங்கள்**

தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளி வளாகங்களில் 241 அரசுத் தேர்வுகள் சேவை மையங்கள் செயல்படுகின்றன. இவ்வியக்ககத்தால் நடத்தப்படும் அனைத்து தேர்வுகளுக்கும் தேர்வர்கள் இணைய வழியில் எளிதாக

விண்ணப்பிக்க இச்சேவை மையங்களில் வசதி செய்யப்பட்டுள்ளது.

### 5.13. தேர்வு முடிவுகள் வெளியிடுதல்

தேர்வர்களின் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் பொழுது பதியப்பட்ட கைப்பேசி எண்ணிற்கு தேர்வு முடிவுகள் குறுஞ்செய்தியாக உடனடியாக அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும், தேர்வு முடிவுகள் இணைய வழி வாயிலாக வெளியிடுவதற்கு www.tn.results.nic.in, www.dge1.tn.nic.in, www.dge2.tn.nic.in ஆகிய மூன்று இணையதளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அட்டவணைப்படுத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை (TML) சம்பந்தப்பட்ட பள்ளிகள் இணையதளம் வாயிலாகப் பதிவிறக்கம் செய்து கொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேல்நிலை பொதுத் தேர்வுக்குரிய விடைத்தாள்களின் நகல்கள் பெறுவதற்கு இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கவும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேர்வர்களின் விண்ணப்பத்தின் அடிப்படையில் விடைத்தாள்களின் நகல்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. இதன் மூலம் மாணவர்கள் அவர்களது மதிப்பெண்கள் மறுகூட்டலுக்கோ அல்லது அவர்களது விடைத்தாள்களின் மறு மதிப்பீட்டிற்கோ விண்ணப்பிக்கலாம்.

## 5.14. சான்றிதழ்கள் வழங்குதல்

### *5.14.1. தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் / மதிப்பெண் பட்டியல்*

தேர்வு முடிவுகள் வெளிவந்த மறு நாள் முதல், இடைநிலைத் தேர்வெழுதிய தேர்வர்கள் அவர்களின் தற்காலிக மதிப்பெண் சான்றிதழையும், மேல்நிலைத் தேர்வெழுதியோர் மதிப்பெண் பட்டியலையும் இணையதளம் (www.dge.tn.nic.in) வாயிலாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

### *5.14.2. மேல்நிலைத் தேர்வுகளுக்கான பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய மதிப்பெண் சான்றிதழ்கள்*

மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளில் முழுமையாக தேர்ச்சி அடைந்தவர்களுக்கு பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய மதிப்பெண் சான்றிதழ்கள் தனித்தனியே வழங்கப்படுகிறது. அத்துடன் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு மதிப்பெண் பட்டியல் வழங்கப்படுகிறது. இடைநிலை / மேல்நிலை தேர்வுகளை ஒன்றுக்கு மேற்பட்ட முறையில் தேர்வெழுதி தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

### *5.14.3. 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழில் பெற்றோர் பெயர் அச்சிடுதல்.*

10-ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்களில் தேர்வர்களின் பெயரோடு பெற்றோர் பெயரும், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அச்சிட்டு தேர்வர்களுக்கு வழங்கப்படுகிறது. இதே நடைமுறை மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு தேர்வர்களுக்கும் 2021-22-ஆம் கல்வியாண்டு முதல் நீட்டிக்கப்பட்டுள்ளது.

### *5.14.4. மதிப்பெண் சான்றிதழின் சான்றிட்ட மதிப்பெண் நகல் மற்றும் மறுபிரதி மதிப்பெண் சான்றிதழ்.*

தேர்வர்களின் விண்ணப்பத்தின் பேரில் மதிப்பெண் சான்றிதழின் சான்றிட்ட மதிப்பெண் நகல் மற்றும் மறுபிரதி மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப் படிவங்கள் இவ்வியக்கக இணைய தளத்தில் உள்ளது. 2021-22 -ஆம் ஆண்டு 3,488 சான்றிட்ட மதிப்பெண் நகல்களும் மற்றும் 10,523 இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

### *5.14.5. புலப்பெயர்ச்சி சான்றிதழ்*

10 மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்வுகளில் தேர்ச்சி பெற்று பிற மாநிலங்களில் மேற்படிப்பைத் தொடர விரும்பும்

தேர்வர்களிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்ட 5 தினங்களுக்குள் புலப்பெயர்ச்சி சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது. 2021-22-ஆம் ஆண்டு 7,010 புலப்பெயர்ச்சி சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

### *5.14.6.மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத் தன்மையினை சரிபார்த்தல்*

மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத்தன்மை கோரி உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் பணி நியமன அதிகாரிகளிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களின் அடிப்படையில் உண்மைத்தன்மை அறியும் பணி மேற்கொள்ளப்படுகிறது. 2021-22-ஆம் ஆண்டில் 3,55,046 மதிப்பெண் சான்றிதழ்களுக்கு உண்மைத்தன்மை சரிபார்க்கப்பட்டுள்ளது.

### 5.15. நிதி ஒதுக்கீடு:

2022-23ஆம் ஆண்டிற்கு வரவு செலவுத் திட்டத்தில் இவ்வியக்ககத்திற்கு ரூ. 128.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி

### 6.1. முன்னுரை

பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வியானது, முற்றிலும் எழுதப் படிக்கத் தெரியாத வயது வந்தோர் அனைவரும் புதிய வடிவிலான அறிவு சார் கற்றல் அனுபவங்கள் மற்றும் திறன்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில், நன்கு வடிவமைக்கப்பட்ட நிலையான மற்றும் முறையான கற்றல் செயல்பாடுகளைக் கொண்ட திட்டங்களை உள்ளடக்கியதாகும். இக்கல்வியானது, வயது வந்தோர் அனைவரும் தங்களுக்கென தனிப்பட்ட ஒரு அடையாளத்தை உருவாக்கிக் கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளதோடு, அவர்களின் கல்வி மற்றும் வருவாய் ஈட்டும் திறனை மேம்படுத்துவதன் மூலம் சமுதாயத்தில் அவர்களுக்கான இடத்தை தக்க வைத்துக் கொள்ளவும் உதவுகிறது. வயது வந்தோர் கல்வியின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கும் வகையிலும், மாநிலத்தில் எழுத்தறிவின்மையை முற்றிலும் அகற்றிடவும், தமிழ்நாடு அரசு பல்வேறு வயது வந்தோர் கல்வித் திட்டங்களை, 1976ஆம் ஆண்டு நிறுவப்பட்ட பள்ளி சாரா மற்றும் வயது

வந்தோர் கல்வி இயக்ககத்தின் வாயிலாகத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

## 6.2. தொலைநோக்கு

மாநிலத்தில் முழு எழுத்தறிவை அடைதல் மற்றும் 15 வயதுக்கு மேற்பட்ட முற்றிலும் எழுத மற்றும் படிக்கத் தெரியாத அனைவரும் தங்கள் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கற்கும் வாய்ப்பை அவர்களுக்கு உகந்த முறைகளில் வழங்குவதை உறுதிசெய்தல்.

## 6.3. குறிக்கோள்கள்

- எழுத்தறிவு பெறாத வயது வந்த அனைவருக்கும் அடிப்படைக் கல்வி அளித்தல்.
- புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள் அடிப்படைக் கல்விக்கு மேல் கற்றலைத் தொடரவும், பள்ளிகளில் அளிக்கப்படும் முறையான கல்விக்கு இணையான கல்வி பெறவும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தல்.
- தொழில் சார்ந்த பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்களின் வருவாய் ஈட்டும் திறனை மேம்படச் செய்தல்.

- புதிதாக எழுத்தறிவு பெற்றோர் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கல்வி கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருதல்.

## 6.4. வளர்ச்சியில் முன்னுரிமை பெறும் மாவட்டங்களில் சிறப்பு எழுத்தறிவுத் திட்டம்

தமிழகத்தில், வளர்ச்சியில் முன்னுரிமை பெறும் இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் (Aspirational Districts) சிறப்பு எழுத்தறிவுத் திட்டமானது ரூ.6.23 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் இலக்கு 15 வயதுக்கு மேற்பட்ட, 1,68,716 முற்றிலும் எழுத மற்றும் படிக்கத் தெரியாதோர் ஆவர். இவர்களுள், 40,288 பேர், இத்திட்டத்தின் முதற் கட்டத்தில் தங்களின் அடிப்படை எழுத்தறிவைப் பெற்று பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் 77,298 கற்போர் சேர்க்கப்பட்டுள்ளனர். 1855 வயது வந்தோர் கல்வி மையங்கள் வாயிலாக கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், இத்திட்டம் சார்ந்த மீதமுள்ள கற்போர் அனைவருக்கும் மார்ச் 2023க்குள் அடிப்படை எழுத்தறிவுக் கல்வி வழங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இரண்டாம்

கட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ள கற்போரின் விவரங்கள் பின்வருமாறு,

| இராமநாதபுரம் மாவட்டம் | | | விருதுநகர் மாவட்டம் | | |
|---|---|---|---|---|---|
| ஒன்றியம் | வயது வந்தோர் கல்வி மையங்களின் எண்ணிக்கை | கற்போர் எண்ணிக்கை | ஒன்றியம் | வயது வந்தோர் கல்வி மையங்களின் எண்ணிக்கை | கற்போர் எண்ணிக்கை |
| இராமநாதபுரம் | 56 | 2836 | விருதுநகர் | 142 | 5848 |
| R.S.மங்களம் | 57 | 2306 | சாத்தூர் | 82 | 3280 |
| நைனார்கோயில் | 42 | 1897 | காரியாப்பட்டி | 72 | 2899 |
| திருவாடானை | 93 | 3707 | அருப்புக்கோட்டை | 80 | 3220 |
| மண்டபம் | 80 | 3293 | நரிக்குடி | 63 | 2526 |
| திருப்புள்ளாணி | 59 | 2833 | திருச்சுழி | 70 | 2760 |
| கடலாடி | 129 | 5136 | ஸ்ரீவில்லிபுத்தூர் | 75 | 3035 |
| பரமகுடி | 57 | 2569 | இராஜபாளையம் | 116 | 4640 |
| போகளூர் | 30 | 1212 | சிவகாசி | 234 | 9704 |
| கமுதி | 67 | 3190 | வேம்பக்கோட்டை | 121 | 4984 |
| முதுகுளத்தூர் | 61 | 2638 | வத்திராயிருப்பு | 69 | 2785 |
| **மொத்தம்** | **731** | **31617** | **மொத்தம்** | **1124** | **45681** |

## 6.5. கற்போம் எழுதுவோம் இயக்கம்

தமிழ்நாட்டில், 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டு, ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் 60:40 என்கிற நிதிப்பங்களிப்பின் கீழ், கற்போம் எழுதுவோம் இயக்கம் அனைத்து மாவட்டங்களிலும்

சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டது. 15 வயதுக்கு மேற்பட்ட, முற்றிலும் எழுத, படிக்கத் தெரியாத 3.10 இலட்சம் பேருக்கு அடிப்படை எழுத்தறிவை வழங்கிடுதலே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ், 3.19 இலட்சம் கற்போர்கள் தங்களின் அடிப்படை எழுத்தறிவுக் கல்வியைப் பெற்று பயனடைந்துள்ளனர்.

தமிழகமானது, கற்போம் எழுதுவோம் இயக்கத்தின் இலக்கை நூறு விழுக்காட்டிற்கும் மேல் எட்டி சாதனை படைத்துள்ளது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ.7.19 கோடி நிதி தமிழ்நாடு மாநில எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 6.6. மாநில எழுத்தறிவு விருது

சிறந்த கற்போர் எழுத்தறிவு மையங்களுக்கான மாநில எழுத்தறிவு விருதானது, பாராட்டுச்சான்றிதழ், கேடயம் மற்றும் பதக்கங்கள் ஆகியனவற்றை உள்ளடக்கியதாகும். மாநிலத்தில், கற்போம் எழுதுவோம் இயக்கச் செயல்பாடுகளை புதிய அணுகுமுறைகளைக் கையாண்டு சிறப்பாகச் செயல்படுத்தியமைக்காக தெரிவு செய்யப்பட்ட 114 சிறந்த கற்போர் எழுத்தறிவு மையங்களுக்கு இவ்விருது முதன்முறையாக வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

## 6.7. நிதி ஒதுக்கீடு

தமிழக அரசால், 2022-23 ஆம் ஆண்டிற்கு வரவுசெலவு திட்டத்தின் கீழ் ரூ.9.67 கோடி நிதி இவ்வியக்ககத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7. பொது நூலக இயக்ககம்

### 7.1. முன்னுரை

பொது நூலகங்கள் அறிவுத்திறனை வளர்ப்பதில் அளப்பரிய பங்காற்றி வருகின்றன. பெரும்பான்மை மக்களின் அறிவு சார் தேவைகளை பூர்த்தி செய்து தரம் வாய்ந்த மனித ஆற்றலை வளர்ப்பதில் மிகப் பெரும் பங்கு வகிப்பவை பொது நூலகங்கள் ஆகும். நூலகங்கள் சமூகத்தின் அனைத்து பிரிவினருக்கும் சமமான சேவை வழங்குவதுடன் முக்கியமாக அறிவு மற்றும் கற்றல் மையங்களாகச் செயல்படுகின்றன.

### 7.2. இலக்கு

சமூகத்தின் அனைத்து பிரிவினருக்கும், வலிமையான தகவல் அடித்தளத்தை உருவாக்கி, அதன் மூலம் பொது மக்களின் சுய, சமூக, பொருளாதார மற்றும் அறிவுசார்ந்து மேம்படுத்துதல்.

### 7.3. குறிக்கோள்கள்

- சிறந்த நூலகச் சேவையின் மூலம் அனைத்துத் தரப்பினரின் தகவல் தேவையினைப் பூர்த்தி செய்தல்.

- பழைய மற்றும் அரிய நூல்களை மின்னுருவாக்கம் செய்து, பாதுகாத்தல்.
- 1,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள கிராமங்களில் நூலக வசதியை ஏற்படுத்துதல்.
- பொது நூலகங்களில் சிறந்த உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் .
- பொது நூலகங்களில் தரமான நாளிதழ்கள், பருவ இதழ்கள் மற்றும் நூல்களை வழங்குதல்.
- நூலகங்களில் நவீன தொழில் நுட்பத்தினைப் புகுத்தி நூலகச் சேவையினை மேம்படுத்துதல்.
- நவீன வசதிகளுடன் புதிய நூலகங்களை உருவாக்குதல்

### 7.4. தமிழ்நாட்டின் பொது நூலகங்கள்

தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948 இன்படி தமிழ்நாட்டில் பொது நூலகங்கள் தொடங்கப்பட்டன. தமிழ்நாட்டில் தற்போது 4650 பொது நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

### *7.4.1. கன்னிமாரா பொது நூலகம்*

தமிழ்நாட்டின் மாநில – மைய நூலகமான கன்னிமாரா பொது நூலகம் 1896 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்தியாவின் நான்கு தேசிய வைப்பு நூலகங்களில் ஒன்றான கன்னிமாரா பொது நூலகம், நூல்கள் மற்றும் செய்தித்தாள்கள் அனுப்புகைச்சட்டம் (பொது நூலகங்கள்) 1954 ன்படி இந்தியாவில் வெளியாகும் அனைத்து நூல்கள், செய்தித்தாள்கள் மற்றும் பருவ இதழ்களின் ஒரு பிரதியை இலவசமாக பெற்று வருகிறது. இந்நூலகத்தில் பல்வேறு பாடங்களை உள்ளடக்கிய 9,19,208 புத்தகங்கள் உள்ளன.

அரியவகை நூல்கள் பிரிவு, பாடநூல் பிரிவு, குறிப்புதவிப் பிரிவு, மொழிப்பிரிவு, பருவ இதழ் பிரிவு, குடிமைப்பணி கல்வி மையம், இந்திய மொழி நூல்கள் பிரிவு மற்றும் குழந்தைகள் பிரிவு எனப் பல்வேறு பிரிவுகள் இந்நூலகத்தில் செயல்பட்டு வருகின்றன. நாட்டுடைமை ஆக்கப்பட்ட நூல்கள் மற்றும் 1950 ஆம் ஆண்டிற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள நூல்கள் பொது மக்களின் பயன்பாட்டிற்காக மின்னுருவாக்கம் செய்து பாதுகாக்கப்பட்டு வருகின்றன. கன்னிமாரா பொது நூலகத்திலுள்ள மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 1,47,446 ஆகும். இந்நூலகத்தைப் பற்றிய அனைத்துத் தகவல்களையும்

www.connemarapubliclibrarychennai.com எனும் இணைய தளத்தின் மூலம் அறிந்துகொள்ளலாம். கன்னிமாரா பொது நூலகம் 2021-ல் தனது 125 வது ஆண்டு நிறைவு பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. கன்னிமாரா பொது நூலகத்தின் பழைய நூலகக் கட்டிடத்தை புதுப்பித்தல் பணிகள் ரூ.1.50 கோடி செலவிலும், மின் சாதனங்கள் மற்றும் உயர் மின்னழுத்த மின்இணைப்பு சீரமைக்கும் பணிகள் ரூ.3.20 கோடி செலவில் பொதுப்பணித்துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### *7.4.2. அண்ணா நூற்றாண்டு நூலகம்*

தெற்கு ஆசியாவிலேயே இரண்டாவது பெரிய நூலகமான அண்ணா நூற்றாண்டு நூலகம் சென்னை கோட்டூர்புரத்தில் 3.75 இலட்சம் சதுர அடி பரப்பளவில் ரூ.197.43 கோடி செலவில் கட்டப்பட்ட 9 தளங்களுடன் அமைந்துள்ளது. இந்நூலகம் 2010 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் நாள் மேனாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் டாக்டர்.மு.கருணாநிதி அவர்களால் பொது மக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டது. இந்நூலகத்தில் உள்ள பல்வேறு பாடங்களை உள்ளடக்கிய 6,22,913 நூல்கள் அனைத்து பிரிவு வாசகர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

இந்நூலகத்தில் சிறப்பாகத் தேர்வு செய்யப்பட்ட பருவ இதழ்கள் பிரிவு, போட்டித் தேர்வு நூல்கள் பிரிவு, குழந்தைகளுக்கான நூல்கள் பிரிவு, தமிழ் மற்றும் மண்டல மொழி நூல்கள் பிரிவு, மின்நூல்கள் பிரிவு மற்றும் அரசினர் கீழ்திசைச் சுவடிகள் நூலகம் ஆகிய பல்வேறு பிரிவுகளும் விழிமாற்றுத் திறனாளர்களுக்கான தனிப்பிரிவு மற்றும் சொந்த நூல்கள் படிக்கும் பிரிவு ஆகியவையும் உள்ளன.

இந்நூலகத்திலுள்ள நூல்களைப் பற்றிய விவரங்களை இணையதளத்தின் வாயிலாக எந்த இடத்திலிருந்தும் எளிமையாகவும் விரைவாகவும் அணுகத்தக்க ஒருங்கிணைந்த நூலக மேலாண்மை அமைப்பு (WEB-OPAC) ஏற்படுத்தப்பட்டுள்ளது. ரேடியோ அலைவரிசை குறியீடு (Radio Frequency Identification – RFID) தொழில்நுட்பத்தின் மூலம் நூல்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நூலகத்திலுள்ள மாநாட்டுக் கூடம், கருத்தரங்குக் கூடம், கலையரங்கம் முதலியவற்றில் அரசால் நிர்ணயிக்கப்பட்ட வாடகை வீதத்தில் அரசு விழாக்கள், கலை மற்றும் பண்பாடு சார்ந்த நிகழ்ச்சிகள், பள்ளி ஆண்டு விழா மற்றும் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா, தேசிய, மாநில அளவிலான தொழில் சார் மாநாடுகள், சிறந்த கல்வியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் நடத்தும்

கருத்தரங்குகள் மற்றும் அரசால் அனுமதிக்கப்படும் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

அண்ணா நூற்றாண்டு நூலகத்தினை புதுப்பொலிவுடன் புனரமைக்கவும் மற்றும் தொழில்நுட்ப வன்பொருட்கள் வாங்கி பொருத்துவதற்கும் ரூ.37.82 கோடி தமிழ் நாடு அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும், மாறிவரும் தொழில்நுட்பங்களுக்கேற்ப, வாசகர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், அனைத்துத் துறைகளிலும் வெளிவந்துள்ள தலைசிறந்த அச்சு நூல்கள், மின் நூல்கள், இணையவழி மின்பருவ இதழ்கள் மற்றும் மின் ஆராய்ச்சி இதழ்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்வதற்காக ரூ.6.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### *7.4.3. சரஸ்வதி மகால் நூலகம் மற்றும் ஆராய்ச்சி மையம்*

மகாராஜா சரபோஜியின் சரஸ்வதி மகால் நூலகம் மற்றும் ஆராய்ச்சி மையம் இந்தியாவின் மிகப்பழமையான மற்றும் குறிப்பிடத்தக்க நூலகங்களுள் ஒன்றாகும். இந்நூலகம் தஞ்சாவூரின் நாயக்க மன்னர்களால் 16-ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டது. இந்நூலகம் கலாச்சார பழம்பொருட்கள், அரிய புத்தகங்கள், ஓவியங்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகளின்

ஒப்பிட முடியாத களஞ்சியத்தைக் கொண்டுள்ளது. இந்நூலகம் 1918 ஆம் ஆண்டு முதல் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது.

இந்நூலகத்தில் தமிழ், சமஸ்கிருதம், மராத்தி மற்றும் ஆங்கில மொழிகளை உள்ளடக்கிய 47,334 கையெழுத்துப் பிரதிகளில் 24,165 ஓலைச் சுவடிகளாகவும், 23,169 காகித கையெழுத்துப் பிரதிகளாகவும் உள்ளன. மேலும் இந்நூலகத்தில் 45,000 புத்தகங்கள் இலக்கியம், கலை மற்றும் கலாச்சாரத்தின் அனைத்து அம்சங்கள் அடங்கிய வரைப்படங்கள்,ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன. இந்நூலக மேம்பாட்டிற்காகவும் பணியாளர் நலனுக்காகவும் ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசால் ரூ.75.00 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. 2021-22-ஆம் ஆண்டிற்கு கூடுதலாக ரூ.50.00 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நூலகத்திலுள்ள தொன்மையான, விலைமதிப்பற்ற அரிய பழைமையான நூல்கள் மற்றும் ஓலைச்சுவடிகள் சாதாரண மக்கள் முதல் ஆராய்ச்சியாளர் வரை பயன்படுத்தும் வகையில் மின்னுருவாக்கம் செய்யப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன.

### *7.4.4. மறைமலையடிகள் நூலகம், சென்னை.*

தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை, மறைமலையடிகளை கௌரவிக்கும் வகையில் 1958-ஆம் ஆண்டு ஆகஸ்டு 24 ஆம் தேதி "மறைமலையடிகள் நூலகம்" நிறுவப்பட்டது. கன்னிமாரா பொதுநூலக வளாகத்தின் ஒரு பகுதியில் இந்நூலகம் செயல்பட்டு வருகிறது. சங்க இலக்கியம், திருக்குறள், இலக்கணம், இதழியல், வாழ்க்கை வரலாறு, நாலடியார், திருவாசகம், அகராதிகள் மற்றும் மருத்துவம் தொடர்பான நூல்கள் போன்ற குறிப்பிடத்தக்க பண்ட இலக்கியத் தொகுப்புகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இந்நூலகத்திற்கு ரூ.1 இலட்சம் அரசு மானியம் வழங்கப்படுகிறது.

### *7.4.5. டாக்டர் உ. வே. சா. நூலகம், சென்னை.*

தலைசிறந்த தமிழறிஞரும், ஆய்வாளருமான முனைவர் உ.வே.சா அவர்களின் நினைவாக 1943 ஆம் ஆண்டு இந்நூலகம் நிறுவப்பட்டது. இந்நூலகத்தில் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், அகப்பொருள் விளக்கம், அகராதி நிகண்டு, இலக்கிய விளக்கம், நேமிநாதம், சேக்கிழார் புராணம், தொன்னூல், வீரசோழியம், தொல்காப்பியம்,பஞ்சகதை, பெரிய புராணம், இலக்கணக்கொத்து என 2,200

ஓலைச்சுவடிகள் மற்றும் தமிறிஞர்கள் பலர் டாக்டர் உ.வே.சா.அவர்களுக்கு எழுதிய 3000-க்கும் மேற்பட்ட கடிதங்கள், 1893 முதல் 1939 வரை உ.வே.சா.அவர்கள் எழுதிய நாட்குறிப்புகள் எனப் பல காணக்கிடைக்காத அரிய தமிழ் நூல்கள் புதையலாக போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. 2021-22 ஆம் நிதியாண்டில் இந்நூலகத்திற்கு ரூ.27.20 இலட்சம் அரசு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

*7.4.6. மாவட்ட மைய நூலகங்கள்*

தமிழ்நாடு பொது நூலக விதிகள் 1950 இன் கீழ் மாவட்ட மைய நூலகங்கள் நிறுவப்பட்டன. தமிழக அரசு படிப்படியாக அனைத்து மாவட்ட மைய நூலகங்களையும் டிஜிட்டல் மயமாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. வாசகர்கள் குறிப்பாக பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் பழமையான அரிய நூல்களை அணுக வசதியாக மின்புத்தக மென்பொருள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்நூலகங்களில் பல்வேறு துறைசார்ந்த 70 இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல்கள் மற்றும் பருவ இதழ்கள், குறிப்புதவி நூல்கள் பிரிவு, போட்டித் தேர்வு பிரிவு, மகளிர் மற்றும் குழந்தைகள் பிரிவு, சொந்த நூல்கள் படிக்கும் பிரிவு, மாற்றுத்திறனாளிகள் பிரிவு மற்றும் இணைய பயன்பாட்டு

வசதிகளுடன் நூலகம் செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 13,09,447 ஆகும். 2021-22 ஆம் நிதியாண்டில் இந்நூலகங்களால் 6,85,414 வாசகர்கள் பயனடைந்துள்ளனர்.

### *7.4.7. கிளை நூலகங்கள்*

பெருகி வரும் மக்கள் தொகையைக் கருத்தில் கொண்டு 5000 முதல் 50,000 வரை மக்கள் தொகை கொண்ட கிராம மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் நூலகச் சேவைகளை விரிவுபடுத்தி வழங்கும் நோக்கில் தொடங்கப்பட்டவையே கிளை நூலகங்களாகும். தற்போது 314 முழுநேர கிளை நூலகங்களை உள்ளடக்கிய 1926 கிளைநூலகங்கள் 5,79,74,340 நூல்கள் மற்றும் 62,76,245 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகின்றன. 2021-2022-ஆம் ஆண்டில் 83,37,779 வாசகர்கள் இந்நூலக வசதிகளைப் பயன்படுத்தி வருகின்றனர். குழந்தைகள், மாணவர்கள், பெண்கள், பணிநாடுவோர் மற்றும் மூத்த குடிமக்கள் பயன்பெறும் வகையில் இந்நூலகங்களில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

### *7.4.8. ஊர்ப்புற நூலகங்கள்*

ஊர்ப்புற நூலகங்கள் 1996-ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டு செயலாற்றி வருகின்றன. புதிய தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி கணினி வசதிகளுடன் ஊர்ப்புற நூலகங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளதால் 2021-22 ஆம் ஆண்டில் 52,51,808 வாசகர்கள், 21,08,979 உறுப்பினர்கள் பயன்பெற்றுள்ளனர். இந்நூலகங்களில் 2,09,82,767 நூல்கள் இடம் பெற்றுள்ளன.

### *7.4.9. நடமாடும் நூலகங்கள்*

மலைப்பகுதிகள் மற்றும் எளிதாகச் செல்ல இயலாத தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் நூலக சேவை வழங்கப்படாத மக்களுக்கு நூலகத் தேவையை நிறைவு செய்யும் வகையில் நூல்கள் மற்றும் பருவ இதழ்களை வாகனங்கள் மூலம் எடுத்துச் செல்லும் நடமாடும் நூலகங்கள் மாநிலத்தின் 14 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. இவ்வாகனங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட புத்தங்களின் தொகுப்புகள் மற்றும் குறுந்தகடுகள் வரைபடங்கள் ஆகியவற்றை கிராமப்புற பள்ளி மாணவர்களிடையே நூலக வாசிப்பை மேம்படுத்தும் வகையில் குறிப்பிட்ட கால இடைவெளியில் பள்ளிகளுக்குச் சென்று சேவையாற்றி வருகிறது.

இவற்றின் மூலம், 33,466 உறுப்பினர்களும் 13,390 வாசகர்களும் பயனடைந்து உள்ளனர்.

*7.4.10. பகுதிநேர நூலகங்கள்*

அடித்தட்டு மக்களையும் பொது நூலகச் சேவை சென்றடைய வேண்டும் என்ற உயரிய நோக்கில் உருவாக்கப்பட்டவை பகுதிநேர நூலகங்கள் ஆகும். இப்பகுதி நேர நூலகங்கள் வாயிலாக 3,25,732 உறுப்பினர்களும், 7,50,205 வாசகர்களும் பயனடைந்துள்ளனர்.

**7.5.பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான பணிநியமனம்**

பொது நூலக இயக்ககத்தின் கீழ் செயல்படும் மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில், பூவிருந்தவல்லி அரசினர் தொழிற்பயிற்சி மையத்தில் புத்தகம் கட்டும் பயிற்சி முடித்த பார்வை குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகளுக்கு நூல் கட்டுநர் பணியிடத்தில் 17 நபர்களுக்கும், நூல் கட்டும் உதவியாளர் பணியிடத்தில் 14 நபர்களுக்கும் பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. மாண்புமிக தமிழக முதலமைச்சர் அவர்கள் இவர்களுக்கான பணிநியமன ஆணைகளை சர்வதேச

மாற்றுத் திறனாளிகள் தினமான டிசம்பர் 3, 2021 அன்று வழங்கினார்.

## 7.6. நிதி ஆதாரம்

### *7.6.1. நூலக நிதி*

நூலக வரியே பொது நூலகத்துறையின் முக்கிய வருவாய் ஆதாரம் ஆகும். தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948 பிரிவு 12 (1) (எ) –இன்படி உள்ளாட்சி அமைப்புகள் வசூலிக்கும் சொத்து வரியில் ஒரு ரூபாய்க்கு 10 பைசா வீதம் நூலக வரியாக வசூலிக்கப்படுகிறது. இந்நூலக நிதியிலிருந்து நூலகங்களுக்குத் தேவையான நூல்கள், பருவ இதழ்கள் மற்றும் நாளிதழ்கள் வாங்குதல், கட்டடங்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல், பழுதடைந்த நூலகக் கட்டடங்களைப் பழுதுபார்த்தல், நூலகங்களுக்குத் தேவையான எழுதுபொருட்கள், நுகர்பொருட்கள் நூலகப் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் பிறபடிகள் போன்ற செலவினங்கள் அனைத்தும் நேரடியாக மேற்கொள்ளப்படுகின்றன. 2020-21 ஆம் ஆண்டில் நூலக வரியாக ரூ.71.02 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

### *7.6.2. பொது நிதி*

நிதிநிலையில் நலிவடைந்த நூலக ஆணைக்குழுக்களுக்கு உதவும் வகையில் பொது நிதி உருவாக்கப்பட்டு அதிக வருவாய் உள்ள மாவட்டங்களிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் நூலக வரி வசூலில் 20 சதவீதத்திற்கு மிகாமல் பெறப்படும் பொது நிதியானது வருவாய் குறைவாக நலிவுள்ள நிலையில் உள்ள மாவட்டங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு குறிப்பிட்ட இனங்களுக்குச் செலவிடப்படுகிறது.

### *7.6.3. இராஜாராம் மோகன்ராய் நூலக அறக்கட்டளை மானியம்*

கொல்கத்தாவில் உள்ள இராஜாராம் மோகன்ராய் நூலக அறக்கட்டளை நிறுவனம் நூலகங்களுக்கு இணை மானியம் மற்றும் இணையில்லா மானியம் மூலம் நிதியுதவி வழங்கி வருகிறது. பொது நூலகங்களின் வளர்ச்சிக்காக புதிய நூலகக் கட்டடங்கள் கட்டுதல், நூலகங்களில் குழந்தைகள் பிரிவு உருவாக்குதல், புதிய நூல்கள் வாங்குதல், நூலகர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளித்தல், கருத்தரங்கு நடத்துதல், மற்றும் நூலகத்தின் அடிப்படை வசதியினை மேம்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு நிதியுதவி வழங்கி ஊக்குவித்து வருகிறது.

## 7.7. மதுரையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு நூலகம்

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு நூலகத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 11.01.2022 அன்று அடிக்கல் நாட்டினார். கலைஞர் நினைவு நூலகத்திற்குத் தேவையான நூல்கள், மின்நூல்கள் இணையவழி பருவ இதழ்கள் மற்றும் ஆராய்ச்சி நூல்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்வதற்கு ரூபாய் 10 கோடியும், தொழில் நுட்ப சாதனங்கள் கொள்முதல் செய்வதற்கு ரூபாய் 5 கோடியும் தமிழ்நாடு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நூலகம், மாணவர்கள், கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், எழுத்தாளர்கள், பல்வேறு போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் இளைஞர்கள், பள்ளிச்சிறார்கள் என சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் அறிவொளி அளிக்கும் கலங்கரை விளக்கமாக அமையவுள்ளது.

## 7.8. செந்நாப்புலவர் ஆ. கார்மேகனார் பெயரில் புதிய நூலகக் கட்டடம்

செந்நாப்புலவர் ஆ. கார்மேகனார் அறிவு நூல் திரட்டு, கண்ணகி தேவி, காப்பியக் கதைகள், மூவர் உலா ஆராய்ச்சி, தமிழ்மொழியின் மறுமலர்ச்சி, நல்லிசைப் புலவர்கள் போன்ற

பல நூல்கள் இயற்றியுள்ளார். தமிழுக்கு அவர் ஆற்றிய இலக்கியச் சேவையினைப் போற்றும் வகையில், இராமநாதபுரம் மாவட்டம் அபிராமத்தில் தற்போது வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் கிளை நூலகத்திற்கு ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நூலகம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

## 7.9. தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948 மற்றும் பொது நூலக விதிகள் 1950-திருத்தங்கள் மேற்கொள்ள உயர்மட்டக் குழு அமைப்பு

இந்தியாவிலேயே பொது நூலக சேவைகளுக்கென தனியாகச் சட்டம் இயற்றிய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும். 1948 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் மற்றும் பொது நூலக விதிகள் 1950 ஆகியவற்றை தற்போதுள்ள பணிச்சூழலுக்கு ஏற்பவும் மற்றும் மாநிலத்தில் நூலகங்களின் சேவையை மேம்படுத்தவும் தக்க திருத்தங்கள் மேற்கொள்வது குறித்து பரிசீலிக்க ஏதுவாக, முனைவர். மா.இராஜேந்திரன், முன்னாள் துணைவேந்தர், தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் அவர்கள் தலைமையில் உயர்மட்டக் குழுவினை அமைத்து 19.01.2022 அன்று தமிழ் நாடு

அரசால் ஆணையிடப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது.

## 7.10. பொது நூலகங்களுக்கு புத்தகங்கள் கொள்முதலில் வெளிப்படைத்தன்மை

மாறி வரும் மக்களின் மனநிலை மற்றும் தேவைகளைக் கருத்தில் கொண்டு அவற்றை நிறைவு செய்யும் வகையில் அறிவியல், சமூகம், வரலாறு இலக்கியம், கலாச்சாரம் மற்றும் அறிவுசார் தேடல்களுக்கு ஏற்ப தேர்வுக்குழுவின் மூலம் பொது நூலகங்களுக்கான நூல்கள் மற்றும் பருவ இதழ்கள் தேர்வு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் வசூலிக்கப்படும் நூலக வரியில் 25 விழுக்காடு நூல்கள் வாங்குவதற்கும், 15 விழுக்காடு பருவ இதழ்கள் வாங்குவதற்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மேலும், பொது மக்களுக்குத் தேவையான மிகச் சிறந்த புத்தகங்கள், நாளிதழ்கள், பருவ இதழ்கள் வழங்குவதை உறுதி செய்யும் வகையில், தற்போதுள்ள புத்தகங்களுக்கான கொள்முதல் கொள்கையில் தக்க திருத்தங்கள் மேற்கொண்டு, புத்தகக் கொள்முதலின் ஒவ்வொரு படிநிலையிலும் ஒளிவு மறைவின்றி வெளிப்படைத் தன்மை உறுதி செய்ய குழு அமைக்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**7.11.அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் 'பாரதியியல்' பிரிவு**

மகாகவி பாரதியாரின் மறைந்த நூற்றாண்டின் நினைவாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் வெளியிட்ட அறிவிப்பின் படி, அன்னாரின் நூல்கள் தொகுக்கப்பட்டு சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் 'பாரதியியல்' என்ற தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**7.12. முனைவர் எஸ்.ஆர். அரங்கநாதன் நினைவு நூலகம்**

தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் உருவாக முக்கியப் பங்காற்றிய இந்திய நூலகத் தந்தை முனைவர் எஸ்.ஆர். அரங்கநாதன் அவர்களை நினைவூட்டும் வகையில் அவர் பிறந்த மயிலாடுதுறை மாவட்டத்திலுள்ள சீர்காழியில் ரூ.1.32 கோடி மதிப்பீட்டில் மாதிரி நூலகம் அமைக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**7.13. கணினிமயமாக்குதல்**

பெருகிவரும் வாசக பொது மக்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு, அவற்றை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை அளித்து, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் முழுநேர கிளை

நூலகங்கள் இணைய வசதியுடன் கணினிமயமாக்கப் பட்டுள்ளன.

நூலக மேலாண்மை (KOHA) எனப்படும் கட்டற்ற மென்பொருளை கன்னிமாரா பொது நூலகம், அண்ணா நூற்றாண்டு நூலகம், 32 மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் 30 முழுநேரக் கிளை நூலகங்கள் பயன்படுத்தி வருகின்றன. இதன் மூலம் நூல் இரவல் வழங்கல் மற்றும் நூலகத் தொழில் நுட்பப் பணிகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

### 7.14. கிராமப்புற நூலகங்களில் மின்நூலக சேவை

தமிழ்நாடு அரசு பொது நூலக இயக்ககத்தின் கீழ் 1926 கிளை நூலகங்கள் மற்றும் 1,915 ஊர்ப்புற நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. சர்வதேச நாளிதழ்கள், பருவ இதழ்கள் கிராமப்புறங்களில் உள்ள வாசகர்களுக்கும் கிடைக்கும் வண்ணம் அனைத்து நூலகங்களிலும் மின்நூலகம் அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.2.40 கோடியில் ஏற்படுத்தப்படும்.

### 7.15. குடிமைப்பணி கல்வி மையங்கள்

கன்னிமாரா பொது நூலகம், மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் மாநிலம் முழுவதும் தாலுகா தலைமையிடங்களில் அமைந்துள்ள 289 நூலகங்களில் உள்ள குடிமைப்பணிப்

பயிற்சி மையத்திற்குத் தேவையான நூல்கள், நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்கள் வாங்கி வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 7.16. மின்னுருவாக்கம் (Digitization)

பொது நூலக இயக்ககம், நமது கலாச்சாரம், வரலாறு மற்றும் மொழியின் இயற்பியல் வடிவத்தில் கிடைக்கும் பரந்த அளவிலான அறிவை டிஜிட்டல் மயமாக்குதல் மற்றும் பாதுகாப்பதில் முன்முயற்சி எடுத்து வருகிறது. கன்னிமாரா பொது நூலகம், தமிழ்நாடு தொல்லியல் நூலகம், தமிழ்நாடு ஆவணகாப்பக நூலகம், பல்கலைக்கழக நூலகங்கள், கல்லூரி நூலகங்கள் மற்றும் தனியார் நூலகங்களில் உள்ள அரிய நூல்களில் 21,043 நூல்கள் (30 இலட்சத்திற்கும் மேற்பட்ட பக்கங்கள்), 1000-த்திற்கும் மேற்பட்ட வரைப்படங்கள் மற்றும் 2.54 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஓலைச்சுவடி பக்கங்கள் மின்னுருவாக்கம் செய்யப்பட்டுள்ளன. இந்த மின்நூலகத்தினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நவம்பர் 23, 2021 அன்று தொடங்கி வைத்தார். https://tamilnadupubliclibraries.org என்ற இணையதளம் மூலம் மக்கள் இலவசமாக பயன்படுத்திக் கொள்ளவும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 7.17. பொது நூலகங்களுக்கான ஒருங்கிணைந்த நூற்பட்டியல் (Union Cataloque)

கன்னிமாரா பொது நூலகம், அண்ணா நூற்றாண்டு நூலகம், 32 மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் பிற அரசு உதவிபெறும் நூலகங்களிலுள்ள நூல்களின் விவரங்கள் அடங்கிய ஒருங்கிணைந்த நூற்பட்டியல் உருவாக்கும் பணிகள் பொது நூலக இயக்ககத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்படி அனைத்து நூல்களும் MARC 21 மற்றும் AACR2 போன்ற சர்வதேச தரநிலைகளின் அடிப்படையில் சரி செய்யும் பணி ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் மூலம் மேற்கொள்ளப்பட்டு, அண்ணா நூற்றாண்டு நூலகத்திலுள்ள கணினி சர்வரில் Koha என்ற கட்டற்ற (Open Source) மென்பொருளில் பதிவேற்றம் செய்யப்பட்டு, ஒரே இணையதளத்தின் மூலம் புத்தகங்களை தேடும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 7 லட்சம் நூல்களின் விவரங்களுடன் ஒருங்கிணைந்த நூற்பட்டி (Union Catalogue) பொது மக்களுக்கு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் 28 டிசம்பர் 2021 அன்று வெளியிடப்பட்டது.

https://tamilnadupubliclibraries.org என்கிற இணைய தளத்தின் மூலம் அனைத்துப் பொது நூலகங்களிலும் உள்ள நூல்களைத் தேடும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 7.18. வேலைவாய்ப்புச் செய்தி கைபேசி செயலி மற்றும் இணையதளம்

போட்டித் தேர்வர்கள் தங்களுக்குத் தேவையான பல்வேறு போட்டித் தேர்வு மற்றும் வேலைவாய்ப்பு பற்றிய தகவல்களை அறிய வெவ்வேறு நாளிதழ்கள், பருவ இதழ்கள் மற்றும் இணைய தளங்களை பார்வையிட வேண்டியுள்ளது. இச்சிரமங்களைக் களைய பொது நூலக இயக்ககம் "உங்கள் நூலகம் உள்ளங்கையில்" என்ற திட்டம் அண்ணா நூற்றாண்டு நூலகம் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்படி, "TN Employment News" (Mobile App)" மற்றும் www.tnemployment.in என்ற இணைய தளம் தொடங்கப்பட்டுள்ளது.

### 7.19. விழி மாற்றுத் திறனாளர்களுக்கான ஒலி நூல்கள் உருவாக்கம்.

கல்வி மற்றும் போட்டித் தேர்வு தொடர்பான அச்சுப்புத்தகங்கள் Accessible Text, Daisy epub3 மற்றும் ஒலிவடிவங்களில் மாற்றப்பட்டு, விழி மாற்றுத் திறனாளர்கள்

எளிதில் அணுகும் வகையில் இணையதளத்தின் மூலமாகப் பதிவிறக்கம் செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டு, அனைத்து மாவட்ட மைய நூலகங்களிலுள்ள மாற்றுத்திறனாளிகள் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 7.20. குழந்தை எழுத்தாளர்களுக்கு “கவிமணி விருது”

குழந்தைகளின் எழுத்தார்வத்தை ஊக்குவிக்கும் வண்ணம், 18 வயதிற்குட்பட்ட இளம் எழுத்தாளர்களில், ஆண்டுதோறும் மூன்று சிறந்த எழுத்தாளர்களைத் தேர்வு செய்து ரூ.25,000 ரொக்கம், கேடயம் மற்றும் சான்றிதழுடன் "கவிமணி விருது" வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 7.21. செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கம்

தமிழ் மொழிக்கு அளப்பரிய பங்காற்றிய எழுத்தாளர்கள் மற்றும் தமிழறிஞர்களைப் போற்றும் வகையிலும், அத்தகைய அறிஞர் பெருமக்களை இளம் தலைமுறையினர் முன்மாதிரியாகக் கொள்ளும் வகையிலும் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் “செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கம்” அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த அரங்கத்தில் உயரிய விருதுகளைப் பெற்ற தமிழ் எழுத்தாளர்கள், தமிழ்

மொழி வளர்ச்சிக்கு வித்திட்ட அறிஞர்களின் புகைப்படங்கள், கையெழுத்துப் பிரதிகள் மற்றும் படைப்புகள் காட்சிப்படுத்தப்படும். இளம் தலைமுறையினரின் எழுத்தார்வத்தைத் தூண்டும் வகையில் மேற்கூறிய படைப்பாளிகளின் படைப்புகள் சார்ந்த நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்படும்.

### 7.22. வாசகர் வட்டம்

நூலக இயக்ககம், மக்கள் இயக்கமாக மாற்றமடைய வேண்டும் என்ற நோக்கில் அனைத்துப் பொது நூலகங்களிலும் கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், நூலக உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் மக்களைக் கொண்ட வாசகர் வட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இவ்வாசகர் வட்டம் மூலம் நூலகங்களின் விரிவான பயன்பாடு உறுதி செய்யப்படுகிறது. புதிய நூல்கள் மற்றும் புதிய எழுத்தாளர்களை அறிமுகப்படுத்துதல், இலக்கியச் சொற்பொழிவுகள், பட்டிமன்றங்கள், புத்தக கண்காட்சி, சொற்பொழிவு, கதை சொல்லுதல், கட்டுரை மற்றும் வினாடி வினா போட்டி உள்பட பல்வேறு நிகழ்ச்சிகள் இவ்வாசகர் வட்டங்களால் நடத்தப்படுகின்றன.

### 7.23. நன்கொடை

பொது நூலகத்துறை வளர்ச்சியில் நன்கொடையாளர்களின் பங்கேற்பும் அடங்கும். ஒருவர் ரூ. 1,000/- ரூ.5,000/- மற்றும் ரூ.10,000/- என நூலகங்களுக்கு நன்கொடையாக அளிப்பதன் மூலம் முறையே புரவலர், பெரும் புரவலர் மற்றும் கொடையாளராகிறார்கள். இவ்வாறு பெறப்படும் நன்கொடையானது வங்கியில் நிரந்தர வைப்புக் கணக்கில் ஆண்டுதோறும் செலுத்தப்பட்டு, பெறப்படும் வட்டித்தொகை பொது நூலகங்களின் வளர்ச்சிப் பணிகளுக்காகச் செலவிடப்படுகிறது.

### 7.24. நூலக நிகழ்ச்சிகள்

இந்திய நூலகவியல் மற்றும் தகவல் அறிவியலின் தந்தை சீ.இரா.அரங்கநாதன் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாதம் 12 ஆம் நாள் நூலக தினமாகக் கொண்டாடப்படுகிறது. ஒவ்வொராண்டும் மே 22 ஆம் நாள் நூலக தினமாகக் கொண்டாடப்படுகிறது. நூலகங்கள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தி, நூலகங்களின் பங்களிப்பைப் பாராட்டும் வகையில் ஆண்டுதோறும் நவம்பர் 14 முதல் 20 வரை தேசிய நூலக வார விழா கொண்டாடப்படுகிறது.

மேலும், ஏப்ரல் 23 அன்று உலக புத்தக தினமாக கொண்டாடப்படுகிறது.

### 7.25. நூலக விருதுகள்

மிகச் சிறந்த செயலாக்கம் கொண்ட நூலகர்களை கௌரவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் வெள்ளிப்பதக்கத்துடன் ரூ.5000 ரொக்கப் பரிசைக் கொண்ட முனைவர் எஸ்.ஆர். அரங்கநாதன் விருதும், நூலக மேம்பாட்டு நடவடிக்கைகளைச் சிறப்பாக மேற்கொள்ளும் நூலகங்களுக்கு, சிறந்த நூலக விருதும் வழங்கப்படுவதோடு நூலக வளர்ச்சிக்குத் துணைபுரியும் வாசக வட்டத் தலைவர்களைப் பாராட்டும் வகையில் ரூ.5000 மதிப்புள்ள கேடயம் மற்றும் சான்றிதழுடன் கூடிய நூலக ஆர்வலர் விருதும் வழங்கப்படுகிறது.

### 7.26. நிதி ஒதுக்கீடு

பொது நூலக இயக்ககத்திற்கு 2022-23 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடாக ரூ.287.27 கோடி அரசு வழங்கியுள்ளது.

# 8.ஆசிரியர் தேர்வு வாரியம்

## 8.1.அறிமுகம்

ஆசிரியர் தேர்வு வாரியம் 1987-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. அரசுப் பள்ளிகளுக்கான ஆசிரியர்களைத் தெரிவு செய்வது, கல்லூரிக் கல்வி இயக்ககம், தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் மற்றும் சட்டக் கல்வி இயக்ககத்தின் கீழ்வரும் உதவிப் பேராசிரியர் பணியிடங்களைத் தெரிவு செய்வது ஆகிய பணிகளை ஆசிரியர் தேர்வு வாரியம் மேற்கொண்டு வருகிறது. ஆசிரியர் தேர்வு வாரியம் தோற்றுவிக்கப்பட்ட நாள் முதல் இதுவரை 1,64,455 ஆசிரியர்கள் பள்ளி, கல்லூரிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும், தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வினை ( TNTET ) நடத்தும் முகவாண்மையாகவும் ஆசிரியர் தேர்வு வாரியம் செயல்படுகிறது.

## 8.2.நோக்கம்

பல்வேறு துறைகளின் தேவைகளுக்கேற்ப தகுதியான ஆசிரியர்களைத் தெரிவு செய்வதே ஆசிரியர் தேர்வு வாரியத்தின் முதன்மையான நோக்கமாகும். ஆசிரியர் தேர்வு வாரியமானது, வெளிப்படைத் தன்மையுடன்

தமிழ்நாடு மின் ஆளுமை முகவாண்மையின் (TNeGA) நவீன தொழில்நுட்ப உதவி மற்றும் வழிகாட்டுதலுடன் அனைத்துத் தேர்வுகளை நடத்துகிறது.

**8.3.தெரிவுமுறையும் நவீனமயமாக்கலும்**

எந்தவொரு தெரிவு முறையும் முழு மந்தணத்தன்மைக்கு உறுதி அளிப்பதாக இருத்தல் வேண்டும். எனவே, ஆசிரியர் தேர்வு வாரியம் மிகக் கடுமையான விதிமுறைகளைப் பின்பற்றிவருகிறது. பணித்தெரிவிற்கான வெளிப்படைத்தன்மை மற்றும் துல்லியத்தினை உறுதி செய்யும் பொருட்டு, தெரிவு நடைமுறைகளில் தொழில்நுட்பம் மற்றும் கணினி பயன்பாடுகளை பல்வேறு நிலைகளில் பயன்படுத்துகிறது. ஆசிரியர் தேர்வு வாரிய அலுவலகத்தில் அனைத்துப்பகுதிகளும் CCTV உதவியுடன் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் தேர்வுகள் தொடர்பாக பணிநாடுநர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்து பதிலளிப்பதற்கு அனைத்து வசதிகளுடன் கூடிய தகவல் மையம் செயல்பட்டு வருகிறது. ஆசிரியர் தேர்வு வாரியத்தால் கணினிவழியாக நடத்தப்படும்

அனைத்துத் தேர்வுகளும் CCTV மூலம் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. மேலும் மாவட்டங்களில் நடைபெறும் அனைத்துத் தேர்வுகளும் CCTV மூலம் கண்காணிக்கப்படுகின்றன. மாவட்ட அளவில் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் அனைத்துத் தேர்வுகளும் தலைமையிடத்திலிருந்து நேரடியாக காணொலி (Live Stream) மூலம் கண்காணிக்கப்படுகின்றன.

### 8.4.தெரிவுப்பணியி வெளிப்படைத் தன்மை

ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் அனைத்துத் தேர்வுகளுக்கும் தேர்வு நடந்து முடிந்த பின்னர்,

- வினாக்களுக்குரிய விடைகள் ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் வெளியிடப்படுகிறது, தேர்வர்களிடமிருந்து விடைகள் சார்ந்து பெறப்படும் அனைத்துக் கோரிக்கைகளும் பரிசீலிக்கப்பட்டு, இணையதளம் வாயிலாக பதிலளிக்கப்படுகிறது.

- அனைத்து தேர்வர்களுக்கும் அவர்கள் அளித்த பதில் (Response sheet) மற்றும் கேள்வியின்

(Copies of Questions) நகல் இணையதளம் வாயிலாக பகிரப்படுகிறது.

- அனைத்துத் தெரிவு நடைமுறைகளும் தகவல்களும் ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் வெளியிடப்படுகின்றன. (http://trb.tn.nic.in)

**8.5. சாதனைகள்**

2021-22 ஆம் ஆண்டில் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் வட்டாரக் கல்வி அலுவலர் பணியிடத்திற்கு வெளியிடப்பட்ட அறிவிக்கையின்படி, போட்டி எழுத்துத் தேர்வினைத் தொடர்ந்து தெரிவு நடைமுறைகளைப் பின்பற்றி 96 தகுதியான பணிநாடுநர்கள் தெரிவு செய்யப்பட்டு தெரிவர் பட்டியல் சார்ந்த துறைக்கு வழங்கப்பட்டது. மேலும், ஆசிரியர் தேர்வு வாரியம் 60 கணினிப் பயிற்றுநர் நிலை-1 காலிப்பணியிடங்களுக்கு தகுதிவாய்ந்த பணிநாடுநர்களைத் தெரிவு செய்து தெரிவர் பட்டியலை சார்ந்த துறைகளுக்கு வழங்கியுள்ளது.

அரசுப் பல்தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளர் பணித் தெரிவிற்கான அறிவிக்கை ஆசிரியர் தேர்வு வாரியத்தால் பின்வருமாறு வெளியிடப்பட்டது.

| .அறிவிக்கை எண் மற்றும் நாள் | நடைமுறையில் உள்ள தெரிவுப்பணி | அறிவிக்கை வெளியிடப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| எண் 14 / 2019 நாள் 27.11.2019 | அரசு பல்தொழில் நுட்பக் கல்லூரி விரிவுரையாளர்கள் | 1060 |

08.12.2021 முதல் 12.12.2021 வரை கணினி வழியாக தேர்வு நடைபெற்று முடிந்துள்ளது. தேர்வு முடிவுகள் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்/ உடற்கல்வி இயக்குநர் நிலை -1 / கணினிப் பயிற்றுநர் நிலை – 1 பணித் தெரிவிற்கான அறிவிக்கை ஆசிரியர் தேர்வு வாரியத்தால் பின்வருமாறு வெளியிடப்பட்டது.

| அறிவிக்கை எண் மற்றும் நாள் | நடைமுறையில் உள்ள தெரிவுப்பணி | அறிவிக்கை வெளியிடப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| எண் 01 / 2021 நாள் 09.09.2021 | முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்/ உடற்கல்வி இயக்குநர் நிலை -1/ கணினி பயிற்றுநர் நிலை - 1 | 2207 |

12.02.2022 முதல் 20.02.2022 வரை கணினி வழியாக முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்/ உடற்கல்வி இயக்குநர் நிலை -1 / கணினிப் பயிற்றுநர் நிலை – 1 தேர்வு நடைபெற்று முடிந்துள்ளது.

## 8.6 வருடாந்திரத் திட்டம் 2022

2022 ஆம் ஆண்டுப் பணித்தெரிவிற்கான உத்தேசக் கால அட்டவணை ஆசிரியர் தேர்வு வாரியத்தால் வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு (TNTET) நடத்துவதற்கு அறிவிக்கை வெளியிடப்பட்டு அதற்கான தேர்வு விரைவில் நடத்தப்படவுள்ளது.

இதேபோல் இடைநிலை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், SCERT விரிவுரையாளர்கள், அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி உதவிப் பேராசிரியர்கள் மற்றும் அரசுப் பல்தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளர்கள் ஆகிய நியமனங்களுக்கான தெரிவுப் பணிகள் இவ்வாண்டில் மேற்கொள்ளப்படும்.

## 8.7 ஆசிரியர் தேர்வு வாரியம் - மறுசீரமைப்பு நடவடிக்கைகள்

ஆசிரியர் தேர்வு வாரியத்தின் பணிகளை விரைவுபடுத்தும் பொருட்டு மறுசீரமைப்பதற்கான வழி வகைகளை சமர்ப்பித்திட அரசால் வல்லுநர் குழு

அமைக்கப்பட்டுள்ளது. வல்லுநர் குழுவின் பரிந்துரைகள் இறுதி செய்யப்பட்டு வருகின்றன.

## 8.8 நிதி ஒதுக்கீடு

2022-23 ஆம் ஆண்டிற்கு ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு ரூ.4.79 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 9. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

## 9.1.முன்னுரை

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் "தமிழ் வெளியீட்டுக் கழகம்" என்னும் பெயரில் பிற மொழிகளில் உள்ள உயர்கல்வி நூல்களைத் தமிழில் மொழிபெயர்ப்பதற்காக 1961-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இக்கழகம் 1970-ஆம் ஆண்டு "தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்" என்றும், பின்பு, பாடநூல்களை அச்சிட்டு விநியோகம் செய்தல் மற்றும் பல்வேறு இலக்கியம், அறிவியல் நூல்களை அச்சிட்டு விற்பனை செய்யதல் ஆகிய பணிகளுடன், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு பல்வேறு கல்வி உபகரணப் பொருட்களை வழங்க வேண்டும் என்ற புதிய நோக்கத்துடன் 2013ஆம் ஆண்டு "தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அந்நாளிலிருந்து இக்கழகம் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்குத் தேவையான இன்றியமையாத பணிகளைச் செய்து வருகிறது.

### 9.2. நோக்கங்கள்

- தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மூலம் 1 முதல் 7ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணாக்கர்களுக்கு செறிவூட்டப்பட்ட முப்பருவ பாடநூல்களையும் 8 முதல் 12ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணாக்கர்களுக்கு செறிவூட்டப்பட்ட முழு வருட பாடநூல்களையும் அச்சிடுதல்.
- உயர்கல்வி பாடத்திட்டத்தின் கீழ் பொறியியல், மருத்துவம், வேளாண்மை, சூழலியல், சட்டம், கால்நடை அறிவியல், இலக்கியம், சித்த மருத்துவம், மீன்வளம் மற்றும் உடற்கல்வி சார்ந்த உயர்கல்வி நூல்களை ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்து அச்சிட்டு வெளியிடுதல்.
- தமிழ் இலக்கியங்களை ஆங்கிலம் மற்றும் பிற தென்னிந்திய மொழிகளில் வெளியிடுதல்.
- அரிய மற்றும் பழைய தமிழ் நூல்களை மறுபதிப்பு செய்தல் மற்றும் அந்நூல்களை மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், நூல்வாசிப்பாளர்கள் ஆகியோர்களுக்கு கிடைத்தலை உறுதி செய்தல்.
- அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்குப் புத்தகப் பை, காலேந்திகள்,

போன்ற பல்வேறு கல்வி உபகரணங்களை கொள்முதல் செய்து வழங்கும் முகமையாக இக்கழகம் செயல்பட்டு வருகிறது..

### 9.3. உள்கட்டமைப்பு

இக்கழகத்தின் தலைமை அலுவலகம் சென்னை டி.பி.ஐ. வாளகத்தில் உள்ள ஈ.வி.கே. சம்பத் மாளிகையில் அமைந்துள்ளது. இக்கழகத்திற்கு மாநிலம் முழுவதும் 22 வட்டார அலுவலகங்கள் அமைந்துள்ளன.

### 9.4.பாடநூல்கள் அச்சுப்பணி

1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்குமான பாடநூல்கள் நேர்த்தியான 80 GSM தாள் (Elegant printing paper) மற்றும் லேமினேஷன் செய்யப்பட்ட 230 GSM ஆரா ஃபோல்ட் ப்ளூ போர்டு கொண்டு (Aura Fold Blue Board) இக்கழகத்தால் அச்சடிக்கப்படுகின்றன. அனைத்து பாடநூல்களும், சம்பந்தப்பட்ட பாடத்தை உள்ளடக்கிய காணொளியையும் வினா வங்கியையும் இணையதளம் மூலம் எளிதாகக் காண்பதற்கு வசதியாக விரைவுத் துலங்கல் குறியீடு (QR Code) என்ற அம்சத்தைக் கொண்டுள்ளன.

2022-23இல் அச்சிடப்பட்ட பாடநூல்கள் விவரம் பின்வருமாறு:-

| பாடநூல்களின் விவரங்கள் | அச்சடிக்கப்பட்ட பாடநூல்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | தோராய மதிப்பு (ரூபாய் கோடிகளில்) |
|---|---|---|
| அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கான பாடநூல்கள் | 351.95 | 206.00 |
| சுயநிதிப் பள்ளிகளில் 1 முதல் 12 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கான பாடநூல்கள் | 154.19 | 148.00 |
| மத்திய இடைநிலைக் கல்வி வாரியப் பள்ளிகளில் 1 முதல் 10 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கான தமிழ் மொழிப் பாடநூல்கள் | 13.34 | 9.7 |

### 9.5. பாடநூல்கள் விநியோகம்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசப் பாடநூல்கள் வழங்கப்படுகிறது. தனியார் பள்ளிகளுக்கும், பொதுமக்களுக்கும் விற்பனை பிரதிகள் இணையதள விற்பனை மூலமும் மற்றும் டி.பி.ஐ வளாகம், அண்ணா நூற்றாண்டு நூலகம், அடையாறு கிடங்கிலுள்ள விற்பனை மையங்கள் வாயிலாகவும் வழங்கப்படுகின்றன. வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களில் நிறுவப்பட்டிருக்கும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மூலமாகவும் இணையதள விற்பனையானது விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

### 9.6. பிற நூல்களை அச்சிடுதல்

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட இயக்ககம், பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், தொல்லியல் துறை, தொழில்நுட்ப கல்வி இயக்ககம், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், பெற்றோர் ஆசிரியர் கழகம், ஆதி திராவிடர் (ம) பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிக பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதலான துறைகளின் தேவையின் பொருட்டு, இக்கழகம் பல்வேறு நூல்களை

அச்சிடும் பணியையும் மேற்கொண்டு வருகின்றது. இக்கழகம் 2021-22-ஆம் ஆண்டில் மேற்காணும் துறைகளுக்காகத் தோராயமாக ரூ.12.12 கோடி மதிப்பிலான 60.17 இலட்சம் நூல்களை அச்சடித்து வழங்கியுள்ளது.

## 9.7 .அரிய நூல்களை மின்மயமாக்கி மறுபதிப்புச் செய்தல்

இக்கழகம் இதுவரை தமிழ் இணையக் கல்வி கழகம் மூலம் 875 அரிய உயர்கல்வி நூல்களை டிஜிட்டல் மயமாக்கி, 635 அரிய நூல்களை வெளியிட்டுள்ளது. ரூ.14.14 லட்சம் மதிப்பிலான அரிய புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேலும், இந்த அரிய புத்தகங்கள் அண்ணா நூற்றாண்டு நூலகம், கன்னிமாரா நூலகம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அகில இந்திய குடிமைப் பணி பயிற்சி மையம், அண்ணா மேலாண்மைக் கழகம், அண்ணா பல்கலைக்கழகம், தமிழ் இணையக் கல்வி கழகம், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் (RMRL) ஆகியவற்றுக்கு மாணவர் நலன் கருதி வழங்கப்பட்டுள்ளன. மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், இப்புத்தகங்கள் 2022 சென்னைப் புத்தகக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டன. மேலும், இப்புத்தகங்கள் அனைத்து மாவட்ட நூலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

### 9.8. புதிய முயற்சிகள்

வ.உ.சி.யின் 150-வது பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில், வ.உ.சி. எழுதிய நூல்களை தொகுத்து 'வ.உ.சி. பன்னூல் திரட்டு' என்ற தலைப்பில் ஒரு தொகுப்பு நூலும், திருக்குறள் மீதான வ.உ.சி. உரை என்ற நூலும் இக்கழகத்தால் வெளியிடப்பட்டது. இப்புத்தகங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 19.09.2021 அன்று வெளியிடப்பட்டன. இதுபோன்று, பாரதியாரின் நினைவு நூற்றாண்டை முன்னிட்டு, அவரது படைப்புகளின் ஒரு தொகுப்பான 'மனதில் உறுதி வேண்டும்' என்ற நூலை, தகவல் மற்றும் மக்கள் தொடர்புத் துறையுடன் இணைந்து இந்த ஆண்டில் இக்கழகம் வெளியிட உள்ளது. தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் 37 இலட்சம் பள்ளி மாணவர்களுக்கும் ரூ. 5 கோடி செலவில் இப்புத்தகங்கள் வழங்கப்படும். "பொருநை நாகரிகம்" என்ற நூலை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையுடன் இணைந்து இக்கழகம் வெளியிட்டுள்ளது. இந்நூலின் 10,000 பிரதிகள் தமிழிலும், 5,000 பிரதிகள் ஆங்கிலத்திலும் இவ்வாண்டில் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்கப்படுத்தவும்,

பொது அறிவையும் படைப்புத் திறனையும் வளர்த்தெடுக்கவும் பொது நூலக இயக்ககத்திற்கு 61 ஆங்கில இதழ்கள் வாங்குவதற்கு ரூ.2,00,35,181/- மற்றும் 68 தமிழ் இதழ்கள் வாங்க ரூ.1,01,82,099/- நிதியாக வழங்கியுள்ளது.

## 9.9.அறிவியல் மற்றும் இலக்கியப் புத்தகங்களின் தமிழாக்கம்

இக்கழகம் 'திசைதோறும் திராவிடம்', 'முத்தமிழ் அறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்' என்னும் இரண்டு மொழிபெயர்ப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. திசைதோறும் திராவிடம் திட்டத்தின் கீழ் 20 தமிழ் இலக்கிய நூல்கள் ஆங்கிலம் மற்றும் ஏனைய திராவிட மொழிகளில் தேசிய மற்றும் சர்வதேச வெளியீட்டாளர்களுடன் இணைந்து மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ், கீழ்காணும் ஆறு புத்தகங்கள் 45ஆவது சென்னைப் புத்தகக் கண்காட்சியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டன.

- ஆர்.பார்த்தசாரதி மொழிபெயர்த்த 'சிலப்பதிகாரம்' (பெங்குயின் ரேண்டம் ஹவுஸ்)
- ஹெப்ஷிபா ஜேசுதாசன் எழுதிய 'புத்தம் வீடு', (ரூபா பப்ளிகேஷன்ஸ்)

- தோப்பில் முகமது மீரான் அவர்கள் எழுதிய 'மீரான் கதைகள்'(ரத்னா சாகர் பிரைவேட் லிமிடெட்)
- உ.வே.சாவின் கட்டுரைகள் (நியோகி பப்ளிஷர்ஸ்)
- எஸ். ராமகிருஷ்ணன் எழுதிய 'கதா விலாசம்', (டெய்லர் & பிரான்சிஸ்)
- தலித் எழுத்தாளர்கள் எழுதிய 'இன்டிஃபியன்ஸ் அவர் ஸ்டோரீஸ்', (விடாஸ்டா பப்ளிஷிங் )

மேலும், பொன்னியின் செல்வன் (DC புக்ஸ்), திராவிட இயக்கம் (மலையாள மனோரமா) ஆகிய நூல்கள் மலையாளத்தில் மொழியாக்கம் செய்யப்படும். டாக்டர் மு. கருணாநிதி எழுதிய 'திருக்குறள் உரை' (ஐதராபாத் புக் டிரஸ்ட்), மற்றும் சுந்தர ராமசாமி எழுதிய 'ஒரு புளியமரத்தின் கதை' (ஐதராபாத் புக் டிரஸ்ட்) ஆகிய நூல்கள் தெலுங்கில் மொழிபெயர்க்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளன. பேரறிஞர் அண்ணா குறித்து தி இந்து நிறுவனம் தமிழில் வெளியிட்ட 'மாபெரும் தமிழ்க் கனவு' என்னும் நூல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு 'A Grand Tamil Dream' என்ற தலைப்பில் அவர்களுடன் இணைந்து கூட்டு வெளியீடாக கொண்டுவரப்படவுள்ளது.

பல்வேறு உயர்கல்வி சார்ந்த நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கும் நோக்கத்துடன் 'முத்தமிழ் அறிஞர்

மொழிபெயர்ப்புத் திட்டம்' என்ற திட்டத்தின் கீழ் 204 தலைப்புகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 50 தலைப்புகள் ஜூன் 2022 இலும், மேலும் 50 தலைப்புகள் ஜூன் 2023 இலும் புகழ்பெற்ற தேசிய மற்றும் சர்வதேச வெளியீட்டாளர்களுடன் கூட்டு வெளியீடுகளாக வெளியிடப்படும். இந்த திட்டத்தின் கீழ் முதலாக நூல் ராபர்ட் கால்டுவெல் ஆங்கிலத்தில் எழுதிய "The Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages" என்ற நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு "திராவிட அல்லது தென்னிந்தியக் குடும்ப மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற தலைப்பில் பா.ரா. சுப்பிரமணியன் மொழிபெயர்ப்பில் வெளியிடப்பட்டது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தோடு இணைந்த கூட்டு வெளியிடான இந்த நூலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 45ஆவது சென்னைப் புத்தகக் கண்காட்சியில் வெளியிட்டார்.

8870 உயர்கல்வி நுழைவுத் தேர்வு வினா வங்கி புத்தகங்கள் (இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல்) பியர்சன் இந்தியா பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்துடன் இணைந்து 6 தொகுதிகளாக வெளியிடப்பட்டு, ரூ.2,15,18,200/-மதிப்பில் அரசின் பயிற்சி மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 10 மாவட்டங்களில் உள்ள மாதிரிப் பள்ளிகளுக்கு **இப்புத்தகங்களின்** 2,000

படிகள் முதற்கட்டமாக வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

### 9.10.இளந்தளிர் இலக்கியத் திட்டம்

குழந்தைகளுக்கான மிகச் சிறந்த புத்தகங்கள் கிடைப்பதற்காக இக்கழகம் இளந்தளிர் இலக்கியத் திட்டத்தினை செயற்படுத்தி வருகின்றது. 22 நூல் ஆசிரியர்களிடமிருந்து, 104 கதைகள் பெறப்பட்டு மதிப்பாய்வில் உள்ளன. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் 2022-23ஆம் ஆண்டு முதல் அவை படிப்படியாக வெளியிடப்படும்.

### 9.11. கொள்முதல் பணிகள்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் மற்றும் அவர்களுடைய செயல்திறனை ஊக்குவிப்பதற்கும் சுமார் ரூ.260.02 கோடி மதிப்பில் பதினொரு கல்வி உபகரணப் பொருட்களை இந்தக் கழகம் கொள்முதல் செய்து 2022 - 23 ஆண்டில் வழங்க உள்ளது.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ள நோக்கங்களுக்கு ஏற்ப, பள்ளி மாணவர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் கல்விப் பணிகளை வழங்கி வருகின்றது.

## 10. நிதி ஒதுக்கீடு

மானியக் கோரிக்கை எண். 43, பள்ளிக் கல்வி என்ற தலைப்பில் 2022-23 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.36,895,89 கோடியாகும்.

**2022 -23 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு**

(ரூபாய் இலட்சத்தில்)

| கணக்குத் தலைப்பு | | | மாநில செலவினங்கள் | மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **வருவாய் பகுதி** | | | | | |
| 2051 | அரசுப் பணியாளர் தேர்வாணையம் | | 478.83 | - | 478.83 |
| 2059 | பொதுப் பணிகள் | | 15100.00 | - | 15100.00 |
| 2202 | **பொதுக் கல்வி** | | | | |
| | 1 | தொடக்கக் கல்வி | 1614740.56 | 230808.52 | 1845549.08 |
| | 2 | இடைநிலைக் கல்வி | 1646446.19 | 84140.20 | 1730586.39 |
| | 4 | வயது வந்தோர் கல்வி | 216.91 | 750.00 | 966.91 |
| | 5 | மொழி வளர்ச்சி | 1660.70 | | 1660.70 |
| **மொத்தம் - பொதுக் கல்வி** | | | **3263064.36** | **315698.72** | **3578763.08** |

| | | | | |
|---|---|---|---|---|
| 2204 | விளையாட்டு, இளைஞர் நலப் பணிகள் | 204.17 | 56.01 | 260.18 |
| 2205 | கலையும் பண்பாடும் | 20795.07 | - | 20795.07 |
| 2225 | ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிறப்டுத்தப்பட்டோர் நலன் | 18259.79 | - | 18259.79 |
| 2235 | சமூக பாதுகாப்பும் நலனும் | 266.00 | - | 266.00 |
| 2251 | தலைமைச் செயலகம் சமூகப் பணிகள் | 1129.84 | - | 1129.84 |
| | **நிகர மொத்த வருவாய்ப் பகுதி** | **3319298.06** | **315754.73** | **3635052.79** |
| மூலதன செலவு பகுதி | | | | |
| 4202 | மூலதன செலவு | 54135.17 | 361.25 | 54496.42 |
| **கடன் பகுதி** | | | | |
| 7610 | அரசுப் பணியாளர்களுக்கான கடன்கள் | 40.00 | - | 40.00 |
| | **நிகர மொத்தம்** | **3373473.23** | **316115.98** | **3689589.21** |
| | **மானியக் கோரிக்கை எண். *43 இன் நிகர மொத்தம்*** | | | **3689589.21** |

ஆற்றல்மிக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின்படி செயல்படும் இவ்வரசு, தரவுகளின் அடிப்படையில் கற்பித்தல்-கற்றல் பணிகளில் முழுமையான கல்விச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு உயர்தரக் கல்வியை மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் திறமையான ஆசிரியர் மற்றும் பெற்றோர் உள்ளிட்ட அனைத்து தரப்பினருடனும் இணைந்து வழங்க உறுதி கொண்டுள்ளது.

அன்பில் மகேஸ் பொய்யாமொழி
பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை 03.09.2021 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் சந்தித்து கரோனா நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்குக் காசோலை வழங்கினார்கள்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 30.12.2021 அன்று தஞ்சாவூர் சரஸ்வதி மகால் அருங்காட்சியகத்திற்கு நேரில் சென்று அங்குள்ள அரிய புத்தகங்கள் மற்றும் ஓலைச்சுவடிகள் ஆகியவற்றைப் பார்வையிட்டார்கள்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 27.10.2021 அன்று விழுப்புரம் மாவட்டம் முதலியார் குப்பத்தில் "இல்லம் தேடிக் கல்வித்" திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 03.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நூல் கட்டுனர் மற்றும் நூல் கட்டும் உதவியாளர் பணியிடங்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 14.03.2022 அன்று சுதந்திரப் போராட்ட வீரர் திரு.ஜீவானந்தம் அவர்களின் வாரிசுக்குப் பணி நியமன ஆணை வழங்கினார்கள்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 01.04.2022 அன்று மாண்புமிகு டெல்லி முதலமைச்சர் திரு.அரவிந்த் கெஜ்ரிவால் அவர்களுடன் புது டெல்லி மேற்கு வினோத் நகரில் உள்ள அரசு மாதிரிப் பள்ளியைப் பார்வையிட்டார்கள்.



03.01.2022 அன்று இல்லம் தேடிக் கல்வி  திட்டத்தின் இரண்டாம் கட்டத் தொடக்க விழாவில் சேப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களும் கலந்து கொண்டு மாணவர்களுக்கு குறிப்பேடு மற்றும் எழுது பொருட்களை வழங்கினார்கள்.




கற்போம் எழுதுவோம் இயக்கத்தின் கீழ், 01.12.2021 அன்று திருச்சியில் நடைபெற்ற சிறந்த கற்போர் மையங்களுக்கான மாநில எழுத்தறிவு விருது வழங்கும் விழாவில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு மற்றும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் கலந்துகொண்டு விருதுகளை வழங்கினார்கள்.




08.03.2022 அன்று அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் "நம் பள்ளி நம் பெருமை" பரப்புரை துவக்க விழாவில் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் பள்ளி மேம்பாட்டுத் திட்டச் செயலி, ஊடகச் செயலி, கலை நிகழ்ச்சிகள் மற்றும் விழிப்புணர்வுப்  பாடல்கள் ஆகியவற்றைத் தொடங்கி வைத்தார்கள்.





மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் அரசுப் பள்ளிப் பார்வையின்போது வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளையும் கழிப்பறைகளையும் ஆய்வு செய்தார்கள்.





மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் தலைமையில் கல்வி அலுவலர்களுக்கான மதுரை மண்டல ஆய்வுக்கூட்டம் 31.03.2022 அன்று நடைபெற்றது.

 

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் சிறப்பாகப் பணிபுரியும் முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கினார்கள்.





பள்ளி மேலாண்மைக் குழு விழிப்புணர்வு கூட்டம் 20.03.2022 அன்று அனைத்து அரசுப் பள்ளிகளிலும் நடைபெற்றது.






**இல்லம் தேடிக் கல்வி மையங்கள்**